
புரவலர் புத்தகப் பூங்காவின்

20-ஆவது வெளியீடு

# மேட்டு நிலம்

சிறுகதைகள்



மு.சடாட்சரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேட்டு நிலம்

## (சிறுகதைகள்)

மு. சடாட்சரன்

வெளியீட்டகம்:

**புரவலர் புத்தகப் பூங்கா**

25, அவ்வல் சாவியா ரோட்,

கொழும்பு-14. ஸ்ரீலங்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிவுத் தரவுகள்


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | **மேட்டு நிலம்** |
| வகை | : | சிறுகதை |
| நூலாசிரியர் | : | மு. சடாட்சரன் |
| உரிமை | : | இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர்<br>இல, 46, ஆனந்தகுமாரசுவாமி மாவத்தை,<br>கொழும்பு -07 |
| முதற்பதிப்பு | : | ஆகஸ்ட் 2009 |
| பதிப்பாசிரியர் | : | கலைஞர் கலைச்செல்வன் |
| அட்டைப்பட அமைப்பு | : | எஸ். அனூர்ஜன் |
| பக்கங்கள் | : | XII + 80 |
| அச்சிட்டோர் | : | யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்<br>48B, புளுமெண்டல் வீதி, கொழும்பு-13.<br>தொ.பே : 011 2330195. |
| வெளியீட்டாளர் | : | புரவலர் புத்தகப் பூங்கா<br>25, அவ்வல் சாவியா ரோட், கொழும்பு-14.<br>0774-161616 - 0786 367431 |
| விலை | : | ரூபா 150/= |

## BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title | : | **METTU NILAM** |
| Category | : | Short Stories |
| Author | : | M. Sadatcharan |
| Copy Rights | : | Puravalar Hassim Omar<br>46, Ananda Coomarasamy Mwt. Colombo-07 |
| First Edition | : | August 2009 |
| Publishing Editor | : | Kalaignar Kalaichelvan |
| Cover Design | : | S. Anoorjan |
| Pages | : | XII + 80 |
| Printed | : | Unie Arts (Pvt) Ltd.<br>48B, Bloemendhal Road, Colombo-13.<br>T.P : 011 2330195 |
| Publishers | : | Puravalar Puthaka Poonga<br>25, Awwal Zavia Road, Colombo - 14<br>Mobile : 077 4161616, 078 6367431 |
| Price | : | 150/- |
| **ISBN** | : | **978-955-095-03-9** |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல் ....

எனது கல்விக்காகவும், நல்வாழ்வுக்காகவும்
பல தியாகங்களைச் செய்த எனது தெய்வங்களான
பெரியப்பாவும் பெரியம்மாவுமாகிய
அமரர்கள் கந்தப்பர் சின்னத்தம்பி
திருமதி மாரிமுத்து சின்னத்தம்பி
ஆகிய இருவருக்கும்......

சமர்ப்பணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிவுகள்

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும்
ஒரு சாதனையாளன் உறங்கிக்கொண்டோ,
விழித்துக்கொண்டோதான் இருக்கிறான்.
ஆற்றல்கள் அரங்கேற வேண்டுமானால்
அடையாளங்கள் பதிவு செய்யப்படல் வேண்டும்.
ஒரு சாதனையாளனுக்கு
மகுடம் சூடுவது பதிவுகள் தான்!

* * *

புரவலர் ஹாசிம் உமர் அவர்களின்
"மாதம் ஒரு நூல் –
இலவச வெளியீட்டுத் திட்டம்"
வேர்களுக்கு விலாசம் தரும் ஒரு செயற்கரிய செயற்பாடு!
புரவலர் புத்தகப் பூங்காவின்
ஒவ்வொரு வெளியீடும்
ஒரு சாதனையாளனை – ஒரு படைப்பாளியை
பதிவு செய்து கொண்டிருக்கிறது.
இது நம்மூர் இலக்கியப் புரவலரின்
விழுமிய எண்ணத்தின் விடிவுகள்!

* * *

இரண்டு ஆண்டுகளில் இருபது நூல்கள்
பூங்காவில் பூத்துள்ளது குறிஞ்சி மலரைப் போன்று!
எழுத்தாளர் – கவிஞர் மு. சடாட்சரன் எழுதியுள்ள
"மேட்டு நிலம்" எனும் இச்சிறுகதைத் தொகுதி
பூங்காவின் இருபதாவது வெளியீடாகும்.
சிறந்த ஒரு கவிஞரால் சிறப்பான சிறுகதைகளையும்
படைக்க முடியும் என நிரூபித்துள்ளார் திரு. மு. சடாட்சரன்
இலக்கியப் பரப்பில் தனிமுத்திரை பதித்துவரும் எங்கள் நிறுவனத்திலிருந்து
தொடர்ந்து பயனுள்ள அறுவடைகளை
எதிர்பார்க்கலாம்!

– பதிப்பகத்தார்

*புரவலர் புத்தகப் பூங்கா*
*25, அவ்வல் சாவியா ரோட்*
*கொழும்பு – 14.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகான பிம்பங்கள் அழியாத ஓவியங்கள்



நவீன இலக்கியத்தில் கவிதை, சிறுகதை ஆகிய துறைகள் இரண்டும் மிக முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன. தற்கால மின்வேக உலகில் விரைவில் வாசித்து ரசிக்கக் கூடியதாக இவ்விரு படைப்புகளும் இருப்பதால் எல்லாராலும் வரவேற்கப்பட்டும் பேசப்பட்டும் வருகின்றன. இவை மிக நுட்பமான படைப்பாற்றலோடு சம்பந்தப்பட்டவை. மென் உணர்வைத் துல்லியமாகப் படம் பிடிக்கும் மொழியாற்றல் கைவந்தவர்களே கவிதையிலும், சிறுகதையிலும் சாதனைகள் புரிந்திருக்கிறார்கள். பாரதி, புதுமைப்பித்தன் இருவரையும் இதற்கு முன்உதாரணமாகக் கொள்ளலாம்.

தமிழ்ச் சிறுகதையின் மூலவர்கள் பலர் இருந்தாலும், புதுமைப்பித்தனும், கு.ப.ராவும் தான் எமது சிறுகதை இலக்கியத்துக்கு புதிய பரிமாணத்தையும், செழுமையையும் நிலை நிறுத்தி வளம் சேர்த்த பெருமைக்குரியவர்கள். அவ்விருவரின் படைப்புகளைப் புரிந்து கொள்ளாமல் எவரும் சிறுகதையில் பெரும் சாதனைகள் புரிவது சாத்தியமற்றதாகும்.

இவர்களுக்குப்பின் தமிழ்நாட்டில் இருபதுக்குமேற்பட்ட எழுத்தாளர்கள் நல்ல சிறுகதைகளைத் தந்திருக்கிறார்கள். அதுபோல் நமது நாட்டிலும் அதே அளவுக்கு எமது எழுத்தாளர்கள் சிறந்த பல சிறு சிறுகதைகளைப் படைத்து நமது மண்ணுக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள். தற்போதும் புதிய பரம்பரையினர் சமகால வாழ்வியலைச் சிறுகதைகளாகப் படைத்திருக் கிறார்கள். அவைகளில் குறிப்பிடத்தக்கவை நின்று நிலைக்கும் உயர் படைப்புகளாக மிளிர்கின்றன.

நான் அறுபத்தேழு தொடக்கம் தொண்ணூற்றொன்று வரை பிரபல பத்திரிகைகளில் எழுதிய பதினைந்துக்கு மேற்பட்ட சிறுகதைகளில் தெரிவு செய்த பதினொரு கதைகள் இத்தொகுதியில் அடங்கியுள்ளன. புரவலர் புத்தகப் பூங்கா வெளியீட்டுப் பணியகத்தினர் 'மேட்டுநிலம்' என்னும் எனது சிறுகதைத் தொகுதியை மனமுவந்து சிறப்பாக வெளியிட்டு பேருதவி புரிந்திருக்கிறார்கள். முதலில் புரவலர் புத்தகப் பூங்காவின் ஸ்தாபகத் தலைவர் அல்ஹாஜ் புரவலர் ஹாசிம் உமர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீண்டகாலமாகக் கல்முனையிலிருந்து தரமான கலை இலக்கியச் சஞ்சிகை ஒன்றை வெளியிட வேண்டுமென நீலாவணன் தலைமையில் இயங்கிய எழுத்தாளர்கள் அறுபதுகளில் கனவு கண்டார்கள். அக்கனவு 67ல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலித்தது. கல்முனைத் தமிழ் இலக்கியக் கழகம் அமைக்கப்பட்டது. அக்கழகத்தால் 'பாடும்மீன்' என்னும் இலக்கியச் சஞ்சிகையை வெளியிடத் தீர்மானித்தோம். தமிழ் இலக்கியக் கழகத் தலைவர் சண்முகம் சிவலிங்கம். செயலாளர் நான். பத்திரிகை ஆசிரியர் நீலாவணன். பன்னிரண்டுபேர் அங்கத்தவர்கள் செயற்குழுவில் ஏழுபேர். அனைவரும் உற்சாகமாகச் செயற்பட்டோம்.

எங்கள் பத்திரிகைக்கு விடயதானங்களைச் சேகரிக்கும் போது கவிதைகளும் கட்டுரைகளும் போதியளவு சேர்ந்தன. சிறுகதைகள் மிகக் குறைவாகவே இருந்தன. இதற்காகப் பத்திரிகை ஆசிரியர் மிகவும் கவலைப்பட்டார். அடிக்கடி எங்களோடு அது பற்றிக் குறிப்பிட்டார். அப்போது எனக்கொரு நம்பிக்கை பிறந்தது. நான் ஒரு சிறுகதை எழுதுகிறேன் என்று கூறினேன். அதைக் கேட்டதும் அதுதான் சரி என்றார். நீலாவணனும் ஒரு கதை எழுதினார்.

எனது ஆசிரிய சேவையில் முதல் நியமனம் 64ல் இரத்தினபுரி மாவட்டத்தில் கிடைத்தது. மூன்று வருடங்கள் தொடர்ந்து பறக்கடுவையில் ஆசிரியராகக் கடமை புரிந்தேன். அக்காலத்தில் நான் பெற்ற அனுபவங்களை அச் சூழலின் வாழ்வியலை – எனது மனக் கண்ணிலே நீங்கா இடம் பிடித்த சித்திரங்களைப் 'பிடிப்பு' என்னும் முதல் சிறுகதையாகப் படைத்தேன். அதை வாசித்த நீலாவணன், மகிழ்ச்சியோடு 'பாடும் மீன்' முதல் இதழில் வெளியிட்டார். அக்கதையைப் படித்த பலர் என்னைப் பாராட்டினார்கள். நல்ல கதை என்றார்கள். மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்.

அதன் பிறகு நல்ல சிறுகதைகள் எழுத வேண்டும் என்னும் ஆர்வம் அதிகரித்தது. சிறந்த சிறுகதைச் சிற்பிகளின் ஆக்கங்களைத் தேடி வாங்கி வாசித்து மகிழும் வழக்கம் வளர்ந்தது. எனது சிறுகதைகளும் பிரபல பத்திரிகைகளில் வெளிவரத் தொடங்கின.

இத்தொகுதியில் உள்ள எனது கதைகள் ஆகாயப் பந்தல்கள் அல்ல. எமது மண்ணிலே வாழும் மாந்தர்களின் கதைகள். நான் அவ்வப்போது வாழ்ந்த பிரதேசத்தின் – சேவையாற்றிய சூழலில் நான் கண்டதையும் – அனுபவித்ததையும் – என்னைத் தாக்கியதையும் – வாழ்க்கை எனக்குச் சொன்னவற்றையும் மெருகேற்றி அழகான பிம்பங்களாக – அழியாத ஓவியங்களாக ஆக்கி இருக்கிறேன். வாசகர்களதும், எழுத்தாளர்களதும் ஆதரவும் கருத்துக்களும் மேலும் என்னை ஊக்குவிக்கும் என்று நம்புகிறேன்.

கலைகளுக்கு முற்றுமுழுதான வரைவிலக்கணங்கள் கூறி – முற்றுப் புள்ளி வைத்து முடிவுகட்ட முடியாது. அவை காலமாற்றங்களுக்குத்தக்கதாக நெகிழ்ந்து மாற்றமடைந்து வளர்ந்து ஈர்க்கவே செய்யும். விளக்கங்களும் வியாக்கியானங்களும் கூறக் கூற அவை விரிவடைந்து வியாபித்துக் கொண்டே செல்லும். அவைகள் கலைகளின் வளர்ச்சிப் படிகளாகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேர்களும் விழுதுகளுமாகவும், எமது இலக்கிய வளர்ச்சிக்குப் புத்துயிர் கொடுக்க வேண்டும்.

நல்ல சிறுகதைகள் மனித மனங்களைத் தொட்டு சிந்திக்கத் தூண்டுவதோடு, திரும்பத் திரும்பப் படிக்கவும், நினைக்கவும், கருத்துப் பரிமாற்றம் செய்யவும் உந்துதல் கொடுக்கும். அடிமனப் பதிவுகளை வெளியிடும் சிறு நிகழ்வால் கிளர்ந்தெழும் மன உணர்வின் சித்தரிப்பாகவும் அமையும். அவைகளே காலத்தை வென்று நிலைக்கும் இலக்கியமாகும்.

என்னுடைய முதல் புத்தகமாக இச்சிறுகதைத் தொகுதி வெளிவருகிறது. நான் நீண்டகாலமாகப் புத்தகம் வெளியிடவில்லை என்னும் குறை இருந்து வந்தது. புரவலர் புத்தகப் பூங்கா நூல் வெளியீட்டுப் பணியகத்தின் பேருதவியால் இப்போது அக்குறை நீங்கி விடுகின்றது.

பொதுவாகப் புரவலர் புத்தகப் பூங்காவின் ஸ்தாபகர் அல்ஹாஜ் ஹாசிம் உமர் அவர்களைத் தமிழுலகம் நன்கு அறியும். நமது எழுத்தாளர்களை ஊக்குவித்து தமிழ் இலக்கியம் வளரப் பேருதவி புரிந்து வரும் வள்ளலான அவரை மனதார வாழ்த்துகின்றேன்.

எனது மேட்டுநிலம் சிறுகதைத் தொகுதியை அழகான முறையில் இலவசமாக அச்சிட்டு வெளியிட்டு என்னை ஊக்குவித்துள்ள புரவலர் புத்தகப் பூங்கா நிருவாகக் குழுவினர் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

எனக்கு நல்ல பல ஆலோசனைகளைக் கூறி சிறந்த ஒரு அணிந்துரையும், அறிமுகக் குறிப்பும் எழுதித்தந்து உறுதுணை புரிந்த கலாநிதி செ. யோகராசா அவர்களுக்கும், இத்தொகுதி வெளிவர ஆர்வம் காட்டி உற்சாகம் தந்த கலைஞர் கலைச்செல்வன், திரு. அந்தனிஜீவா, கவிஞர் செங்கதிரோன் ஆகியோருக்கும். இத்தொகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ள கதைகளை அவ்வப்போது பிரசுரித்த பத்திரிகை ஆசிரியர்களுக்கும், பல சிரமங்களுக்கு மத்தியில் எனது எழுத்துப் பணிக்குத் துணை புரிந்து வருகின்ற மனைவி மக்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகுக.

வாசகர்களின் ஆதரவே எழுத்தாளர்களை வாழவைக்கும் உயிர்ச்சத்து. அதுவே தமிழ் இலக்கியம் வளரவும் வாழவும் துணைபுரியும்.

நன்றி

- மு. சடாட்சரன்
*நூலாசிரியர்*

*69-D, பிரதான வீதி,*
*பெரிய நீலாவணை – 01,*
*கல்முனை.*
067.2221784



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன இலக்கிய நியதி!

இச்சிறுகதைத் தொகுப்பு பற்றிய எனது மனப்பதிவுகள். சிலவற்றை எழுத முனைகின்ற இவ்வேளையில், நிறைவான மனத்திருப்தியும், நிறைந்த மனமகிழ்ச்சியும் எனக்குள் ஊற்றெடுக்கின்றன. அதற்குச் சில காரணங்கள் இல்லாமல் இல்லை.

அறுபதுகளளவிலே, மட்டக்களப்புப் பிரதேசத்திலே எழுதத் தொடங்கிய மூத்ததலைமுறை சார்ந்த கணிசமான படைப்பாளர்கள் இன்னமும் தமது ஆக்கங்களை நூலுருவில் கண்டுகொள்ளவியலாத ஆரோக்கியமற்ற எழுத்துலகச் சூழலில் உள்ளனர். அத்தகைய பட்டியலுள் முக்கியமான ஒருவராகத் திகழ்கின்ற மு. சடாட்சரனின் சிறுகதைகள் இப்போதாவது வெளி வருகின்றனவென்பது அத்தகைய காரணங்களுள் தலையாயது.

கவிஞராகவே பலராலும் அறியப்பட்ட (அன்னாரது கவிதைகளும் அஞ்ஞாதவாசம் மேற்கொள்கின்றன என்பது வேறு விடயம்) சடாட்சரன் கவிஞர் மட்டுமன்றி எழுத்தாளருமாக இருந்து வருகிறார் என்பதனை இத்தொகுப்பு ஊடாகவே வாசகர் பலரும் அறிய முடிகின்றது என்பது மற்றொரு காரணமாகிறது.

அவற்றைவிட முக்கியமானது அவர் தமது சமகால எழுத்தாளர்களிட மிருந்து வேறுபட்ட தனித்துவமான சிறுகதைகளை எழுதி வந்திருப்பவ ரென்பதை இத்தொகுப்பு இனங்காட்டுவது உண்மை. அவர் காலத்தில் எழுதியோர் பலரும் மட்டக்களப்புப் பிரதேசம் சார்ந்த சிறுகதைகளையே பெருமளவு எழுதி வந்துள்ளனர். அவை; வறுமை, கிராமியம், தொழிலாளர் வாழ்வு, குடும்பம், இலட்சியம், காதல் எனக் குறிப்பிட்ட சில விடயங்களையே சுற்றிப் படர்ந்திருந்தன. சில வேளைகளில் மண்வாசனை பரப்பின. வர்க்கப் பார்வையும் இடம்பெற்றதுண்டு. ஆயின் இத்தொகுப்பிலுள்ள பெரும்பாலான சிறுகதைகள் அத்தகைய செல்நெறி களிலிருந்து விலகி, புதிய களத்தை அறிமுகஞ் செய்கின்றன, புதிய அனுபவங்களை ஏற்படுத்துகின்றன; புதிய செய்திகளை வழங்குகின்றன.

'மேட்டுநிலம்', 'பச்சமண்' ஆகிய இரு சிறுகதைகளும் இவ்வெழுத் தாளருக்கு நன்கு பரிச்சயமான பாடசாலை உலகத்திற்குரியவை. ஆயின் எமது எதிர்பார்ப்பிற்கு மாறான விடயங்கள் பற்றிப் பேசுபவை. அவற்றுள் 'மேட்டுநிலம்' கிராமத்துப் பாடசாலையொன்றிற்கு ஆசையோடு இடம்மாறி வந்த ஆசிரியர் ஒருவரை முதன்மைப்படுத்தி, ஈழத்தில் எங்கோ ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குக்கிராமத்திலிருந்த ஒரு பாடசாலையையும் அதனைச் சூழவுள்ள மக்கள் சிலரையும் தத்ரூபமாகப் படம் பிடித்துக்காட்டுகிறது. ஈழத்தில் தமிழ்க் கிராமங்களில் இப்படியும் பாடசாலைகளிருந்தனவா என்று வியப்பை ஏற்படுத்தும் வண்ணம் ஒரு காலகட்டத்தின் உன்னதமான பதிவாகியும் விடுகின்றது. தேர்ந்த வாசகரொருவர் இதனூடாக கு. அழகிரி சாமியின் சிறுகதையொன்றை வாசித்த பரவசத்திற்குட்படுவது தவிர்க்க வியலாதது.

மற்றொரு சிறுகதையான 'பச்சமண்' குழந்தை உலகம் சார்ந்தது. குழந்தைகளை முதன்மைப் பாத்திரமாக்கி சிறுகதை எழுதுவது கடினமானது. ஏனெனில் உளவியல் அறிவும் பேச்சுமொழி ஆட்சியும் அதற்குத் தேவைப்படுகின்றன. இச்சிறுகதை அவ்விதங்களில் வெற்றி பெற்றுள்ள தென்றே கூறவேண்டும்.

'பிடிப்பு' முற்றிலும் வேறுபட்ட புதிய அனுபவத்திற்கு அழைத்துச் செல்கிறது. மாட்டு வண்டிக்காரரை மையப்படுத்தி எழுந்துள்ள சிறுகதைகள் தமிழிற்குறைவு. ஈழத்து தமிழ் எழுத்துலகிற்குப் இது புதிது. இவ்விதத்தில் மார்ட்டின் விக்கிரமசிங்காவின் 'அடிமைகள்' கதையை நினைவு படுத்துகிறது. அதே வேளையில் மாட்டுவண்டிக்காரன் என்ற பாத்திரத்தின் குணாதிசயங்கள் உளவியல் நோக்கிலும் உலகியல் நோக்கிலும் அணுகப்படுவதனூடாக, இச்சிறுகதை பாராட்டிற்குரிய படைப்பாகி விடுகின்றது.

'ஒற்றைப் பனை' அன்றாடக் குடும்ப வாழ்வினைக் களமாகக் கொண்டது.

'கடல் பொய்க்கிறது' புதியதொரு கிராமிய பெண்ணை அறிமுகஞ் செய்கிறது. வாசகருக்கு வியப்பூட்டி அதிர்ச்சியுமளிக்கிறாள் இச்சிறுகதையில் உலாவும் கிராமத்துச் சௌந்தரி..

'சாதாரண சம்பவங்கள் கூட தத்துவத்தை ஆதாரமாகக் கொண்டு அமைந்து கிடத்தல் அதிசயந்தான்' என்ற இ. முருகையனின் வரிகளுக்குச் சான்று தருவதுபோல் 'விழிப்பு' சிறுகதை வெளிப்படுகின்றது. நாம் அவதானிக்கத் தவறிய வாழ்வியல் உண்மையொன்றையும் தரிசிக்க வைக்கிறது.

எமது சிறுகதை வரலாற்றிலும், உலக வழக்கிலும் நாம் அடிக்கடி கண்டு கேட்டு வருகின்ற காதல் பற்றிய கதை தான் 'அழியா ஓவியம்' கதாசிரியரது எழுத்தாண்மை காரணமாக சலிப்பேற்படா வண்ணம் அது உருவாகி யுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அழைப்பு' ஒன்றிற்கு மேற்பட்ட விடயங்களைச் சொல்லமுற்படுவது போல் தெரிகிறது.

இவரது சிறுகதைகள் சில நிதானமான வாசிப்புற்குரியன என்றே கூறத் தோன்றுகிறது. இவற்றுள்ளும் குறிப்பாக 'வெளிச்சம்' 'சுமைகள்' என்பனவற்றைப் புரிந்து கொள்வதற்கு அது அவசியமென்றே படுகின்றது. இவ்விரு சிறுகதைகளோடு 'அழைப்பு' 'மாற்றம்' முதலானவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம்.

ஆக, இதுவரை கூறியவற்றை நோக்கும்போது இத்தொகுப்பிலுள்ள சிறுகதைகள் வெவ்வேறுப்பட்டனவாக அமைந்து புதிய அனுபவ உலகத்திற்கு எம்மை அழைத்துச் செல்கின்றமை என்பது நன்கு புலப்படுமென்றே கருதுகின்றேன்.

அத்துடன் இச்சிறுகதைகளின் எடுத்துரைப்பு முறைகளும் கவனத்திற் குரியதுதான். குறிப்பாக இவரது விவரிப்புத்திறன் அலாதியானது என்பதற்கு இருவேறு உதாரணப் பகுதிகளை சான்றாகத் தரமுடியும்.

உ-ம் :

"தெருக்களும் தூங்கி வடியத் தொடங்கிற்று
கடைகளும் குறட்டை விட ஆயத்தம்
ஒன்றிரண்டு பலகைகள் மாத்திரம் திறந்து
அரைக்கண் தூக்கம் போடுகிறது..." – 'விழிப்பு'

தேவரின் காணிக்குள் ஓங்கி நிற்கிறது
ஒற்றைப் பனை.
நல்ல கம்பீரம். முன்பு சோடியாகவே நின்றன.

புதிய – புதுமையான உவமைகள், செட்டான வார்த்தைப் பிரயோகங்கள் என்பனவும் இவரது சிறுகதைகளில் ஆங்காங்கே தலைநீட்டி வாசகரை ஈர்த்துக் கொள்வதும் குறிப்பிடத்தக்கது.

இவ்விடத்தில் சிறுகதைகளுக்கு இடப்பட்டுள்ள தலைப்புகள் தொடர்பாகவும் குறிப்பிட்டாக வேண்டியுள்ளது. அறுபதுகளில் ஜெயகாந்தன் படைப்புகளுக்கு நீண்ட தலைப்புகளை இட்ட வேளையில், அதற்குப் போட்டியாக எஸ்.பொ. போன்றோர் சிறிய தலைப்புக்களை (உ+ம் – வீ.) தமது படைப்புகளுக்கு வைத்ததனாலோ என்னவோ இக்கால ஈழத்து எழுத்தாளர் பலரும் சிறுதலைப்புகளைத் தமது படைப்புகளுக்கு இடலாயினர். இவ்வெழுத்தாளரும் தமது படைப்புகளுக்கு ஒரு சொல்லிலான அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்றொடரிலான தலைப்புக்களை இட்டது மட்டுமன்றி அவற்றுள் சில குறியீட்டுப் பாங்கினவாகவும், வேறுசில இருபொருள் தருவனவாகவும், இன்னுஞ் சில ஆழ்ந்த அர்த்தம் கொண்டனவாக அமைந்திருப்பதும் பாராட்டிற்குரியதாகிறது.

இன்றைய இளந்தலைமுறை வாசகர்கள் சிலருக்கு மேற்கூறிய எடுத்துரைப்பு முறைச் சிறப்புக்கள் சுவைதரக் கூடுமாயினும் இத்தொகுப்புச் சிறுகதைகளின் உள்ளடக்கங்கள் பழமைக்கோலங் கொண்டனவாய் அமையக்கூடும். அவ்வாறாயின் அது இவ் எழுத்தாளரது, ஆற்றல் ஆளுமை சார்ந்த தொன்றன்று. குறுகிய காலப் பகுதிக்குள் சிறுகதைப் போக்குகள் விரைந்து மாறிக் கொண்டே போகும். அவ்வக்காலச் சூழலுக்கேற்பவும், உலகச் சிறுகதை மாற்றங்களுக்கேற்பவும் மாறுதல்களைச் சந்திப்பதே நவீன இலக்கிய நியதியாக உள்ளது என்பதே உண்மையாம். இவற்றை மனங்கொண்டு இத்தொகுப்பினை அணுகும் போதுதான் ஈழத்துச் சிறுகதை எழுத்தாளர் வரிசையில் இவ் எழுத்தாளருக்கும் முக்கியமானதொரு இடமுண்டு என்பது வெளிப்படும் என்று நம்புகிறேன்.

ஆற்றல்களை அடையாளப்படுத்தும் புரவலர் புத்தகப் பூங்காவின் சீரிய பணியால் இலக்கிய உலகம் வாழ்த்துக்களுடன் சிறப்புப் பெறும் என்பது திண்ணம்.

- கலாநிதி செ. யோகராசா

*மொழித்துறை,*
*கிழக்குப் பல்கலைக் கழகம்,*
*செங்கலடி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே... உள்ளவை

பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | அழியாத ஓவியம் | 1 |
| 2. | பிடிப்பு | 7 |
| 3. | கடல் பொய்க்கிறது | 15 |
| 4. | பச்சமண் | 23 |
| 5. | மேட்டு நிலம் | 30 |
| 6. | அழைப்பு | 37 |
| 7. | மாற்றம் | 44 |
| 8. | சுமை | 50 |
| 9. | ஒற்றைப்பனை | 55 |
| 10. | விழிப்பு | 64 |
| 11. | வெளிச்சம் | 70 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

# அழியாத ஓவியம்

விஜியின் நினைவுகள் அவன் மனதில் தொலையாத இருப்புகளாகி விட்டன.

பதினைந்து ஆண்டுகள் போனாலும் பசுமைத்தளிர்விட்டு தனிக்காட்டு ராசாவாக அது அரசோச்சும் தொடர்ந்து.

அவளின் எழில் வதனம் வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டியின் முழுத்திரையிலும் வியாபித்து முறுவலிப்பது போல் சுதாவின் மனதில் பளிச்சிடும். சமிக்ஞைத் தூணில் சிவப்பு விளக்கைக் கண்டதும் திடீரென்று நின்று கொண்டு பெருமூச்சு விடுமே புகைவண்டி அதுபோல செயலிழந்து அவளுடைய நினைவுகளிலே மூழ்கிப் போய் நிற்பான் அவன்.

சொற்ப வேளையில் பச்சைவிளக்கு ஒளிரும். மீண்டும் புகைவண்டி ஓடத் தொடங்கி விடும்.

பட்டப் படிப்பென்று கொழும்பில் சில வருடங்கள் கடத்தியவனைக் கடிதத்திலும் நேரிலும் தாய் நச்சரித்துக் கொண்டிருந்தாள். அவனது உயர்ச்சிக்கெல்லாம் தாய்தானே காரணம். தாயின் கட்டளையை மீறமுடியவில்லை. சொந்த ஊர்ப் பள்ளிக் கூடமொன்றுக்கு மாற்றம் எடுத்துக்கொண்டு வந்து சேர்ந்தான்.

இப்போது இந்தப் பகுதிப் பாடசாலைகளெல்லாம் பம்பத்தின் மும்முரத்துடன் இயங்குகின்றன. உயரம் பாய்கிறார்கள், நீளம் பாய்கிறார்கள். மைதானத்தைச் சுற்றிச் சுற்றி நடுவெயிலில் ஓடுகிறார்கள். நடக்கப் போகும் பாடசாலைகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டி எல்லோரையும் ஆட்டிப் படைக்கத் தொடங்கிவிட்டது.

ஆடுகளை மேய்த்துக் கொண்டுவரும் மேய்ப்பனைப் போல விஜியும் தன் பள்ளிக் கூடத்துப் பிள்ளைகளை மேய்த்துக் கொண்டு அந்த மைதானத்துக்கு வருவாள் என்ற செய்தி அவன் மனதின் ஒரு ரகசிய மூலையில் பதிவாகிப் போய் இருந்தது.

இன்னும் இரு வாரங்களில் கொத்தணி விளையாட்டுப் போட்டி நடைபெறும். அது அவனை உலுப்பி விட்டது. விஜியைத் தரிசிக்கப் போகிறேன். அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையும் இதில் பங்கு கொள்ளும். மனதில் ஆழப் பதிவாகிப் போன பழைய சம்பவங்களை அவன் அடிக்கடி நினைவு படுத்திக் கொண்டான்.

அவன் தன் அறையை விட்டு வெளியே வந்தான். தெளிவில்லாத வானம். திட்டு திட்டான கற்றைகள். குருதி படிந்த வண்ணச் சீலைக்குவியல்கள். வானில் ஊர்ந்து செல்வது போல் மேகங்கள். உசும்பாத காற்று – போறணைக்குள் போட்டெடுக்கின்ற பாணை – அவன் நினைத்துக் கொண்டான். நீண்டநாள் நோயுற்றவன் போல் நிற்க முடியாமல் தள்ளாடினான். திரும்பவும் அறைக்குள் புகுந்து அமர்ந்து கொண்டான்.

அவளின் நினைவில் இருந்து மீழ்வது தாளப்போன தோணியை ஆற்றினுள் அமிழ விடாமல் காப்பதைப் போன்றது தான். தோணியை உயர்த்தி நீரைக் கொஞ்சம் கொஞ்சமாக வெளியேற்ற வேண்டும். நீரை முற்றாக எடுப்பதும் இப்போதைக்கு முடிந்த காரியமாகப் படவில்லை.

பக்கத்து வீட்டு வானொலிப் பெட்டி மூலம் வந்த அந்த நாட்டியப்பாடல் அவன் நெஞ்சைத் தாக்கியது. அப்பாடலை இச்சந்தர்ப்பத்தில், கேட்கவரும் என்று அவன் எண்ணி இருக்கவும் இல்லை. வெறித்துப்போய்ச் சிலையாய் இருந்தவனின் செவிகள் மட்டும் கூர்மையாயின.

அப்பாடல் அவன் அடிமனதைக் தொட்டுத் துழாவிப் பிழிந்து போட்டது. கரைவலை மடிக்குள் அகப்பட்டு கரையேறிக் கிடந்து துடிக்கும் மீன்போல் அவன் இதயம் அடித்துக் கொண்டிருந்தது. பெருமூச்சில் அனல் வாடை வீசிற்று.

அந்த நாளில் இவன் படிப்பித்த கல்லூரிக் கலைவிழாவிலே விஜி பழக்கி மேடை ஏற்றிய நாட்டியப் பாடல் மீண்டும் அவனுக்கு நினைவில்வந்தது. அப்பாடலில் ஆயிரம் வினாக்களை அவனை நோக்கி அவள் தொடுத்தது போலல்லவா இருந்தன.

எட்டாம் வகுப்பு ஒல்லியான சுசீலா அப்பாடலுக்குக் காட்டிய அபிநயமும், மிண்ணிய குமிண்சிரிப்பும், துள்ளிச் சுழன்று தாளம் பிசகாது தூக்கிவைத்த காலடிகளும், கண் அசைவும் முத்திரைகளும், கலீர், கலீர் என்ற சதங்கை நாதமும் அவனுக்குப் பெரும் ஆனந்தத்தையே அள்ளிக் கொட்டிற்று.

அவன் மனக் கண்ணில் விஜிதான் ஆடினாள்.

அந்த நடனந்தான் சுசீலாவுக்குப் பெரிய செல்வாக்கொன்றையும் பின்பு தேடிக் கொடுத்தது. அதற்கெல்லாம் முழுமுதற்காரணம் விஜியே தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதாவும் விஜியும் ஒன்றாகப் படிப்பித்தவர்கள். அது அவன் வாழ்விலே ஒரு பொற்காலம். அந்தக் காலத்தைத் தொலைத்துவிட்டு அந்தப் பாடலைக் கேட்ட வண்ணம் சொர சொரத்த தன்தாடியை உள்ளங்கையால் தடவிக் கொண்டிருக்கிறான் சுதா.

விஜியைத் தரிசித்த முதலாவது தினம் அவனுக்கு இன்னும் ஞாபகமாய் உள்ளது. றோஸ் வண்ணச் சேலையும் சிவப்பு ரவிக்கையும் அவள் அணிந்து வந்திருந்தாள். அவள் முகத்தில் தவழ்ந்த மெல்லிய புன்னகை பல நூற்றாண்டுகள் வாழும் வல்லமை பெற்றது.

அவனுடைய கல்லூரி அதிபரின் பிரியா விடையின் போது சுதாதான். வாழ்த்துப்பா இயற்றினான். அதை விஜிதான் தன்முத்து முத்தான கையெழுத்தால் வாழ்த்து மடலிலே பொறித்தாள். அதைப் பிறேம் போட்ட கடைக்காரன் கூட அக்கையெழுத்திலே சொக்கிப் போய் நின்றது இன்னும் ஞாபகம். விஜி கரும்பலகையில் பரப்பிவிடும் எழுத்துக்கள் அவன் கண்களுக்குள்ளே ஓடி வருகின்றன. அவள் விழிகளைப் போல பெரிய சுழிகள். அவளின் நெற்றியிலிருக்கும் சற்றும் நெளியாத வட்டமான சிவப்புப் பொட்டுப் போல் மெய் எழுத்தின் மேல் இருக்கும் புள்ளிகள்.

ஒருநாள் ஓய்வாக இருக்கும் போது "உங்க கையெழுத்து மிக அழகாய் இருக்கு. அதில எனக்கு நல்ல விருப்பம்" என்றான் சுதா.

"தலை எழுத்துத்தான் சரியில்லை!" என்றாள் அவள்.

"அப்படிச் சொல்லாதீங்க உங்க தலை எழுத்தும் பிரமாதமாகத் தான் அமையும். இருந்து பாருங்களேன்!" வெடுக்கெனக் கூறினான் அவன்.

அதைக் கேட்டதும் அவள் முகம் மலரக் கெக்களம் கொட்டிச் சிரித்தாள். கன்னத்தில் விழுந்த குழி அவளின் அழகை மேலும் பிரகாசப்படுத்தியது.

மற்றொருநாள் வகுப்பறை மேசையில் புத்தகத்தின் மேல் ஒற்றைச் சிவப்பு றோசாவை வைத்தபடி தன்வேலையில் ஈடுபட்டாள் விஜி. எதிர் வகுப்பில் இருந்து அதைப் பார்த்துக்கொண்டே சுதா பாடத்தைத் தொடங்கினான். அவள் இடை இடையே றோசாவைக் கையிலெடுத்து ஆசையோடு முகர்ந்து கொண்டாள். தன் கன்னத்தை றோசாவால் தடவிப் பார்த்தாள். இருறோசாக்களில் எது நிஜம் எனத்தத்தளித்தான். றோசாவுடனான அவளுடைய இஸ்பரிசம் இவனைப் புல்லரிக்கச் செய்தது.

அவனுடைய கல்லூரியில் கலை விழா ஒன்றை ஏற்பாடு செய்வதெனத் தீர்மானமாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைவிழாவுக்கு விஜி நடனம் பழக்கினாள். அவன் நாடகம் பழக்கினான். கும்மி, கோலாட்டம், கூத்து என்றெல்லாம் ஏனையோர் தயார் செய்தனர். விஜியின் நடனத்துக்கே மிகவும் மதிப்புக்கிட்டியது.

அரங்கேற்றத்துக்கு முதல்நாள் "உங்கட நாட்டியத்துக்கு நான் என்ன செய்ய வேணும்?" அவன் விஜியைக் கேட்டான்.

"ஆ... அது உங்கட இதயம் சொல்லும்!"

அவள் கூறியதில் அர்த்தப் பொலிவு கனதியாக இருப்பதாக அவன் உணர்ந்தான்.

கலை விழாவின் சூடு ஆறமுன்னர் மாவட்டப் பொருட்காட்சியும் ஓடிவந்தது விட்டது.

விஜி ஒரு கெமரா செய்தாள். அவன் ஒரு கோயில் செய்தான். அவளுடைய கெமராவில் சுதா கொடுத்த புகைப்படக் பிலிமைப் போட்டுப் பல படங்கள் பிடித்தாள். அவற்றைக் கழுவிப் பார்த்தபோது ஒரே ஒரு படம் மாத்திரமே தேறிவந்தது. அந்தப் படம் சுதாவின் மேல் அரைத் தோற்றம். மற்றவை எல்லாம் கறுப்படித்துப் போய் இருந்தன.

"பார்த்தீர்களா? என்னுடைய கெமரா உங்களை மட்டுமே பிடித்திருக்கு. மற்றவர்களையெல்லாம் கைகழுவிப் போட்டுது. அது ஏனோ தெரியவில்லை!"

அவள் தான் எடுத்த புகைப் படத்தைக் காட்டிப் புன்னகை வீசினாள்.

அவனுக்கு உச்சி குளிர்ந்தது. என்றுமில்லாத ஒரு தெம்பு பிறந்தது. பரவசமுற்றான்.

"அந்தப் படத்தைத் தாங்களன்!"

"இல்லை தரமாட்டன். அது என்னிடமே இருக்கட்டும்" அவள் செல்லமாகக் கோபித்தாள்.

"சரி கெமராவே எனக்குச் சொந்தமாயிற்றா என்ன செய்வீங்க?" என்று அவன் கேட்டுவிட்டான்.

"அது ஒவ்வொருநாளும் புதிய புதிய கோணத்தில் உங்களப் படம் பிடிக்கும். கழுவிக் கழுவிப் புதிய காட்சிகளைத் தரிசித்து அனுபவிக்கலாம்!" என்று சிரித்தாள் அவள். அவனும் தன்னை இழந்து சிரித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பொருட்காட்சிக்கு அவன் செய்த கோயில் பிரகாசமாய் இருந்தது. கோபுரக் கலசங்கள் சித்திர வேலைப்பாடுகளோடு பார்ப்பவர்களைப் பரவசம் கொள்ளச் செய்யும் தோற்றம் பெற்றது. அவன் தன்கைவண்ணமெல்லாம் காட்டி மெருகேற்றினான். அதை விஜிதான் ஓயாமல் ரசித்தாள்.

"இது என்ன கோயில்?" என்றாள் அவள்.

"சக்தி ஆலயம்!" என்றான் அவன்.

"தெய்வம் எங்கே?" கேட்டாள் அவள்.

"அது என் நெஞ்சில் பத்திரமாய் இருக்கிறது. கும்பா அபிஷேகம் செய்து சிலையை நிறுவக் காத்திருக்கிறேன். அந்தத் திருநாளை எதிர்பார்த்தபடியே வாழ்கிறேன்" என்றான் சுதா.

அவள் அவனை உற்று நோக்கிய வண்ணம் இருந்தாள். அவளுடைய முகம் என்றுமில்லாத புதுப் பொலிவுடன் விளங்கிற்று.

சுதா – விஜி உறவு சுற்றுப் புறமெல்லாம் பரவிப் பரபரப்பாய் இருந்தது.

திடீரென்று பிரமாண்டமான சாதி மதில்கள் முளைத்தன. அவள் மதிலின் அந்தப் பக்கம். இவன் இந்தப் பக்கம்.

தந்தை விதித்த கட்டுப்பாட்டில் விஜி ஒருமாதம் கல்லூரிக்கு வராமலே நின்று விட்டாள். தேடிய முகம் காணாமல் சேதியும் இல்லாமல் இவன் பேரிடி விழுந்தவன் போலானான்.

அவளுடைய நிம்மதியையே அந்தக் கணத்திலும் பெரிதாக இவன் நினைத்தான்.

பட்டப்படிப்பென்றுசொல்லி மாற்றம் எடுத்துக் கொண்டு கொழும்புக்குப் போனவன் பல வருடங்களின் பின் தாயின் கட்டளைக்காக ஆறாத புண்களுடன் வீட்டுக்கு வந்திருந்தான்.

தபால்காரனிடம் அவற்றை வாங்கினான் சுதா.

ஒன்று திருமண அழைப்பிதழ். அதை விரித்தான். விஜிக்குத் திருமணம். மறக்க முடியாத விஜியின் கையெழுத்துக்கள். மணமகனின் பெயரை வாசித்தான்... ஜெயமோகன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'விஜயகுமாரி – ஜெயமோகன்... விஜயகுமாரி சுதாகரன்'' எனப் பலமுறை அவன் முணு முணுத்துக் கொண்டான்.

அடுத்த தபாலையும் உடைத்தான். அதற்குள் அவனது உருவப் படம். அன்று விஜி எடுத்த சுதாவின் படம் – அவனின் அன்றைய உருவம் – விஜியின் கைவண்ணத்தில் ஓவியமாகி இருந்தது. மறுபுறம் 'அழியாத ஓவியம் – விஜி' என எழுதி இருந்தாள். அதே கை எழுத்து.

எல்லாம் முடிந்து விட்டது. அவன் மௌனமாக இருந்தான். பின்னர் தள்ளாடியபடி நடந்து வெள்ளைக் காகிதத்தை எடுத்தான். தனது வலயக்கல்விப் பணிப்பாளருக்கு, வேறு வலயத்துக்கு இடமாற்றம் கோரிக் கடிதம் எழுதினான்.

அவளை மறுபடியும் சந்திக்கு மனத்தைரியம் அவனுக்கு இருக்கவில்லை.

எதிரே கண்ணாடியில் அவன் முகம் தெரிந்தது. அவனுடைய தாடி அவனைக் கேலி செய்வது போல் இருந்தது. 'எல்லாம் முடிந்தது' என்று வாய் சொல்லவும்... 'இல்லை எல்லாம் இனித்தான் ஆரம்பம்!'' என்று அவன் மனதின் உள்ளே இருந்து கனதியான ஒரு குரல் ஒலித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

# பிடிப்பு

ஆதவன் மேற்கு மஞ்சத்திலே போய்த் தஞ்சம் புகுந்தான் என்றால், அந்த முச்சந்தியிலே சோலைமலையையும் அவனது கூடாரம் வைத்துக் கட்டிய பழைய வண்டியையும் காணலாம்.

தினமும் இருள்பிரிந்து நிலம் தெளிவதற்கு முன்பே உயிர் பெற்று ஓடும் அந்தக் கரத்தை; மாலைக் கருக்கலிலேதான் அது ஆடி அசைந்து கொண்டு அவ்விடத்தில் வந்து ஆறுதல் அடையும். ஒரு வேளை சூரியனும் சோலைமலையும் ஒரே ராசியில்தான் பிறந்திருக்க வேண்டும்.

வீடு, வாசல், மனைவி, மக்கள் என்ற கவலை இன்றி 'சோ' என்று கொட்டுகின்ற பெரிய மழைக்கும், இறாலைப்போல் உடலைச் சுருட்டிக் கொண்டு முடங்கிக் கிடக்கும் குளிர் இரவுகளுக்கும் அந்தப் பிரதான வீதியின் ஓரத்தையே முதிசமாக நம்பினான் அவன். ஒவ்வோர் இரவும் அவ்விடத்தில் தான் தன் வாழ்வைத் தெம்புடன் ஓட்டிக் கொண்டிருந்தான் சோலைமலை.

வலது கொம்பு ஒடிந்து, மறு கொம்பு சவண்டு தூங்கிக் கொண்டிருக்கும் விறாளியான காவி நிறக் காளைதான் அவன் உயிர். அந்த வண்டியின் கீழே தொங்கும் தொட்டிற் சாக்குக்குள் உடலை முடக்கிக் கொண்டு தலையை வெளியே நீட்டிய வண்ணமாக அவனோடே சென்று, சிறிது கண்ணுறங்கி அவனோடே திரும்பி வந்து இராமனுக்கு இலட்சுமணன் போல் இரவுகளெல்லாம் கண்விழித்துக் காவல்புரியும் கொட்டான் வால்க் கறுப்பன் அவன் உடன் பிறப்பு. குத்துக்கால், நுகங்களில் இடையிடையே கயிற்று வரிச்சுகளோடு ஆடி அசைந்து இருசில்லில் உருண்டோடும் வண்டிதான் அவன் சொந்தம் பந்தம், சொத்துப் பத்து எல்லாம்.

மேல் நாடுகளில் விளையும் நாகரிக மூட்டைகளைக் கொண்டுவந்து இறக்கும் மாபெரிய பட்டினத்தில் இருந்து, அவற்றை உள்ளூர்களுக்கும் வினியோகிக்க சிற்றூர்களை இணைத்து வைக்கும் 'மெயின் வயர்' போல நீண்டு வளையும் அப்பாதை. அதன் பிரதான முச்சந்திகளில் ஒன்றான பறக்கடுவைச் சந்திதான் அவன் வாழக் கொடுத்து வைத்த புண்ணிய ஸ்தானம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தச் சந்தியில் இருந்து சற்றுத்தூரத்தே 'கடுகதி'ப் பஸ்களும் வந்து நின்று மூச்சுவிடும். காலாறிச் செல்ல ஏற்ற இடமாயுள்ளது அந்த வளைவான ஏற்றம். அதன் சரிவின் மறுகோடியில் தேநீர்க் கடைக்காரச் சில்வாவின் கார்க் கரேஜுக்கு முன்னே தான் அவன் வாழும் மாளிகையை ஒவ்வோர் இரவும் நிறுத்தி வைக்கிறான். சில நேரங்களில் சிவலையே கொண்டுவந்து நிறுத்தச் சுயநினைவு வந்தவனாய் மெல்ல இறங்கி அதைத் தட்டிக் கொடுத்துத் தனக்குள்ளே பெருமை அடைவான் அவன்.

சோலைமலையின் மீது இரக்கம் கொண்டுதானோ என்னவோ? அப்பாதையின் அருகே இளநீர்க் குலைகளைத் தள்ளிக்கொண்டு தெம்பிலித் தென்னை மரங்கள் இரண்டும் சற்று வளைந்து குடை விரித்து நின்று சிரிக்கின்றன.

அதையண்டி கைக்கெட்டும் தூரத்தே காய்த்துள்ள இரண்டொரு கமுக மரங்கள், அதோடு பாதை ஓரமாகச் சடைத்துக் காய்த்து வேலியாக மதர்த்து நிற்கும் கோப்பிச் செடிகள். அவற்றின் பின்னணியில் உள்ள இறக்கத்தில் பரந்து கிளை பரப்பி நிற்கும் றப்பர்த் தோட்டத்திலிருந்து அசைந்துவரும் தென்றல் காற்று அவன் இதயத்துக்கு ஆறுதல் வழங்கிக் கொண்டே இருக்கின்றது. அந்தச் சூழல், உயிர்கள் எல்லாம் அவன் மீது பரிவுதான்.

அதோ தெருவோரத்தே கிடக்கின்றதே நான்கு பெரிய கருங்கல் துண்டுகள், அவைதான் அவனது வனப்பு மிகு மாளிகையின் முக்கிய தூண்கள். அவற்றை வண்டியின் சில்லுகளுக்கு நான்கு பக்கமும் முட்டுக் கொடுத்து வண்டியை எந்தப் பேய்க்காற்றுக்கும் அசைக்கமுடியாத படி நிறுத்தி வைத்திடுவான். அந்தக் கற்களுக்குப் பக்கத்தே குவித்து வைக்கப்பட்டு கிடுகினால் பாதி மூடினாற்போல் தேடுவாரற்றுக் கிடக்கிறதே, மீன், புகையிலை, சுருட்டு இத்தியாதிப் பண்டங்களின் கட்டுக்களுக்குச் சட்டையாக வாய்த்து சுழற்றி எறியப்பட்ட பனை ஓலைப் பாய்கள் அவைதான் அவன் வீட்டின் சுவர்கள். அதற்கும் அணித்தாய் நான்கு – கம்புத் துண்டுகள் சதுரப்பட நாட்டி வைக்கோல் வாடையோடு காட்சி தருகிறது – சிவலையின் வயிற்றை நிரப்பும் அட்சய பாத்திரம். வெள்ளைப் பூச்சுக் கழன்று – விழிம்பு நசிந்து ஒருபக்கம் கோணலாகி பாதி கறுப்பேறி மினுங்குகிறதே தகரக்கோப்பை அது கறுப்பனுடைய இராப் போசனப் பீங்கான்.

“த்தா... த்தா... ட்டோ... இம்... இம்... த்தா... த்தா... போடா...” யானைக்கு முன்னே வரும் மணி ஓசையாகி அவன் – குரலோசை கட்டியம் கூறுகின்றது. ஓம்... அதோ... அந்தக் குறுக்கு வீதியால் திரும்பி இரவினைக் கழித்துத் தென்பு பெறுகின்ற வாஞ்சையோடு அவனுடைய இடத்துக்கே வந்து விட்டான். சூரியனும் ஆறுதல் அடைவதற்காக மேற்கு மலைகளுக்குள் புகுந்து மறைந்து போனான்.

தலை பஞ்சுப் பெட்டியாகி – உடல் சுருங்கிக் காய்ந்த மூங்கில் போல் தோன்றிற்று சகல வீதிகளிலும் நடமாடித்திரியும் ஜீவன் சோலைமலையின் – உழைத்தே வாழ வேண்டும் என்னும் சீரிய நோக்கு அவன் உள்விழுந்த கண்களில் துலாம்பரமாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பளிச்சிட்டது. அது எல்லோருக்கும் புரியாவிட்டாலும் அவனோடு ஒன்றிப் பழகும் இரு உயிர்களும் உணர்ந்தே வைத்திருக்கின்றன.

சோதனையும் வேதனையும் அவன் முகத்தில் ஆழ்ந்த சுவடுகளைப் பதித்திருந்தன. அவைகளின் கோரப்பிடி அவன் வயதை இரட்டிப்பாகக் காட்டிற்று. ஒழுங்கான ஊன், உறக்கமற்ற வாழ்க்கை, விரக்தி எல்லாம் முதுமையைச் சேர்த்து வைத்தது.

வண்டியை விட்டிறங்கிய சோலைமலை சிவலையின் பூட்டான் கயிற்றை உருவி விட்டான். அதற்கு இனி விடுதலை. நுகத்தால் மாற்றி எடுத்து அதன் முதுகை ஐந்தாறுதரம் தடவிக் கொடுத்தான்.

"செவல்ல... டே... மவனே... இண்டைக்கு நம்மபாடு குத்தமில்லேடா... நாளைக்கும் நம்மப் படைச்ச ஆண்டவன் காப்பாத்துவான்டா கவலய உட்டிட்டு ஒம் வகுத்துக்குத் திண்டுக்க... அப்புறம்... நல்லாத் தூங்குடா... ஆ... தெரியுதா?"

திரும்பவும் மூன்றுமுறை முதுகைத் தடவிவிட்டு அதன் மூட்டிலே அன்பாக இரண்டு தட்டுத்தட்டினான். அதன் தலையையும் சொறிந்து விட்டான் "டே... செவல்ல... நீதாண்டா... யெம் மூத்த மவன்... யெனக்கு நீயும் இல்லேண்ணா... யெப்பவோ... நா... செத்திருப்பேண்டா நீ தாண்டா... யெம் பாதி உசிர... வெச்சிருக்கே... நீதான்டா யெம்... மூத்த மவன்..." என்று முகத்தோடு முகத்தை வைத்துக் கொஞ்சி அதை ஊன்றி நோக்கினான். அதுவும் அவனைக் கனிவுடன் நெடுநேரம் நோக்கிற்று. அதன் விழிகளைப் பார்த்துப் புன்னகைத்துத் தன் கண்ணீரைப் புறங்கையால் துடைத்து விட்டான்.

இரு கண்களையும் இறுக்கி மூடித் தன் நெற்றியையும் புருவங்களையும் இரண்டுதரம் தேய்த்துக் கொண்டான். சில்லின் குத்துக் காலிலே வழக்கம் போல் சிவலையைக் கட்டித் தீனியும் போட்டான். அவனது முக்கியமான ஒருவேலை முடிந்துவிட்ட ஆறுதலின் முகத்தை இரண்டுதரம் தேய்த்து விட்டான்.

வரும்போது பள்ளத்துச் சாப்பாட்டுக் கடையில் பார்சல் ஒன்று எடுத்திருந்தான். அதோடு பத்து ரூபாய்க்கு ஊத்தியும் இருந்தான். மடியில் இரண்டு சுருட்டும்... இரண்டு லேகியமும் இருக்கிறது. இரவை இன்பமாகக் கழிக்கப் போதும்.

உசார் வந்தவனாய் ஓலைப்பாய்க் குவியலைக் குலைத்தான். ஒவ்வொன்றாக எடுத்து ஈ நுழையவும் முடியாதவாறு வண்டியின் நான்கு பக்கச் சுவர்களையும் எழுப்புவதே அவனுக்குக் கைவந்த ஒரு கலை.

"டே... யெண்ட எளய கறுப்பா... டே... ஒன்னத்தான்டா... கவனம்... இந்தக் காலத்தில யாரையுமே நம்பேலாடா... எரிச்சல் கிரிச்சல் படுறவனும்... இருப்பானுக...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனம்... தெரியுதா?... நில்லுடா... ஒன்னத் தெரியும்டா... யென் கால நக்கினது போதும்டா... போதும்! ஒம் புத்தி கூட மறுவாதி கெட்ட அவளுக்கு இல்லாமப் போச்சுடா... போதும்..."

குந்தி இருக்கும் அவனைப் பார்த்த வண்ணமாகக் கொட்டான் வாலை அசைத்துப் பாய்ந்து பாய்ந்து நக்கி உறவு கொண்டாடியது. கறுப்பனின் தலையை ஐந்தாறு தரம் தடவி விட்டான். கடையிலே எடுத்து வந்த சோற்றுப் பார்சலை அவிழ்த்துப் பாதியைத் தகரக் கோப்பையில் வைத்தான். கறுப்பன் அவனைப் பார்க்க 'தின்னு கறுப்பா' என்று பிரிவோடு சொன்னதும் மெல்ல மெல்லத் தின்ன அவனும் அவ்விடத்தே குந்தி வயிற்றை நிரப்பினான்.

அந்த மூன்று சீவன்களும் அன்பு மயமான பந்தத்தால் ஒட்டி உறவாடி வாழப் பழகி விட்டன.

இந்தப் பரஸ்பர வாழ்க்கை தனக்கு இல்லையே என்ற ஏக்கம் நீண்ட நாளாக அவனை வாட்டி வருகிறது.

சாப்பிட்டதும் பெரிய போத்தலில் ஏற்கனவே எடுத்து வைத்துள்ள தண்ணீரில் கறுப்பனுக்கும் பகிர்ந்து கொடுத்து தானும் குடித்தான். சிவலைக்கும் பழைய வாளியில் தண்ணீர் கொண்டுவந்து வைத்ததும் நிமிர்ந்து நின்று ஆகாயத்தை வெறித்துப் பார்த்தான்.

மடியில் இருந்த கடதாசியை அவிழ்த்து அதனுள் இருந்த இரண்டு லேகியத்தையும் உடைத்து வாயில் போட்டுச் சுவைத்து விழுங்கினான். போத்தலை எடுத்து தண்ணீரும் குடித்து சுருட்டையும் பற்றவைத்தான். புகையை இழுத்து இழுத்து வெளியே விடுவதிலே அவனுக்கு ஓர் அலாதியான இன்பம்.

புகைச் சுருள்கள் அவன் கண்முன்னே பூதாகாரமான உருவாய்த் தோன்றி நீண்டு நீண்டு இழுபட்டது.

"ச்சீ... ஒன்ன நம்பினத்த... பெருங்கடல்ல எறங்கிருக்கலாம். இப்புடி... நம்ம... கழுத்திலே கத்தி வெச்சிடுவேன்னு முன்னமே தெரிஞ்சிருந்தா...? இம்... நா... என்ன வாட்டசாட்டமா இருந்தன். ஒன்ன மொத மொதல்ல பாத்தப்ப யென் நெஞ்சில... பக் குன்னு ஒரு ஆச வந்திச்சுப் பாரு... அதுக்குச் செருப்பால அடிக்கணும்... ஒரு நாளு மழயில நனைஞ்சிட்டுத் தலையில பாரச்சொமயோட றோட்டில போய்க்கிட்டிருந்தே... நா... யெம் பாட்டுக்குப் போயிருக்கலாம். ஏதோ யெரக்கம் வந்திச்சு... யேம்புள்ள நனஞ்சிக்கிண்ணு போறே வண்டியில ஏறேன்... ஒங்க ஊட்டுப் பக்கந்தான் போறேன் எண்டன் பாரு... யெம் மனசு இளகிட்டு. நா... மடயன். நீ... படாரெண்டு பாரத்தப் பூட்டு உள்ளயும்ல... ஏறிற்ற... யெனக்கு யெம்புட்டுச் சந்தோசமா இருந்திச்சு? அண்டைக்கு ஒம் வூட்டில யென்னா ஜாலமெல்லாம் பண்ணினே...? யெம் மனசுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரொம்பப் புடிச்சுப் போச்சு... ஆண்டவன நம்பி... மாரியாத்தாவக் கும்பிட்டு ஒன்னக் கலியாணம் செஞ்சேன். யிந்த எழவெல்லாம் நடக்குமெண்டு கண்டனா? அந்த நாளயில யெம் பொளப்பு யென்ன சீரா நடந்திச்சு? புள்ள குட்டியோட கொஞ்சக்காலம் சந்தோசமாத்தானே இருந்தம் போகப் போகத்தான்... ஒன் பொட்டுக்கட்டு தெரிஞ்சிச்சு? என்னா றாங்கிடீ... ஒனொக்கு... ச்சீ...?" காறித்துப்பினான்.

"படமெண்டா உசிரல்ல உடுவே... தெனமும் அந்தக் கூத்துக்குத்தானே ஆச... ஒந்தங்கச்சி புருசன் இருக்கானே – 'பூச்சி'... அவன் சும்மா பூச்சியா? பெரிய கம்பளிப் பூச்சிடி அவன் நல்லாரிப்பானா? அந்தத் தறுதல கூடத்தானே... ஒனக்குச் சிரிச்சுக் கொண்டாடப் பகிடி அம்புடும். வசுக் கோப்புக்கும் அவன் போநாத்தான் நல்ல படமெண்டு புடிப்பே... நமக் கென்னடான்னு பாத்தா... அந்தக் கழிசடைக்கு நானில்லா நேரம்பாத்து ஒன்னோட என்னடி பேச்சு? ராவையில நான் அறைக்குள்ளே படுத்தா நீ... கதவோரமாப் படுப்பே... யென்னாண்டு கேட்டா அங்க மூட்ட தின்னுது என்பே. ஆனா... கதவோரத்திலாண்டி பூச்சி நிக்கும் என்பன்... அவண்ட மூஞ்சியும் மொகறயும்? அசிங்கமில்லே?... அதுக்குள்ள என்னாடி கண்டே? மூத்த மவன் ராமு பள்ளிக்கு முழுக்குப் போட்டானாம். நீயும் அவனும் பால்வெட்டப் போறியளா? தொலஞ்சி போடி... எளயவனாச்சும் படிச்சிக்கிட்டான்னா?... ச்சீ..."

"அண்டு வழமைக்குக் பிந்திட்டன். யெமிம் வோட்டுக்கு ரெண்டு நட போயிட்டு வந்தன்... வாறப்ப ஒம்பது மணி வஸ் போகுது. வண்டில அண்ண வூட்டுல போட்டிட்டு வந்து கதவத்தள்ளினா?... ச்சீ... தோற... என்னா வேல செஞ்சிட்டு இருந்தே?... பூச்சி பறந்தில்ல போச்சி... செய்திறதெல்லாம் செஞ்சி போட்டு யெம் மூஞ்சி பாத்து யென்னாடி நீ பேசினே? நீ... யெக்கேடு கெட்டாலும் எனக்கென்னடி? மாரியாத்தா இருக்காடி நா... கேட்டுக்கிறன்... நீ... நல்லாரிப்பியா? யெம் மனசு – பத்துதுடி அந்த ராவில நா பொறப்படக்க... நீ யென்னாடி பேசினே... ச்சீ... யென் நாய் கூடவே வந்திடுச்சே... அதுதானே நாய் நன்டி மறவாதுன்னு பேசிக்கிறே... நீ... அழுந்துவேடி... நீ... அழுந்துவே"

முகத்தைச் சுருக்கி... அடித் தொண்டையில் சுரந்த உமிழ் நீரை வெளியே காறித்துப்பினான். கையிலே இருந்த சுருட்டுக்குறையை தூரத்தே வீசி எறிந்தான் சோலைமலை.

அவன் காலடியில் நின்ற கறுப்பன் வீதியைப் பார்த்துக் குரைத்தது. நான் இனி உசார் என்று அது காட்டிற்று.

"யேன்டா ஒளர்றே... யாரும் நம்ம கிட்ட வந்தாப் பாத்துக்கடா. யென்னேரமும் கத்த வேணாம்டா... கறுப்பா... கண்ணத் தூங்காமப் பாத்துக்கடா... கவனம்" என்று எச்சரித்து விட்டு வண்டியுள் ஏறிக்கொண்டான் அவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடிகிறது. வியாழக்கிழமை

இந்தப் பகுதி மக்களின் சந்தோச நாள் அது. வாரத்தில் ஒரு நாள். வியாழக்கிழமைதான் இங்கு சந்தை கூடுகிறது.

வாடிக்கையாளர்கள் தங்கள் வசதியையும் தேவையையும் கருதி இஸ்டம் போல் அவனின் பெயரை இரண்டாக்கி கடைசி எழுத்தை 'ல' வாக மாற்றி... 'சோல...' என்றும் – சிலர்... 'மல...' என்றும் நீட்டி அழைத்தனர். அவனுக்கு அதுபற்றியே கவலை இல்லை. தூக்கவேண்டியதைத் தூக்கி... ஏற்றவேண்டியவைகளை பாடுபார்த்து ஏற்றி இறக்கவேண்டியவற்றை இறக்கி வருகிறான்.

சந்தை முறையிலேதான் சோலையின் கையும் பொலியும். எத்தனையோ பேர்கள் அவனையே தேடிக் காத்து நின்று சுமைகளை தங்கள் இடத்துக்கு ஏற்றிச் செல்வார்கள். கூடக் குறையக் கேட்க மாட்டான். நியாயமாகக் கேட்பான் அவர்கள் அதையே கொடுப்பார்கள். எவரிடமும் வந்தி போடமாட்டான். அவனுக்கு வாடிக்கையாளர்கள் அதிகம்.

கார்களும், வேன்களும், லொறிகளும் அந்தக் குறுக்குவீதியில் இடை இடையே நிறுத்தப்பட்டிருக்கும். ஒரு சில வாகனங்கள் கத்தி இரைந்த வண்ணம் ஓடிக் கொண்டிருக்கும். சனங்கள் கூட்டம் கூட்டமாகப் போவதும் வருவதுமாக இருக்கின்றனர்.

சோலைமலை வழக்கத்துக்கு மாறாக அன்று மதியமே தனது மாளிகையை நிறுத்தி வைக்கும் இடத்துக்குக் கொண்டுவந்து விட்டான். சிவலையை அவிழ்த்துத் தண்ணீர் கொடுத்தான். வைக்கோலும் போட்டுக் கறுப்பனுக்கும் ஏதோ கொடுத்து வீட்டுத் தன் சேட்டில் இருந்த சுருட்டொன்றை எடுத்துப் பற்றவைத்து புகையை ஊதிக் கொண்டு நின்றான்.

புகைச் சுருள்கள் சிக்கல் நிறைந்த சங்கிலிக் கோவைகளாகி மேலே தொடர்ந்து சென்றன.

வீதியில் போவோரும் வருவோரும் அவனைப் பார்த்து வாய்க்கு வந்தபடி பேசிக் கொண்டு சென்றனர்.

அவன் வண்டியில் அமர்ந்த வண்ணம் பணிந்து செல்லும் பாதையை உற்றுப் பார்த்து சுருட்டைச் சுவைத்துப் புகையை ஊதினான்.

"அவ நல்லாரிப்பாளா? அவ சோலிய உட்டு இந்த எட்டு வருசத்துக்கும் ஏதும் கேட்டனா? அடியேய் ஒனக்கு இது அடுக்குமாடீ... ஒன் தலயில இடி யுளும்டி. யென்னப்பத்தி யென்னவெல்லாம் பேசிறே. வேணாமெண்டு பாத்தக்கா... தலைய மிஞ்சிட்டில்ல போகுது...!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நா இன்னொருத்திய வெச்சிருக்கனாம். அதானாம் அவள மறந்திட்டனாம். புதுப் பொண்ணு எதையோ செஞ்சி இழுத்திட்டாளாம். ஆண்டவா... எப்பிடியெல்லாம் பேசிக்கிறா பாரு! சோமாறி... கழுத... இண்டைக்கும்ல... சந்தையில சண்ட போட வந்திட்டா அடியேய் நீ நாசமாப் போவாடி. யெம் மனசு ரொம்பப் பத்துதுடி... யென்ன ஏமாத்திப் போட்டு... சண்டக்காடி வாற... இம்..."

கண்ணீரைத் துடைத்து விட்டான்.

"யினி நா யெதுக்குத்தான் ஒழைக்கணும். யென்னதான் கண்ணுட்டேன். கறுப்பா... டே.... மவனே... செவல... நல்லாத்தின்னுங்கடா. யினிமே யென்ன நம்பாதுங்க. நா... செத்துப் போறன். யெனக்கு லேசாச் சாகத் தெரியும்டா... நா செத்துப் போறது தான்டா நல்லது. யேன் ஒரு மாதிரிப் பாக்கீங்க? யேன்டா அழுவுறீங்க? டே.... யெதுக்கா அழுவுறே... அழுவாதங்க... நா வாழ்ந்து யென்னா மிச்சம்? யென் சம்சாரம் யெப்போ செத்துப் போச்சுடா... புள்ளங்களும் அப்பிடித்தான். நா சாக ஆயத்தஞ் செஞ்சிட்டன்டா, யேன்டா அழுவுறீங்க? டே.... ஆனா... நா சாகமாட்டன்டா... நான் சாகமாட்டன்டா... நா செத்துப் போயின்னா இம்... செவல்ல... ஒன்ன அறுவைக்குக் கொடுத்திடுவானுகடா... கறுப்பா... ஒன்னயும் அடிச்சுக் கொன்னுடுவானுகடா. அதான்டா நான் சாகமாட்டன். நல்லாச் சாப்புடுங்கடா... டே.... நல்லாச் சாப்புடுங்கடா...!"

அவன் எதையோ நினைத்து ஏங்கி அழுதான்.

நாம ஒளச்சி ஓடாப் போனம்டா... நம்மப் பாத்து சில ஆளுங்க சிரிச்சுக்கிறாங்கடா பாவிப் பயலுக... நாம எதுக்குடா இன்னும் வாழணும்? மூணு பேருமா... ஒரே நேரத்துல செத்துப் போட்டமென்னா நல்லாரிக்கும்டா... ஆண்டவன் நம்ம மூணு பேரேயும் ஒரே நேரத்தில் கொன்னுட்டா யெம்புட்டு ஆறுதல்டா... செவல... இனிமே நாம ஒழைக்கிறல்லடா... அவ வேலாயி யென்னப் பத்தி யெளக்காரமாப் பேசிக்கிறா... காலு கையெல்லாம் பதறுதுடா... யினி நாம வேல செய்யுறதில்ல... பட்டினி கெடந்து செத்துப் போவம். மூணு பேருமா செத்துப் போவம் அதாண்டா... நல்லது..."

கண்கள் பனிக்க அவன் தனக்குள்ளே உருகினான்.

"ச்சீ..." அருவருப் போது சுருட்டுப் பாதியை வீசி எறிந்தான். அது பக்கத்தில் இருந்த குப்பை மேட்டில் விழுந்து கனன்று புகைய ஆரம்பித்தது.

தபால் கொண்டு செல்லும் புகைவண்டி 'கூ' என்று கத்திக்கொண்டு பட்டினம் நோக்கிச் சென்றது. சனங்கள் கைச்சுமையோடு வீடுகள் நோக்கினர். வாடிக்கையாளர்கள் 'சோல' – என்று அழைத்தவண்ணம் அவன் அருகே வந்து கதைத்ததும் தலையை ஆட்டி மறுத்தான். அவர்கள் வாடிய முகத்துடன் புறுபுறுத்துச் சென்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழமை போல் தேநீர் நினைவு வந்தும் அவன் எழும்பாமல் வெறி பிடித்த பார்வையோடு குந்தி இருந்தான். சிவலையும் கறுப்பனும் அவனை அடிக்கடி பார்த்துக் கொண்டன. அவன் வானத்தைப் பார்த்து யோசித்தான்.

'அப்பா' என்ற குரல் கேட்டுத் திரும்பினான். அவனது இளைய மகன் – நிற்கிறான்.

"யென்னடா...?"

"அப்பா... அம்மா யென்ன அடிச்சுத் தொரத்திட்டாப்பா. யென்னப் பள்ளிக்குப் போகவேணா... படிச்சுத்தான் கிழிக்கப் போறாரு தொரமவன்... கொப்பனத் தேடிப்போ... இல்லாட்டி அண்ணன் கூட மலைக்குப் பாலெடுக்கப்போ... படிப்பிக்கத் துட்டில்ல... எண்டு பெரிய வாதால அடிச்சுப் போட்டாப்பா... யிங்க பாருங்க யென் முதுக..."

அழுது கொண்டு கிழிந்த சட்டையைக் கழற்றிக் காட்டினான். முதுகில் கொவ்வைப்பழம் கட்டி இருந்தது. உடம்பு வதங்கிப் போயிற்று.

"ச்சீ... தட்டுவாணி... புள்ள அரும தெரியுமாடி ஒனாக்கு? நீ இது மாத்திரமா செய்வே? யென்னெல்லாம் செய்வேடி? "மவனே அழாதடா... இந்த மொற ஆறு பாசாகிட்டியா?

"ஆமாப்பா... நா இந்த வருசம் ஏழு... இஸ்கூலுக்குப் போகப் பொறப்படக்க... அடிச்சுப் போட்டா..."

கண்ணீரைத் துடைத்துவிட்டு ஆவேசத்தோடு சட்டையைப் போட்டான் சோலைமலை. ராசா... ஒனக்காக நா... வாழப்போறம்டா... டே செவல – டே கறுப்பா... நாமெல்லாம் ஆம்புளடா... வீணா யெதுக்குடா சாகணும்? யெம் மவன் ராசாட படிப்புக்காக நாம வாழணும் டா... அவனப் படிப்பிச்சுப் பெரிய எடத்தில வெய்க்க வெய்க்கணும்டா... இனி நமக்குச் சோர்வே இல்லடா...!"

சந்தை இன்னும் கலையவில்லை. வண்டியைக்கட்டி எடுத்துக் கொண்டு முழு ஆவேசத்தோடு புறப்பட்டான் சோலைமலை. ராசாவின் முகம் மலர அவனையும் ஏற்றிக் கொண்டு வண்டி ஓடுகிறது.

மலையில் உள்ள வீடுகளில் மின்விளக்குகள் ஒளியைச் சொரிகின்றன.

நன்றி :
பாடும்மீன் 1967



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

# கடல் பொய்க்கிறது

**சௌ**ந்தரம்... ஊரெங்கும் வெளிச்சமான ஒரு பெயர்.

கிராம சேவையாளர், அதிபர், கிராமோதயத் தலைவர்போல எல்லோருக்கும் தெரிந்த பெயர்தான் சௌந்தரம். அவள் கதிராமனுடைய மனைவி என்பதும் சிறு பிள்ளைக்கும் பாடம்.

இருபது இருபத்தைந்து வருடங்களுக்கு முதல், முன்பின் தெரியாதவர்கள் கூட அவளைக் கண்டால் அவளின் சௌந்தரியத்தில் மனம் கசிந்து சௌந்தரி என்றே அழைத்திருப்பார்கள். இதனாலேதான் அவளை சௌந்தரி என்றும் அழகி என்றும் ஊரவர்கள் செல்லமாக அழைக்கிறார்கள். அவ்வளவு அவள் உருவத்துக்குப் பொருத்தமான பெயர் சௌந்தரம். அவளுக்குக் கொடிபோன்ற உடல், வட்டமுகம், நீண்ட விழிகள் நரை கலந்த சுருண்ட கூந்தல், எலுமிச்சம் பழ நிறம். ஓ... அவள் அழகிதான்.

எட்டுப் பேருக்குத் தாயாகிப் பேரன் பேத்திகளைக் கண்டுவிட்டாள் அவள். இதற்குள் கதிராமனின் சச்சரவுகளுக்கும் அமளிதுமளிகளுக்கும் நின்று பிடித்து நரை விழுந்த கொக்காக மாறி இருந்தாள். இந்த வயதிலும் கதிராமன் அவளை – விடுவதாயில்லை. கடற்கரைக் குழனியிலே இருவரும் தனிக்குடித்தனம் நடத்துகின்றனர்.

கட்டி அவிழ்த்த நாய் போல் உறுமித் திரிந்த கதிராமன் அந்த நாளில் பிரபல விவசாயி. எடுபிடி வேலைக்கும், துணிச்சலான கருமங்களுக்கும் அவனுக்கு நல்ல கிராக்கி. மிரித்தல், பலகடித்தல், சூடு போடல் என்றால் அவனையே எல்லாரும் தேடிப் பிடிப்பார்கள். மேலதிகமாக ஒரு 'மீடியம்' மூலிக்கட்டும்' காப்பச் சுருட்டும், நவிக்கட்டும் கொடுத்தால் போதும். அதைப் பவித்திரமாகச் சுற்றி எடுத்துப் பற்றவைத்து நாலைந்து தரம் இழுத்தானென்றால் கிட்டிப்புள் மாதிரிச் சுழல்வான். இரண்டு பேரின் வேலையைத் தனியே மூச்சுப் பிடித்துச் செய்வான். வேலைக் கென்றே பிறந்த அபூர்வப் பிறவி கதிராமன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பூர வட்டையானது கரவாகு வட்டையைப் போல் இருபது இருபத்தைந்தென்று விளைந்து ஊரவர் எவரையும் கைதூக்கி விடவில்லை. பத்துச் சத வட்டிக்குப் பணம் கொடுப்பவர்களையும், குத்தகைக்கு விட்ட காணிக்காரர்களையும் மட்டுமே அது காப்பாற்றி வந்தது.

கொஞ்சம் மூளையுள்ள விவசாயிகள் அந்த வயல் மங்கைகளைக் கைவிட்டு, கடற்கரை வெம்பு மணலைக் கலியாணம் செய்தனர். இரவு பகலாக அவளோடு இணைந்து உறவாடி, வெண்டி, கத்தரி, மிளகாய் என்று மழலைச் செல்வங்கள் தந்த அரவணைப்பில் நிம்மதியாக வாழத்தலைப்பட்டனர்.

அந்த நிம்மதிக்கும் சொற்ப ஆயுள்தான். வாழ்க்கை வண்டி சீராக ஓடியதே இல்லை. தடம்புரள்வதும் தள்ளாடுவதும், நின்று நின்று போவதுமாகவே இருந்தது.

தோட்டங்கள் ஓய்ந்தால் கடல் அன்னைதான் கைதருவாள்; புரட்டாதி ஐப்பசியில் அவள் இருகையாலும் தன்மக்களுக்கு அள்ளிக் கொட்டுவாள். மடிவெடிக்கும், பாரை, சூரை, நெத்தலி, கீரி என்று புகுத்து வழியும். அந்நாட்களில் கேட்டுக் கேட்டு ஓடிப்போய்க் கோலி எடுப்பவர்கள் கூடக் கொஞ்ச நாளைக்குக் கண் மண் தெரியாமல் காலம் கடத்துவார்கள்.

உள்ளூருக்குள் முளைத்துள்ள குட்டித் தவறணைகளுக்கும் நல்ல கொண்டாட்டம். எழுத்தில் வராத வன்தமிழ் வாக்கியங்கள் தெருவெல்லாம் முழங்கும். சந்திக்குச் சந்தி குமர் குட்டிகள் காதுகளைப் பொத்திக் கொள்ளும். வானொலிப் பெட்டிகள் உரத்துப் படிக்கும். இரண்டாம் புதுவருஷம், மூன்றாம் புதுவருஷம், ஊரில் பிறக்கும். இந்தக் கொண்டாட்டங்களை நம்பியே கதிராமனும் மனைவியும் கடற்கரையில் வாழ்ந்து வருகிறார்கள். அவனும் சிலவேளைகளில் 'வன்தமிழில்' பாட்டுப் பாடுவது வழக்கம். சகர மெய்யிலும் பகர மெய்யிலும் உக்ரம் சேர்த்துச் சிறு சிறு பாட்டுப் பாடுவான்.

கடற்கரையில் பொன்னன்ட தோணிக்குச் சனங்கள் போவதே அரிது. எவரென்றும் பார்க்காமல் எரிந்து விழுவான். "கொப்பன்ட வலையாடா...? போடு மீன... தோணி வலைக்கு முதல் போட்டநீயா?" ஆவேசமாகக் கொக்கரிப்பான். அவன்ட பேச்சுக்குப் பயந்து சனங்கள் நெருங்குவதே இல்லை.

வன்னமணிர தோணி கரைக்கு வந்தா திருவிழாதான். அவன்ட மனம் போலதான் கையும். ஆண்டவனும் அவனுக்குக் கை கொடுக்கத்தான் செய்கிறான். முப்பது நாற்பதென்று பாரசூர படாத கிழமையில்ல. இரண்டு மாதத்துக்கு முதல் பார பட்டு லொறிகளில் ஏற்றிக் கார்வாங்கினான். ஊரெல்லாம் கமகமத்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொரியல். மூன்று நான்கு நாட்கள் யாருமே மீன் தேட வில்லை. பொரியல், கருவாடு எனப் பொழுதுகள் ஓடின. போனமாதம் நெத்தலி மடி வெடித்தது. மண்ணில் எறிந்து பத்துப்பனிரண்டுபேர் கூட்டி அள்ளி சாக்கில் கட்டிக் கொடுக்கக் கொழும்புக்கு ஏற்றினான். பணம் தாராளமாகவே புரண்டது. சில்லறைக் கடைகளுக்கும் நல்ல கொண்டாட்டம்.

கார்த்திகை பிறந்து அடை மழையும் தொடங்கிற்று. எல்லாருடைய பவுசும் அடங்கிற்று. குதித்துத் திரிந்த அழகியும் கூனிக் குறுகிப் போனாள். ஏழெட்டு நாட்கள் காய்ச்சல் பிடித்து ஆட்டிவிட்டது போல் மெலிந்து நின்றாள்.

அழகிக்குக் கதிராமன் தேடிக் கொடுத்த சொத்துக்கள் இரண்டு. உணவு முத்திரையும், ஒரு கல்லுத் தோட்டுக் கூட்டமுந்தான் ஆறு சிவப்புக் கல்லுகள் வட்டமாகப் பளிச்சிடும். நடுவே ஒரு வெள்ளைக்கல் மின்னும். நடை நடையா நடந்து அமுதா நகை மாளிகையில் முற்காசும் கொடுத்து – "வளைத்து அரும்புகள் வைத்துச் செய்தெடுத்த தோட்டுக் கூட்டந்தாள் அது. அதை அவள் காதிலே போட்டால் நல்ல அழகியாகவே ஜொலிப்பாள். அவள் நடையிலும் ஒரு பெருமிதம் துள்ளும்.

மாரி பிடித்து விட்டதால் அந்தத் தோடும் அவளின் காதை விட்டு நழுவிற்று. அதை ஒரு பேப்பரில் சுற்றி எடுத்தாள். விதானையாரின் பெண்சாதி, அப்பக்காற வள்ளி, மனேஜ்சர்ர மாமி, வெளிநாட்டுக்காரண்ட சர்மளா, வீடெல்லாம் ஏறி இறங்கினாள். அவளின் பல்லிளிப்பைக் கண்டும் யாரும் மனம் இளகவில்லை. கொடுக்கலாம். இவளுக்குக் கொடுத்தால் கேட்பவரிடமெல்லாம் பறை அடிப்பாள். இரவில் யாரும் துவக்கோடு வந்தாலும் வருவார் என்றே எல்லாரும் கைவிரித்து விட்டனர்.

ஒரு முத்திரையை வைத்து ஐம்பது ரூபா வாங்குவாள். கொஞ்ச நாளின்பின் வேறோர் இடத்தில் தோட்டை வைத்து நூறுரூபா எடுப்பாள். முத்திரை மீண்டு அரிசி எடுத்துக் கறிபுளியும் வாங்குவாள். மற்றக் கிழமை இரண்டு முத்திரையையும் வைத்து தோட்டையும் கைப்பற்றி விடுவாள். இதுவே அவளின் வழக்கமான வேலை.

யாருக்கும் முழுமாத வட்டி கொடுக்கமாட்டாள். ஒரு கிழமைதானே பத்து நாள்தானே... என்று நழுப்பி – காவட்டி, அரைவட்டியோடு காரியத்தை முடித்து விடுவாள். எவரும் தாறு மாறாக நின்றால் "விதானையாரிட்ட போவன்... கோயில் தலைவரிட்டக் கடிதம் கொடுக்கிறன்" என்று துள்ளுவாள். எப்பிடியும் வெற்றிக் கம்பத்தைப் பிடித்து விடுவாள். அவள் மகர் சூரி.

இந்த முறை யாருமே அபயம் அளிக்காததால் மிகச் சோர்ந்து போனாள் சௌந்தரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னம்பலம் கிளாக்கரைப் பறந்து வந்த பன்னாடை என்று யாரும் கூறுவதில்லை. அவர் புதிதாக ஊரில் குடியேறினாலும் கைநிறைந்த வாழ்வோடுதான் வந்து சேர்ந்தார். யாரோடும் சோலி சுரட்டுக்குப் போகாத மனிதர் அவர். தங்கமான மனம். கோடு கச்சேரி ஏறி கையில மடியில இருக்கிறதை நாசமாக்குபவன் முட்டாள் என்பது அவரின் தத்துவம். நேரத்தோடு பேசாமல் இருப்பவன்தான் புத்திசாலி என்பதும் அவரின் தீர்க்கமான முடிவுகளில் ஒன்று.

கிளாக்கரைப் பற்றிய படம் சௌந்தரத்தின் மனக்கண்ணில் நிழலாடியது. பொன்னம்பலக் கிளாக்கரைப் பிடித்து எப்படியாவது வயிற்றில் எரியும் நெருப்புக்குப் பால் வார்க்கலாம் என்ற உறுதியோடு நடந்தாள். அவள் நம்பிக்கை ஒருபோதும் பிழைத்ததும் கிடையாது.

தோட்டுக்கு ஊத்தை அடித்துத் துடைத்துக் கடதாசியில் சுற்றி மடியில் முடிந்தது இருக்கிறதா எனத் தொட்டுப் பார்த்துக் கொண்டாள்.

"ஐயா... இருக்காரர புள்ள? தங்கமான மனுசன். ஊரெல்லாம் நல்லாக் கதைக்கிறாங்க நடந்தெடத்தில் புல்லுச் சாகாத பொறவி. இப்பிடி ஐஞ்சாறு பேர் இருந்தா நம்மட ஊர்ல பால்பொங்கும் புள்ள... கஞ்சான் கொத்தி கழிசடைகள் தானே இஞ்ச காலுக்கையும் கைக்கயும் நெளியுது. நம்பிக்கிம்பி எதையும் வெய்க்கேலாது புள்ள. ரெண்டு நாள் பட்டினிகா... கூப்பன் மாவ... எத்தின நாளைக்குத் தின்னலாம்? பகலைக்குக் கெடந்து இரவைக்காகுதல் ஆக்க வேணும். ஒரு நேரம் தின்னாட்டிப் பசியும் கொறைவுதான். ஆனா... யூரியாப்பசள கூடப் போட்ட பயிர் மாதிரி உடம்பு வதங்கி வாடிப் போகுது புள்ள... இத வெச்சிட்டு இருநூறு ரூபாத் தாங்க... ஐயாட்டக் கொடு புள்ள... எடுக்கிறவட்டிய எடுத்துக்கங்க..."

பல்லெல்லாம் தெரியக் காட்டிக் கிளாக்கரின் மனைவியைச் சிக்கெனப் பிடித்தாள் அழகி. கிளாக்கருக்கு இதில் வெள்ளோட்டம். ஊரெல்லாம் தளதண்ணிப் பாடம். இவர் இங்க வந்து தான் தோணியில் பாய் விரித்தார்.

"நாங்க குடுக்கிறல்ல மனுசி" என்று வழுவினார் கிளாக்கர்.

"இல்லய்யா ஒங்கடக் காலப் புடிச்சன் நிறைஞ்ச ஊட்டில இல்லண்டு சொல்லாதீங்க. புள்ளயளுக்குப் புண்ணியம் கெடைக்கும்." அவள் குந்தி விட்டாள்.

"ஆ...."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் வேற இடத்தில வெய்க்க மாட்டன் ஐயா ஒங்கட மொகத்தப் பாத்தாத் தெரியும் நல்ல மனம். வாங்கிற இடத்தில வாங்க வாங்கனும். தின்னுற இடத்தில தின்னனும். அதுதான் தக்கும்"

கிளாக்கரின் மனதை இளகப் பண்ணிவிட்டாள். அதை வாங்கிய அவர், உள்ளங்கையில் வைத்து மேலே தட்டித்தட்டி ஓரளவு நிறுத்துப் பார்த்தார், காற் பவுண் தேறும் என்று மனம் சொல்லிற்று. சீமேந்துத் தரையில் குனிந்து போட்டு ஓசையையும் கூர்ந்து கேட்டார்.

"குடுக்கிறதண்டாக் குடுங்களன் அது நல்ல தங்கம்" அழகியின் பல்லவிக்கு அனுபல்லவி பாடினான் கிளாக்கரின் மனைவி.

"சரி..." என்று அறைக்குள் போனவர் நூற்றி எண்பத்தெட்டு ரூபா இந்தா..." என்று கொடுத்தார்.

"உங்களுக்குப் புண்ணியம் கெடைக்கும். நான் மூளாட்டி எடுத்துக்கங்க ஐயா" என்று விசுக்கென நடந்து விட்டாள்.

ஒருமாதம் ஓடிற்று "ஐயா" என்று பரிவோடு அழைத்தாள் சௌந்தரம். ஒங்கட காசில இந்தாங்க நூறுரூபா வெச்சுக்கங்க..." என்று கொடுத்து விட்டு அவசரமாகப் போய்விட்டாள்.

அடுத்த மாதமும் அதே திகதிக்கு வந்தாள். ஒரு ஐம்பது ரூபாத் தாங்கய்யா... கடலிலயும் ஒன்றும் படல்ல..." என்று இரந்தாள். நாற்பத்தேழு வாங்கினாள். இரண்டு மூன்று நாளைக்குக் காணும் என்று நடந்து விட்டாள்.

திரும்பவும் அதே திகதிக்கு வந்தாள். பல்லிழித்துப் பஞ்சம் கூறினாள். நாற்பத்தேழு ரூபாவை மீண்டும் வாங்கினாள். நான் இனி வரமாட்டன் ஐயா!" என்று போனவள் போனதேதான். அந்தப் பக்கம் எட்டியும் பார்க்கவில்லை.

மாதங்கள் உருண்டோடின. ஒருவருடம் முடிந்து இரண்டொரு மாதங்களும் கடந்து விட்டன.

மீண்டும் கடல்தாய் அள்ளிக் கொட்டத் தொடங்கினாள். பல தோணிகள் தூர இடங்களில் இருந்து வந்து வாடிகள் போட்டு விட்டன. நெத்தலி மடி விம்ம விம்மக் கரை ஏறிற்று. வந்தவர்கள், போனவர்களும் கையிலே சுமையோடு போயினர். வீடுகள் எங்கும் பொரியல் மணம். கிடுகு வண்டிகளும் சாரி சாரியாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊருக்குள் வந்து இறங்கின. சீமேந்து வேக்குகளும் வாகனங்களில் வந்து பறிபட்டன. அரிசிக்காறிகளுக்கும் பழைய நிலுவைகளும் கிடைத்து விட்டன. எல்லாருடைய முகங்களும் புதுப் பொலிவு காட்டிற்று. மூன்று வேளையும் அடுப்பெரிந்தால் முகம் மலராது விடுமா? மாலையில் சந்திகள் தடம்புரளத் தொடங்கின.

சௌந்தரம் கொழுத்து விட்டாள்.

அன்று மாலை கிளாக்கர் கந்தோர்விட்டு வீடுவந்திருக்கும் வேளை "ஐயா..." என்று ஓடிவந்தாள் அவள்.

"இந்தாங்க ஒங்கட காசும் வட்டியும் இருநூறுரூபா என்ர தோட்டக் கெதியாத் தாங்க..." அவள் வார்த்தை சற்றுத் தடிப்பேறி வந்தது.

"என்ன... நீ... இருநூறு ரூபாய் வாங்கி இருக்கிறாய். ஒருவருசத்துக்கு மேல் போயிற்று. இந்த ஊரில பத்துச்சதம் வட்டி நடக்குது. நான் ஆறு சதந்தான் போட்டிருக்கன். மொத்தம் முந்நூற்றி ஐம்பது ரூபாக் கொடுத்தா தோட்டத்தருவன். மிச்சம் நூற்றி ஐம்பதுரூபா எடுத்திட்டுவா." என்றார் கிளாக்கர்.

"நான் இருநூறு எடுத்து நூறத் தந்திட்டன். என்ட கணக்கில் நூறு ரூபாதான். வட்டி நூறு ரூபா தான். அதுதான் இருநூறு தந்திருக்கன். எண்ட தோட்டத் தாங்க.

"இல்லல்ல நீ... இருநூறுக்கு வெச்சி... நூறத் தந்திட்டு... பிறகு ஐம்பது ஐம்பதாக இரண்டுதரம் வாங்கி இருக்கிறா. மொத்தம் இருநூறு ரூபாவுக்கு... வட்டியக் கொண்டுவா..."

"என்னய்யா... பொய்சொல்லிறயள்?"

"யாரு பொய் சொல்லிறது? நீயா? நானா?"

"என்ன நீங்க முழுப் பூசணிக்காய சோத்துக்க மறைக்கிறயள்?"

"என்ன... விரட்டிறயா? கொப்பியில எழுதி வெச்சிருக்கன் பாரு!"

"ஓமம்பி... பேப்பரும் பேனையும் கையில இருந்தா எப்பிடியும் எழுதலாம். ஆர வெரட்டப் பாக்கயள். நான் கருவாடு கூட்டி... மீன் பொறக்கி வெயில் குளிச்சிச் சேர்த்த காசி என்ற காசி. ஒங்களப் போல சும்மா வாற காசில்ல"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஏய்... கதைக்கிறத்த அளந்து பேசு... தெரியுமா?”

“என்ன கிளாக்கர் என்ற நகைய அபகரிக்கப் பாக்கயளா? ஒன்னப் போல மனுசன நான் காணல்ல. குளிர்ந்து கொல்லிட்ட வந்த நான். எண்ட மனுசன் அறிஞ்சாரெண்டா சும்மா உடமாட்டாரு. அவர் கோடுகச்சேரிக்குப் பயந்த ஆளில்ல... தெரியுமா?”

“என்ன நீ... கனக்கப் பேசிறா?... காசக் கொண்டுவந்தா... தோட்டத் தருவன். போ வெளிய...!”

“ஆ... நான் விதானையிட்டப் போறன். சமாதானக் குழுவக் கொண்டுவாறன். நீயும் ஒரு கிளாக்கரா? சத்தியம் பண்ணவேணும். ஏழைகள் எல்லாரும் வெரட்டிப் பணம் ஒழைக்கப் பாக்காங்க...!”

தெருவெல்லாம் அவள் சத்தம் கிடுகிடுத்தது. ஒலிபெருக்கி இல்லாமல் ஊரைக் கலக்கி விட்டாள்.

கிளாக்கர் வாயடைத்துப் போனார். இவள் காசு வாங்கும் போது எவ்வளவு பணிவாக வந்து கெஞ்சினாள்? பஞ்சப் பாட்டுப் பாடிப் பணம் வாங்கியவள் அதை மீளும் போது சண்டிராணி ஆகி விடுகிறாள்.

இவளின் செயல்களைப் பார்த்துப் பிரமித்த கிளாக்கர், அவளின் பேச்சுகளைக் கேட்டதும் கண்கலங்கினார்.

அழுது கொண்டு போனாள் சௌந்தரம்.

அவள் கிளாக்கரைக் பற்றி ஊரெங்கும் அவதூறு செய்தாள். காண்பவரிடமெல்லாம் தான் சொல்வதெல்லாம் சரியென்றே வாதிட்டாள்.

“தம்பி அவள் அப்படித்தான் சூரப் பத்தையில நல்ல சீலையப் போட்டிட்டீங்க நூதனமாக் கழற்றிப் போடுங்க. இல்ல... கையிலயும் காயம் வரும், சீலையும் கிழிந்து போகும். நீங்க படித்தவர்? மரியாதை குறையாம அவள்ர விசயத்தை முடிச்சுப் போடுங்க.

கதிராமனும் அழகியும் நம்மைப் போன்றவர்தான். உழைத்து வாழ்ந்து ஓடாய்ப் போனவர்கள். வட்டி வளர்ந்து கழுத்தைப் பிடித்தால் மீளமுடியாமல் பொய் பேசுகிறாள். வரட்டும் பார்ப்பம். கிளாக்கர் சிந்தித்து முடிவுக்கு வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலைந்து நாட்களுக்குப் பின் சமாதானக் குழுத்தலைவர் கிளாக்கரின் வீடுவந்தார்.

"ஐயா உங்களுக்கு ஒரு வழக்கிருக்கிறது. சௌந்தரம் ஒரு முறைப்பாடு தந்திருக்கிறாள், தோடு ஈடுவெச்சதாம் காசெல்லாம் வாங்கிற்று ஈடு தரமாட்டன் என்கிறயளாம். அதக் கொடுத்திருங்க. அவள் இல்லாதவள் பாவம்.

கிளாக்கர் புன்னகைத்தார். பசி பட்டினிக்கு முகம் பார்த்தம். அவள் நூறு ரூபா வாங்கவில்லை என்கிறாள். சரி... நான் தோடு கொடுக்கத்தான் இருந்த அவள்ற வாய் கொஞ்சம் நீளம். எனக்கும் நட்டம் தான். போகட்டும். அவளுக்கும் கஸ்ரந்தான். உழைக்கிறவங்க நிமிரமுடியாமத்தான் இருக்கு. இந்தாங்க தோடு. மத்திக்கத்துக்கு ஒரு ஆள் வேணுமெண்டுதான் இருந்த நான். சரிதானே" கிளாக்கர் வந்தவரிடம் தோட்டைக் கொடுத்தார்.

வாங்கிய தலைவர் சௌந்தரத்தைக் கூப்பிட்டு இந்தா உன்தோடு என்று கொடுத்தார். இருவரும் வெளியேறினர்.

தலைவரோடு சிரித்துப் பேசிக்கொண்டு போகிறாள் அந்த சௌந்தரி.

தோணிகள் மாறி மாறி வளைவதும் வலைக்கால்களை இழுப்பதும் வேகமாக நிகழ்கின்றன. மடிகள் விம்மிப் புடைத்து வெடித்து வழிந்த அக்கடற்கரையில் தற்போது வெறும் மடிகளே கரை ஏறுகின்றன.

நன்றி :
வீரகேசரி 22.11.1987



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

# பச்ச மண்

அப்பாக்கு என்னோடதான் உயிர். எனக்கு ஒருநாளும் ஈர்க்கிலாலயும் அடிச்சிருக்கமாட்டார். "மகள் வாங்க" எண்டுதான் கூப்பிடுவாரு. கூப்பிடக்குள்ள அவர் முகம் விரிஞ்ச றோசாப் பூப்போலான் இருக்கும்.

அவர் குளிக்கக்குள்ள என்னத்தான் கூப்பிட்டுக் குளிக்கவாப்பாரு. சாப்பிடக்குள்ளயும் பக்கத்திலான் இருப்பன். அப்பதான் அவருக்குப் 'பத்தியம்' எண்டு சொல்லுவாரு. எனக்கும் அப்பிடித்தான். அக்காமாரோட சாப்பிடக் குந்தினா 'கண்வெய்க்குங்கள்' அவியளுக்குப் பகிடியும் ஒரே சிரிப்பும்தான்.

"நீ... அப்பாடா புள்ளயா? அம்மாட புள்ளயா" எண்டு கேட்பாரு. நான் டக்கெண்டு அப்பாட புள்ளயெண்டு சொல்லுவன். அது தான் எனக்கு விருப்பம். விருப்பம்தானே வாயிலே உடனேவரும்.

"உன்ன ஆரு பெத்த மனே?" அப்பா பெத்த. "எங்க பெத்த" ஆஸ்பத்திரியில எண்டு நான் ஒரே சொல்லுவன். எனக்கு அப்பாதான் வேணும். ஒழைச்சித்தாற அப்பா. படிப்பிக்கிற அப்பா. தங்க அப்பா.

அவர் சிரிச்சுப் போட்டு அள்ளிக் கொஞ்சுவாரு. குஞ்சுக் கோழிய தாய்க்கோழி சிறகுக்க வெச்சி மூடுறாப் போல என்னய ரெண்டு கையாலயும் நெஞ்சில வெச்சி மூடுவாரு.

என்னப் போலான் சின்னக்காவும் முதல்ல சொன்னாவாம். இப்ப அதெல்லாம் மறந்திட்டாவு. அவ ஏழாம் ஆண்டு படிச்சாலும் எல்லாம் மறந்திட்டுத்தான் போகுது. சில ராவையில அப்பாக்கிட்ட அடிவாங்குவாவு. முதுகிலயும் காலிலயும் நல்லா உழும். ஏங்கி ஏங்கி அழுவாவு. ஆனா நான் ஒருநாளும் அடிவாங்க மாட்டன் கேள்விக் கெல்லாம் சரியாத்தான் விடை எழுதுவேன். எண்ட எழுத்தும் அச்சா எழுத்துத்தான் என்பாரு.

நான் அப்பாட புள்ளயெண்டா அம்மாக்குக் கோபம் வரும் 'ஓ... ஓ... சரிதான் இரவைக்கு எங்க படுக்காயெண்டு பாப்பம்? எண்டுமுறைப்பாவு. அவட முகம் இப் பெண்டுதான் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்தக் கெழயள் பொறக்கக்குள்ளயும் 'ப்பா?... ப்பா' எண்டு தான் கத்தினதுகள். இதுகள் ஒருசாதியான பொறப்புகள் என்பாவு" அந்நேரம் பார்த்தா... சொட்டுப்போல எண்ணெயில பெரியக்கா பொரிக்கிற பப்படம் போலான் அவட முகம் மாறும். அம்மாக்கு அப்பாவோட கோபந்தான். எண்டாலும்... முட்டப் பொரியலும் முருக்கங்காக்கறியும் அப்பாக்குத்தான் அள்ளி அள்ளி வைப்பாவு.

பெரியக்காவும் அண்ணனும் என்னப் போலான் சொல்லி இருப்பாங்க. இப்ப அவியளும் அத மறந்திட்டாங்க. கணிதம் விஞ்ஞானம் எண்டு ஓடி ஓடி டியூசனுக்குப் போறாங்க. நான் பெரிய பெரிய புத்தகங்களப் படிச்சாலும் அப்பாவ மறக்கமாட்டன். அவிய 'டீ' எடுக்காட்டியும் நான் எல்லாத்திலயும் 'டீ' தான் எடுப்பன். தமிழ், கணிதம், சுற்றாடல் எல்லாம் எனக்குத் தொண்ணூத் தெட்டுத்தான். அப்பாதான் நூறு போடப் பொடா தெண்டு டீச்சருக்குச் சொன்னதாம். டீச்சர் ஒருநாள் வகுப்பில கதச்சாவு.

என்ன மட்டுந்தான் அப்பா மடியில தூக்கி வெச்சி செல்லம் கேப்பாரு. எல்லாரும் சிரிப்பாங்க, அவியளுக்கு என்னோட எரிச்சல்தான். அவியளும் தொண்ணூத்தெட்டு எடுத்தா என்ன? எல்லாம் வாங்கிக் கொடுப்பாரு தானே அப்பா.

எனக்கு அப்பா கேக்கிறதெல்லாம் வாங்கித்தருவாரு. வேக்கு சப்பாத்து, சின்னக்குடை, வெள்ளச்சட்டை, கலர்பெட்டி, மணறேசர் எல்லாம் உடனே வாங்கித் தருவாரு. காசில்லாட்டிப் பக்கத்தில இருக்கிற சில்லறக் கடயில கடனுக்கு வாங்கிக்க என்பாரு. நான் போய்க் கேட்டா எதுவும் இல்லண்டு சொல்ல மாட்டாங்க. நான்தான் அப்பாட புள்ளயெண்டு அவியளுக்கும் விளங்கும்.

இந்தப் பள்ளியிலயும் சேர், டீச்சர், பிள்ளைகள் எல்லாரும் என்னோட விருப்பம்தான். பெரிய சேர்ர பிள்ள நல்லகெட்டிக்காரி எண்டு கொண்டாடுவாங்க. நானும் அவியளோட நேசந்தான். விசுக்கோத்துக் கொடுக்கிற நேரம் இந்தக் காகமெல்லாம் எங்கிருந்துதான் வருகுதோ தெரியாது. விசுக்கோத்துமணி அதுகளுக்கும் கேட்குமாக்கும். இல்லாட்டி மணம் குடிச்சு வருகுதோ? கீழ விசுக்கோத்த வெச்சா எங்கஇருந்தாலும் எறும்பு மணத்திலானே வருகுது. ஒண்டு கத்தினா ஒன்பது வரும். ஒன்பதும் கத்தினா... எத்தின காகங்கள்? காகம் வாறாப் போலான் எனக்கு நெனைப்பெல்லாம் வருகுது.

விசுக்கோத்து வாங்கினா எங்களுக்கு ஒரே குதுகலந்தான். சுபாசினி, கலா, சசி, சுகுணா எல்லாரும் ஓடிப்பிடித்து விளையாடுவம். அவிய பெரிய வகுப்புத்தான் எண்டாலும் அதுகளோடதான் நான் விளையாடுவன். நான் ஒரு நாளுமே பள்ளிக்கு வராம இருக்கிறதல்ல. எனக்கு பள்ளியெண்டா நல்ல விருப்பம். சின்னக்காவப் போல சில நேரம் பள்ளிக்குப் போகாம நிற்க மாட்டன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில நாளையில அப்பா பள்ளிக்குவந்து இடாப்பக் கூப்பிட்டுப்போட்டு கூட்டத்துக்கு போவாரு. அந்நேரம் மத்த சேர்தான் அதிபர் மேசையில இருப்பாரு. சம்பளத்துக்குப் போனாரெண்டா வரநேரம் செல்லும். அந்த நாளையில நான் காண்டியோடதான் வீட்ட போவன். அவன இன்னும் இடாப்பில எழுதல்ல. நானும் போனவருசம் அவனப் போலான் இருந்த, ஆனா எண்ட பேர அப்பா கூப்பிடுவாரு. பிறசன் சேர் எண்டு சொல்லுவன். காண்டி வாசிக்கமாட்டான். நான் எல்லாருக்கும் பாடம் சொல்லிக் கொடுப்பன். கரும்பலகையில அப்பான அழகான எழுத்தில, படம் போட்டு எழுதுவாரு. நான் கம்பால தொட்டுத் தொட்டு எழுத்தக் கூட்டிச் சொல்லிக் கொடுப்பன் அந்நேரம் எல்லாரும் என்னத்தான் பார்ப்பாங்க.

அப்பா இல்லாட்டிக் காண்டியோட கிறவல் றோட் றோட்டால போவன். போனா... சர்வோதயப் பள்ளிவரும். அந்த மூலையால கிறுகி புதுறோட்டில ஏறினா தார் றோட்டுக்குப் போவன். பிறகு துறுவாப் போனா எங்கட வீடுதான். நான் போகப்பிந்தினா அண்ணன் சைக்கிள்ல வந்து என்னய ஏத்திட்டுப் போவாரு. ஆனா அவருக்கு ரெண்டு விசுக்கோத்துக் கொடுக்கணும். இல்லாட்டிக் கிள்ளிப் போடுவான்.

அப்பா லீவு போட்டா நான் பள்ளிக்குப் போகப் போறன் எண்டுதான் கத்துவன். அம்மா புதிய றெசின் கவுணப் போட்டிட்டு என்னக் கூட்டிற்றுப் போய் நெசவடிக்கிற வீட்டுக்குக்கிட்ட உடுவாவு. அவடத்த நிண்டுபாத்தா பள்ளி நல்லாத் தெரியும். ஆம்பிளப் புள்ளயள் ஒவ்வொரு கம்புத்துண்டத் தூக்கிற்று அதிரடி விளையாட்டு விளையாடுங்கள். பொம்பிளப் புள்ளயள் அடிச்சுப் புடிச்சு விளையாடுங்கள். நான் ஒரே ஓட்டமா வருவன்.

அம்மாவோட வரக்குள்ள எத்தின பேருதான் கேப்பாங்க. "என்னக்கா... ஐயா லீவா?" என்பாங்க. "இல்ல அவரு கூட்டத்துக்குப் போயிட்டாரு. இவள் விடுறாள் இல்ல... கூட்டிற்று வாறன்" என்பாவு. அவியளும் என்னப்பார்த்து... "ஒங்கட மகள் நல்ல கெட்டிக்காரிதான்" எண்டு சொல்லுவாங்க. எனக்குச் சந்தோசந்தான். நான் அப்பாட பேரெடுக்கத்தானே வேணும்.

நான் எடுக்கிறதெல்லாம் வாசிப்பன். அப்பம்மாட சாவுக்கு அச்சடிச்ச பாட்ட அப்பாவப் போல படிப்பன். மாமிர ஊட்ட போனா அம்மாச்சிர 'ரேப்' வருகுது என்பாங்க. அந்தப் பாட்டப் படிக்கச் சொல்லிப் புடிப்பாங்க. நான் பாக்காம 'எங்களை வாழவைத்த இணையிலா... ஒளியே தாயே தங்கமே மாரிமுத்தே...' எண்டு படிப்பன். அவியளுக்கும் கண்ணால தண்ணிவரும். பால் தேத்தண்ணி தருவாங்க. நல்லாப் படிச்சாளா வந்தா எவர்ர ஊட்ட போனாலும் பால்தான் தருவாங்க.

போன கெழம அப்பாவத் தேடி வந்தாக்களுக்கு பால் கொடுக்கக்குள்ள... "எங்கட மகள் நல்ல கெட்டிக்காரி... ரெண்டாம் ஆண்டில படிக்காள் – ஆனா...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தாம் ஆண்டுப் புத்தகம் வாசிப்பாள்..." எண்டாரு அப்பா... "எங்க பாப்பம்" எண்டு அவியளும் கேட்டாங்க. "புள்ள வாங்க" எண்டு கூப்பிட்டாரு அப்பா. "அந்தப் பத்தாம் ஆண்டுத் தமிழ எடுத்து வாசித்துக் காட்டுங்க..." எண்டாரு. எனக்கு வெக்கந்தான் எண்டாலும் நான் கெட்டிக்காரி எண்டு காட்டயும் வேண்டுமே அதோட அப்பாட மானத்தையும் எடுக்க வேணும். அப்பா சொன்னாரு "மகள் இவங்க போய் அவங்கட வீடெல்லாம் உங்களப் புழுகிச் சொல்லுவாங்க படிச்சுக் காட்டுங்க" எண்டாரு. புழுகினா நல்லது தானே. ஆருதான் வேணாம்பாங்க. நான் கடகடண்டு வாசிச்சன். அவங்க எண்ட சொக்கில கிள்ளிப் போட்டு "மருமகள்... அப்பாவப் போல பெரிய எடத்துக்கு வரணும் ஆ..." எண்டு சொல்லிற்றுப் போனாங்க நான் அப்பாட பேரயும் பாக்கக் கூட எடுப்பன்... அப்பா... நல்ல அப்பா...

இப்ப முதலாம் தவணப் பரீட்சை நடக்குது. நாங்க இண்டைக்கு நேரத்தோட வந்திட்டம். அப்பாட சைக்கிள் இப்பகாத்துப் போறல்ல போன கெழம சம்பளத்தில இணக்கிப் போட்டாரு.

இந்த முதலாம் தவணையில் நான் முதலாம் ஆள்தாள். ரெண்டாம் ஆண்டில எல்லாத்திலயும் முதலாம் ஆளா வந்திட்டா இனி எல்லா வருசமும் முதலாம் ஆள்தான். ஏ.எல் பாஸ் பண்ணினா பிறகு கெம்பஸ். அதுக்குப் பொறகு நாங்களும் பணக்காரர்தான்.

பிள்ளைகள் எல்லாம் வந்திட்டு. சோதின யெண்டா எல்லாரும் வருவாங்க. மத்த நாளயில சிலர் கடற்கரைக்குப் போவாங்க அவியளுக்குக் கடற்கரையும் பள்ளியும் ஒண்டுதான்.

எங்கட டீச்சரத்தான் இன்னும் காணல்ல. அவ மட்டக்களப்பில இருந்துதான் வருவாவு. அப்பாக்குப் பொறகுதான் அவ வாற. சில நாளையில அவவோட அப்பா சண்டையும் புடிப்பாரு. நான் அம்மாவிட்டப் போய்ச் சொல்லுவன் "அவர் சம்பளத்துக்கிட்ட அப்பிடித்தான்" என்பாவு அம்மா.

இடையில கொமாண்டஸ் சோதிக்கிறதாம். எத்தனையோ இடத்தில இறங்கி ஏறணுமாம். சில நேரம் குண்டுகள் வெடிச்சா வரமாட்டாவு. தந்திதான் வரும். இண்டைக்கு மட்டக்களப்புக் கிங்கால குண்டு ஒண்டும் வெடிக்க வெச்சிராத முருகா. இன்னும் சமயமும் கைவேலேயுந்தான் இருக்கு. ரெண்டு பாடமும் முடிஞ்ச பொறகு... அதுவும் றிப்போட் தந்த பொறகு குண்ட வெடிக்கவெய் கடவுளே... றிப்போட் தந்தா... லீவுதானே... லீவில் டீச்சர் வரமாட்டாவு.

லீவுக்குள்ளே கொடக்கிற குண்டெல்லாத்தையும் வெடிக்க வெச்சிரு முருகா! ஒரு மாத லீவு எல்லாக் குண்டும் வெடிக்கக் காணும் தானே. அப்ப குழப்பமும் முடிஞ்சிரும். குழப்பம் முடிஞ்சிருமெண்டா எவ்வளவு சந்தோசம். பிறகு டீச்சர் தந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்காம வருவாவு. அப்ப நான் கடைசிச் சோதினயிலயும் முதலாம் ஆளா வந்திருவின். ரீச்சர் படிப்பிக்கிறது நல்லா விளங்கும். டீச்சரும் அப்பாவப் போலான். எனக்கு அடிக்க மாட்டாவு. நல்ல டீச்சர்.

போன வெள்ளிக் கெழம... இண்டைக்கு என்ன பாடமெண்டும் சொல்லலல்ல சமயமெண்டா விடமாட்டன். எல்லாந்தெரியும். அதிலயும் தொண்ணூத்தெட்டுத் தான் கிடைக்கும். அப்பம் முப்பழம் தெரியும். ஆறு தீப்பொறிகள் விழுந்தது சரவணப் பொய்கையிலானே. மட்டக்களப்புக் கிங்கால சரவணப் பொய்கை இல்லையாக்கும். இல்லாட்டிக் குண்டுகள் வெடிக்கக்குள்ள எத்தின தீப்பொறிதான் கிளம்பி இருக்கும். கடைசியிலதான் குளமெல்லாம் குழந்தைகள் நிறையுமா? பெரிய பெரிய தீப்பொறிகள் கிளம்புமா?...

ஓ... அப்படிவந்தா... எங்கடா ஊர்க்குளமெல்லாம் பிள்ளைகளாப் போகுமா?... என்னப்போல வெள்ளைப் பிள்ளைகள் வந்தா எல்லாரும் விரும்புவாங்க. எங்கட பள்ளியும் நெறஞ்சி போகும். இந்தப் பள்ளி நெறஞ்சா இன்னொரு பள்ளி கட்டுவாங்க. கனக்க டீச்சர் மார் போடுவாங்க... எங்கட பள்ளியும் மகா வித்தியாலயமாப் போகும்.

இதுகள் என்ன பூக்கட்டிற்று வந்திருக்குகள்? டீச்சர் இண்டைக்கு என்ன பாடம் எண்டும் சொல்லல்லே? அவியட ஊட்டில இருந்ததையும் கொண்டு வந்திருக்காங்க. நானும் நெனச்சிருந்தா... பெரியக்கா கட்டின பூக்கள் அலுமாரிக்குள்ள இருக்கு. கொண்டுவந்திருப்பன். இவிய நல்லாக் கொண்டு வந்திருக்காங்க. சின்னச் சின்னப் பேணிக்குள்ள மண்ண வெச்சிக்குத்திரிக்காங்க. ஈக்கில், கத்தரிக் கோல், பசை, நிறப் பேப்பர் நூலும் கொண்டுவந்திருக்காங்க.

போன வருசம்... பள்ளிக்கு மதில் எடுக்க எம்பிக்கு சேர் போட்ட மாலையப் போலயும் கொண்டு வந்திருக்காங்க. ஒருவேள அவியளும் எம்.பி.க்கு மாலை போட்டிருப்பாங்களாக்கும்.

எனக்குத்தான் ஒண்டுமில்ல. அப்பாக்கிட்ட நேரத்தோட சொல்லி இருந்தா வாங்கித் தந்திருப்பாரு. நான் ஒவ்வொருநாளும் சாமிபடத்துக்கு முன்னால நிண்டு கும்பிடக்குள்ள... அப்பாவக் காப்பாத்து முருகா... எண்டு தானே கும்பிடுற.

கடவுளே முருகா... எங்களையும் அப்பாவையும் காப்பாத்து... எங்களுக்கு நல்ல சுகத்தையும் படிப்பையும் தா... குழப்பத்தை நிப்பாட்டு... சம்பளத்தையும் வரக்காட்டு முருகா... எண்டுதானே நான் ஒவ்வொரு நாளும் கேக்கிற... நல்லாக் கேட்டாக் கடவுள் தருவாருதானே.

ஆ... டீச்சர் வந்திட்டாவு... சபேசனும், மதனும் ஓடிப்போய் டீச்சரிட்ட என்னமோ கேக்கிறாங்க. ஓ... இண்டைக்கு என்ன பாடம் எண்டு கேட்டிருப்பானுகள். அவனுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே துடிப்புத்தான். எண்டாலும் மத்தப் பாடங்களில என்ன அடிக்கல்ல. ஆலையடிப் பிள்ளையாரே நான் இண்டைக்கும் முந்தவேணும்.

வகுப்புக்கு வந்த டீச்சருக்கு 'குட்மோனிங்' சொல்லிறம். டீச்சரும் 'குட்மோனிங்' சொல்லிறாவு. பிறகு முதல் பாடம் கைவேலை... எல்லாரும் ஆயத்தமா?'' என்கிறாவு.

எனக்கு நெஞ்சு பக்கெண்டது. குண்டு பள்ளிக்குள்ளதான் வெடிச்சாப்போல இருந்திச்சு. பள்ளியே இடிஞ்சு தலையில விழுந்தாப் போலான் வந்திச்சு. கண்களில் தண்ணீர் கசியுது. தலையும் விண்விண்எண்டு இடிக்குது. அதற்குள்ள நந்தன் மணியும் அடிச்சிட்டான். ஓடிப்போய் வரிசையில நிற்கிறம். தேவாரமும் பாடசாலைக் கீதமும் முடிந்தது. அதிபர் ஏதோ சொன்னார். எனக்கு ஒன்றுமே விளங்கல்ல, மற்ற மணியும் அடித்தது. வரிசையாய்ப் போய் என்ற இடத்தில இருக்கிறன்.'' வனிதா... ஏன் குழறுகிறாய். கைவேலைச் சாமான் கொண்டு வரல்லயா? போ... போ... உங்கட அப்பாட்டப் போய்ச் சொல்லு பாப்பம்'' என்று டீச்சர் சொன்னதும் ஒரு ஆறுதல் வந்தது. ஓடிப்போய் அப்பாடா மடியில விழுந்து விம்மி அழுதன். நான் இப்பிடி ஒரு நாளும் அழவே இல்ல. அப்பாக்கும் விளங்கல்ல, அவர் பயந்து போனார். "என்னபுள்ள?'' என்று கேட்டாரு. நான் கை வேலச் சாமான் கொண்டுவரல்ல... எல்லாரும் செய்யுறாங்க எண்டன். என்னைப் பார்த்த உடனே அப்பா எழும்பிற்றாரு.

'சரி' என்று மத்த சேரிடம் ஏதோ சொல்லி எழுதினாரு. என்ன வெளியே அழைத்துக் கொண்டுவந்தாரு. "புள்ள நீங்க போய் அந்தாரிக்கிற பள்ளி வேலியில ஒல கட்டி இருக்கு ஈக்கில் முறிச்செடுங்கோ என்றாரு'' எனக்கு மனம் வரல்ல. இதில் முறிச்சா எல்லாப் பிள்ளைகளும் பார்க்கும் பிறகு "அப்பேய்... இப்பான் முறிச்சிற்று வாறாவு எண்டு சொல்லுங்கள். எனக்கேலாது எண்டு சிணுங்கினத்த அப்பா பார்த்திட்டாரு. சரி நீங்க போய் வகுப்பில இருங்க வாறன்'' எண்டு போட்டு சைக்கிள எடுத்துப் பறந்து போயிட்டார்.

நான் வகுப்பில இருக்கிறன். வீட்டுக்குக் கிட்ட இருக்கிற சில்லறக் கடையில வாங்கி வருவாரு. இல்லாட்டிச் சந்திக் கடைக்குப் போவாரு. அம்மாட்டச் சொல்லுவாரு. அவகிணத்தடியில நிக்கிற சின்னத் தெம்பிலியில் பச்ச ஈக்கில் கிழிச்சு வாந்தெடுப்பாவு. நூலும் கத்தரிக்கோலும், பட்டுக்கடதாசியும் பசையும் வாங்கி வருவாரு. சந்திக்கடையிலயும் பட்டுக் கடதாசி இல்லாட்டி வாங்கிற்றே வராட்டி எண்ட தலை வெடிச்சிடும். இல்ல அப்பா கட்டாயம் கொண்டு வருவாரு.

ஓ... அப்பா வேருத்து விறுவிறுத்துப் பார்சலோடுதான் வாறாரு. வகுப்புக்குள் வந்து "வனிதா'' என்று கூப்பிடுறார். ஓடிப்போய் வாங்குகிறேன். ஈர்க்கில், பசை, பூக்கடதாசி, கத்தரிக்கோல், நூல் எல்லாமே இருக்கிறது. எனக்குக் கோயில்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமியக் கண்டாப் போலான் இருக்கு. அப்பா... நல்ல அப்பா... இனி நான் விடமாட்டன். இதிலயும் ஏ எடுத்திட்டனென்டா... நான் அப்பாவப் போலான் வருவன்.

கடகடத்துப் பூ வெட்டிக் கட்டுறன். சிவப்பு, றோஸ், பூக்கள் பல்லுப் பல்லான பச்சை இலைகள், ஈக்கிலின் தொங்கலை மடக்கி பூக்களைச் சுருட்டிச் சுருட்டிக் கட்டுறன். இலையை ஒவ்வொன்றாய் வைச்சு. பச்சைப் பேப்பரால் ஈர்க்கிலைத் தண்டாகச் சுற்றும்போது என்ன அழகு? கைபட்டாக் கைலாசந்தான். அப்பா சொல்லுவாரு. ஐந்து பூக்களைச் சுறுக்கா முடிச்சிட்டன். பெரியக்காவும் இப்பிடித்தான் செய்வாவு.

மணியும் அடித்திற்று.

டீச்சர் "கொண்டுவாங்க பிள்ளைகள் என்கிறாவு. மற்றவர்களோடு எனது பூக்களையும் எடுத்துக்கொண்டு வரிசையில் நிக்கிறன். அப்பா வந்து வளைச்சிட்டுப் போறார். டீச்சர் சிரிக்கிறாவு. அவட சிரிப்பு... அப்பாட சிரிப்புப் போலான் இருக்கு.

"பிள்ளைகளே... நீங்களெல்லாம் பச்சமண்கள். இப்போதே ஒழுங்காகப் பிடிபட்டால்த்தான் பிற்காலத்தில் சிறப்பாகப் பிரகாசிப்பீர்கள். கைவேலய இங்கேயும் கொண்டுவந்து செய்யணும் எண்டது அதுதான். எப்போதும் உண்மையோடு வாழுங்கள் உயர்வு நிச்சயம் கிடைக்கும்!" எண்டாவு டீச்சர்.

எனக்கு ஒரே சிரிப்பு வருகிறது. கைவேலையிலும் எனக்கு ஏ நிச்சயம் கிடைக்கும். றிப்போட் கிடைக்கு மட்டும் குண்டுகள் வெடிக்கப் பொடாது முருகா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

# மேட்டு நிலம்

காட்டுப் பள்ளி என்றே அதை எல்லாரும் செல்லமாக அழைத்து வந்தனர். ஊர்ப்பள்ளி ஒன்று மாரியம்மன் கோயிலுக்கு சற்றுத் தூரத்தில் துறை அருகே நிலைபெற்றுள்ளது.

காட்டுப்பள்ளியில் சேவையாற்ற சுப்பிரமணியத்துக்கு ஒருகாலத்தில் ஆசை. வெளியூரில் கடமை புரிகையில் அக்கிராமாட்சி மன்றத் தலைவரைத் தேடி வந்தார். அது அப்போது கண்ணில் குத்திற்று.

அம்மன்றத்தின் எதிரே பற்றைக் காடுகளும் இலுக்குச் சோலையும், இடையிடையே புற்றுக்களும் அப்பள்ளிக்கு அரணாய் அமைந்து கிடந்தன. அதனைச் சூழவும் வானம் பார்த்த பூமிகள் திட்டு திட்டான வரம்புகள். பாய்ச்சலற்ற மேட்டு நிலங்கள்.

அது காசியப்பனின் கோட்டையை நினைவூட்டிற்று. உள்ளே அழகான நவீன பாணிச் சுவர் ஓவியங்களும் இருக்கலாம். காட்டுப் பள்ளி அது காரணப் பெயர்தான். இயற்பெயர் அ.த.க. வித்தியாலயம்.

இதற்கு அதிபராய் வாய்த்தால் பாடசாலை முடிவுற்றதும் பின்னேரங்களை இலக்கிய நூல்களில் களிக்கலாம். மணியம் மாஸ்ரரின் உள்மனதில் ஓர் ஆசை. நினைப்பவை ஒருநாளில் நிகழவே செய்யும். அதுவும் தூய உள்ளத்தில் மூளைவிடுவது நிச்சயம் விளைந்து கனியும்.

மணியம் மாஸ்ரர் எண்ணியது கைகூடிற்று. வள்ளுவன் கணிப்பில் ஒரு திண்ணியராகி விட்டார். காட்டுப்பள்ளியில் அதிபராகிப் பலமாதங்கள் போயிற்று.

ஐந்து வகுப்புக்களைக் கட்டிக்காத்து மேய்க்கவேண்டும். தாயின் வயிற்றில் இருக்கையில் தன்மகன் ஒரு மேய்ப்பனாக வரவேண்டுமென அவர் தாய் ஆசைப்பட்டிருக்கலாம். கந்தோரில் இருக்கும் தடித்த நெஞ்சத்துருப்படிகள் போடும் தாளங்களுக்குப் பிடிக்காமல் ஆடிக்கொண்டிருந்தார். ஆட்டம் வெகுஜோர். அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உப அதிபர், உதவி ஆசிரியர் எல்லாம் அவரேதான். மூன்று வேட நடிப்பில் அவர் மகா சமர்த்தர். எம்.ஜீ. ஆரும், சிவாஜியும் அவரிடம் பிச்சைதான் வாங்கவேண்டும்.

மேலிடத்துக் கட்டளைகளுக்கிணங்கத் துள்ளிக் குதிப்பார். சுழன்று சுழன்றாடுவார். எல்லாம் கச்சிதமாய் அமையும். பலன்தான் கிட்டவில்லை. பேச்சுத்துணைக்கேனும். ஒரு ஆசிரியக் குருவியும் வந்த பாடில்லை. மனமும் உடலும் சோர்ந்து அடிக்கடி காய்ச்சல் தலை இடி பிடிக்கும். இவருக்குக் காய்ச்சல் வந்தால் காட்டுப் பள்ளிக்கு அரசாங்க விடுமுறை. அவ்வளவு...... அதிபர் நாயகம் அவர். அவ்விடுமுறை தொடர்ந்து நீள்வதும் உண்டு.

"சுகவீனம் பாடசாலை மூடப்பட்டுள்ளது என்று தந்தி பறக்கும். முப்பிரதிகளில் லீவு விண்ணப்பமும் நிரப்பிப் போட்டுவிடுவார். பொதுத்தேர்தலின் போது தனது தொகுதியில் ஒரு கட்சிக்கும், வடக்குத் தொகுதியில் எதிர்க்கட்சிக்கும், தெற்குத் தொகுதியில் மற்றொரு கட்சிக்கும் மும்முரமாக வேலை செய்திருந்தால் வென்றவருக்கு வெடி கொழுத்தி, வரவேற்பில் மாலை போட்டு பிரமுகர் வரிசையில் ஏறியிருக்கலாம். பட்டினத்து உயர் கல்லூரி ஒன்றிலே அதிபராகி ஜாம் ஜாமென வீற்றிருக்கலாம். பெரிய சுகபோகங்களும் கிட்டி இருக்கும். அவருக்குத் தொழில் 'நுட்பங்கள்' போதாது. வாய் ஜாலம் தெரியாது. ஒருவகையில் கையாலாகாதவர்தான். அதுதானே கா – பள்ளி தஞ்சம் கொடுத்து அரவணைத்து வருகிறது.

இத்திடீர் விடுமுறை நாட்களில் பிள்ளைகள் வந்து காத்து நிற்கும். சூரியன் மேலேறிச் சுள் என்று குத்தியதும் "இனி ஐயா வரமாட்டார்" என்று திருப்தியோடு நடையைக் கட்டுவார்கள். சில சின்னஞ்சிறுசுகள் கூப்பன் கடைக்கு முன்னால் போய் நின்று புதினம் பார்க்கும். கண்ணும் மனமும் அலை பாயும். மாசி உடைப்பது, பேரீச்சம்பழம் நிறுப்பது, சீனி கொட்டுவது, கருவாடு வெட்டுவது அவர்கள் கண்களைக் குளிர வைக்கும். கூட்டக்கரைகளில் வரும் மிட்டாய்க்கடைகளைப் போல் அது தெரியும் அவர்களுக்கு.

மற்றொரு கூட்டம் நாலெட்டில் வேகமாய் நடந்து சட்டைகளைக் கழற்றிப் புத்தகங்களோடு கட்டில் வைத்துவிட்டுப் பொத்திப் பிடித்த வண்ணம் வாய்க்காலில் பாயும். நீந்தி விளையாடும். இடை இடையே கட்டில் ஏறிக் குதிப்பார்கள். அந்த வாய்க்கால் மடுவு அவர்களுக்கு ஒரு நீச்சல் தொட்டிதான்.

களைத்ததும் வெயில் காய்வார்கள். உடைபோட்டுக்கொண்டு பஸ்நிற்கும் சந்திக்கு வந்து புதினம் பார்ப்பார்கள். அப்போது தபாற்காரன் தபால் கொண்டு ஊர் நோக்கிப் போவான். தபாற்காரன் தபால் கொண்டுவரும் நேரம்தான் பாடசாலை முடியும் நேரம் என்பது ஊரவரின் நீண்டகாலக்கணிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் படிப்பிலே மூழ்கிக் களைத்து நமது அரும் புதல்வர்கள் வந்திருக்கிறார்கள் என்று உணவு கொடுத்துத் திருப்தி அடைந்தனர் பெற்றோர்.

மணியம் மாஸ்ரரின் ஆரம்ப சூரத்தனம் மங்கி வந்தது. கவலையும் அரிக்கத் தொடங்கிற்று. இப்பாடசாலை ஒரு நாய்வால் நமக்கேன் வீண்வேலை? என்று முன்னிருந்தவர் போல் மூச்சு விடவில்லை. கடிதங்களுக்கு மேல் கடிதங்களே எழுதினார். அந்தக்கை எழுதாமல் இருக்காது. ஒரு நாளைக்கு நாலு கடிதமாவது போட்டு விடும். பாடசாலைத் தேவைகள் தான் தலைப்பாய் இருக்கும். கடிதங்கள் படித்ததும் அத்தேவைகளைத் தீர்த்து விடும் பக்குவம் யாருக்கு இருக்கிறது. இதனால்தான் மேலதிகாரிகள் பாடசாலைகளுக்கு எழு கருவிகளை வழங்குவதில் உலோபிகளாகி விட்டனர். இல்லையேல் மணியம் மாஸ்ரரே ஒவ்வொருநாளும் தபால் பெட்டியை நிரப்பி இருப்பார்.

உடம்பால் பெருத்து உள்ளத்தால் சிறுத்தவர்களைப் பேட்டி கண்டார். அதிபர் கூட்டங்களிலும் தர்க்கித்தார். பயன் விளையவே இல்லை. மூன்று வேடத் திரைப்படம் மட்டும் தொடர்ந்து காட்டுப் பள்ளித் திரையில் ஓடிக் கொண்டே இருந்தது.

கல் நெஞ்சங்களைக் குளிரவைக்கும் 'தண்ணி' பற்றிய அறிவும் அவருக்கு அருமை. உலகியல் என்னும் தேர்வில் இவருக்கு யாரோ 'குதிரை' ஓடியிருக்க வேண்டும். சாதாரணமாக அந்த ஞானம் நாலாம் ஐந்தாம் ஆண்டுதான்.

"என்ன சிங்காரம் உன்ர பிள்ளைகளும் பள்ளிக்கு வருகுதில்ல?"

"அனுப்புறன் ஐயா, வாற கிழம கட்டாயம் அனுப்புறன்"

அவரை வரவேற்று ஆறுதல் கூறி ஊர்ச் சங்கதிகளை ஏற்றி வைக்கும் ஒரே ஆத்மா சிங்காரம். அவன் நல்ல தண்ணீர்ப்பந்தல். கிராமாட்சி மன்றத்தில் தனிச் சிற்றூழியன். அக்கந்தோர்க் கிழாக்கரின் சொல்லுக்கும், மனைவி நாகம்மாவின் கண் அசைவுக்கும் பெட்டிப் பாம்பாய்ச் சுருள்வான். அவர்கள் இருவரும்தான் அவன் உலகம். வேறொன்றும் அவனுக்குப் புரியாது. ஆனால், கள், சாராயம், வடி விற்கும் வீடுகள் மட்டும் மனப் பாடம். கண்ணை மூடிக்கொண்டு ஓடிப்போய் வாங்கி வருவான். எந்த வீட்டில் திறமானது கிடைக்கும். எந்நேரங்களில் கடனுக்கும் வாங்கலாம் என்பதுதான் அவன் பெற்றிருக்கும் வெளி உலக அறிவு. ஒப்பந்தக்காரர்கள் ஒன்றை, அரையை எடுத்து சந்தோசம் கொண்டாட வருவார்கள். அப்போது அவர்களுக்கெல்லாம் சிங்காரந்தான் கையாள்.

மனைவி நாகம்மாதான் அவனுக்கும் லீவுக் கடிதம் எழுதிக் கொடுப்பாள். இவன் தனித்தனி எழுத்தில் ஒப்பம் மட்டும் போடுவான். மனைவி அக்கடிதம் எழுதிய நேரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்கும், அவன் கையொப்பம் வைத்து முடிய. உதட்டை மடித்து ஊன்றி ஊன்றி எழுதுவான். எழுத்து புராதன காலத்தை நினைவூட்டும்.

லீவு போடுவதும் மனைவி கூறினால் மட்டும்தான். கிளாக்கரிடம் ஒருவாரமாக வாயால் விண்ணப்பம் கொடுத்து வாயால் சம்மதமும் பெற்றிருப்பான். அதன் பின்புதான் கடிதம்.

மணியம் மாஸ்ரருக்குத் தலை இடி கூடிக்கொண்டே இருந்தது. பிள்ளைகள் வரவு பூஞ்சீப்பு வாழைக்காய் போலாயிற்று. 'அஞ்சணமை' போட்டும் ஆசிரியர் ஒருவரையும் பிடிக்க முடியவில்லை. ஆறுதலாக லீவெடுக்கவும் வழி இல்லை. தனது ஊரிலிருந்து ஐந்தாறு மைல், பழைய சைக்கிளில் நாயோட்டம் ஓட வேண்டும். ஒரு முடிவுக்கு வந்து விட்டார்.

பாடசாலை அபிவிருத்திச் சபையைக் கூட்டி, ஆனாவில் இருந்து அஃகன்னா வரை புரிய வைக்க வேண்டும். அழைப்புகள் அனுப்பினார். மாணவருக்கும் கட்டளை போட்டார். சிங்காரத்தின் ஒத்துழைப்பும் கிடைத்தது. கூட்டம் தொடங்கிற்று.

வைத்தியர், வட்டவிதானை, பூசாரியார், வாச்சர் என்னும் ஊர்ப் பெரியார்களோடு பத்துப் பன்னிரண்டு விவசாயிகளும் சமூகம் கொடுத்தனர். அதிபர் தன் திட்டமிடலை வெளிக்காட்டினார்.

இந்தச் சுவரில் எழுதி இருப்பதை முதலில் படியுங்கள்.

- இது ஒரு பல்லியா? காதல் மேடயா?
- உண்மை உயற்த்தாது.
- சுந்தரியோடு கூப்பன்கடை மனேச்சர் லவ்.

நான் அழிக்க அழிக்க வசனங்களும் அதற்கேற்ற நவீன பாணி ஓவியங்களும் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. பாலுணர்வைத் தூண்ட சில உறுப்புக்கள் வெளியே துருத்திக் கொண்டிருக்கும். பச்சையான சுவர்ச் சித்திரங்கள். சுவர் எங்கும் கரிமயம். நீங்கள் இப்பாடசாலையில் கவனம் எடுக்கவேண்டும். கல்வியிலே கரிசனை கொள்ளுங்கள். நீங்கள் ஒத்துழைத்தால் இரண்டாசிரியர்களை உடனே எடுக்கலாம். கையைக் கடிக்குமென்றால் கல்விச் செல்வத்தை உங்கள் மக்கள் பெற முடியாது. கார் ஏறிப் பஸ் ஏறிக் காண வேண்டியவர்களைக் காண வேண்டும்" என்றெல்லாம் கூறினார். நிருவாகம் தெரியப்பட்டது. பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

சரஸ்வதி பூசையைச் சிறப்பாகச் செய்வது. அதற்கு நிதி வழங்குவது. வராத மாணவர்களைத் தேடிப் பிடிப்பது. பிள்ளைகளுக்கு நாடகம், கும்மி, பழக்குவது சிங்காரம் இராவண சங்காரம் ஆடுவது. எம்.பி. கிராமோதயசபைத் தலைவரை அழைப்பது – தீர்மானங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சூடு ஆறாமலே மணியம் மாஸ்ரர் நாடகம், கும்மியில் தன்கைவரிசையைக் காட்டத் தொடங்கினார். வராமல் நின்ற பிள்ளைகளும் பாடசாலைக்கு வரத் தொடங்கி விட்டனர்.

மலரும் வந்து விட்டாள். பாடசாலை புதுப் பொலிவு பெற்றுவிட்டது.

மலர் சிங்காரத்தின் மூத்த மகள். அவனுக்கு இன்னும் ஐந்து பிள்ளைகள். ஐந்தாம் ஆண்டிலே அவள் பெயர் பல வருடங்களாக இருந்து வருகிறது. அவளுடைய வயதுக்குப் படிக்க வேண்டிய வகுப்பில் சரி அரைவாசியில் தற்போது இருக்கிறாள். ஒரு மாதத்தில் ஒரு நாள், அல்லது இரண்டு நாட்கள் வந்து வகுப்பிலிருந்து மேலதிகாரி போல் பாடசாலையைத் தரிசித்துப் போவாள். இது அவள் பழக்கம். இப்போ இரண்டொரு மாதங்களாக அதுவும் இல்லை. தேத்தண்ணிக் கடைப்பக்கம் போய் வந்தாள். சரஸ்வதி பூசை, நாடகம், கும்மி என்றதும் அவள் பாடசாலைக்கு நேரத்தோடு வருகிறாள்.

பாடசாலை நேரத்திலும் பின்னேரத்திலும் மணியம் மாஸ்ரர் மும்முரமாக நாடகமும், கும்மியும் பழக்கினார். ஊரெங்கும் பெரிய கொண்டாட்டம்.

மலர்தான் அப்பாடசாலையின் வளர்ந்த மாணவி. அவள் முன்பெல்லாம் ஊத்தையோடுதான் திரிந்தாள். இப்போ கொஞ்சக்காலம் புது மெருகு. எங்கிருந்து இந்த ஒளிவெள்ளம் பாய்ந்ததோ தெரியவில்லை. உடம்பும் உருண்டு திரண்டு இருந்தது. படிப்பிலே மந்தம். இப்போ தினமும் பாடசாலைக்கு வருகிறாள். கும்மிதான் அவளின் ஒரே ஆசை.

கா – பள்ளியின் வாணிவிழா விமரிசையாக நடைபெற்றது. வாசலும் மண்டபமும் குருத்தோலையால் சோடிக்கப்பட்டிருந்தன. ஒரு பெரிய கிடாரத்தில் பொங்கல் துளாவினார்கள். மண்டபத்தின் ஒரு பக்கத்தை சரஸ்வதி படமும் நிறைகும்பமும் அலங்கரித்தன. கடலை, அவல் யாவும் தயாராகிக் கொண்டிருந்தன. குத்து விளக்கொன்று சுடர்விட்டுப் பிரகாசித்தது. தூசி பிடித்து மங்கிக் கிடந்தது இன்று பொழு பொழுப்பாக மின்னுகிறது. பூசிக் கழுவிப் புதுக்கோலம் பெற்றுத் திகழ்கின்றது. குத்து விளக்கு எரியத் தொடங்கிவிட்டால் கொள்ளை அழகுதான்.

"விளக்குக்குள் எண்ணெய் விடுங்கள்" என்று அதிபர் அடிக்கொரு தரம் கட்டளை பிறப்பித்தார். மலர்தான் ஓடி ஓடி அதனை நிறைவேற்றினாள். பாடசாலையை இதுவரை எட்டியும் பாராத பிள்ளைகள் பலர் குழுமி இருந்தனர். படிக்கா விட்டாலும் சரஸ்வதி பூசையில் துதித்தால் போதும் – கலைமகள் கடாட்சம் கிடைக்கும் என்பது அவர்களின் நம்பிக்கை.

பொங்கல் வேலை முடிந்தது. நெருப்பும் குறைக்கப்பட்டது. எல்லாவற்றையும் அழகுறப் படைத்தான் சிங்காரம். அதிபர் சரஸ்வதி துதி சொல்லிக் கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரவரும் பிள்ளைகளும் அமர்ந்திருந்து பாடித்துதித்தனர். இனியராகம் – பக்தி உணர்வு பரிணமித்தது. பிரசாதங்களும் பகிரப்பட்டன.

அதிபர், கிளாக்கர், மனேச்சர், கிராமோதயசபைத் தலைவர் அறைக்குள் அமர்ந்து பேசிப் பேசி பிரசாதம் சுவைத்தனர்.

கலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாயிற்று. "விளையும் பயிர்" நாடகம் மிகுந்த பாராட்டைப் பெற்றது. பெண் விடுதலைக்கும்மி அரங்கேறியது. பத்துப் பெண்களின் இறுதியில் எடுப்பாய் நின்றாள் மலர். அவர்களுக்குள்ளே ஒரு மணப் பெண்போல் காட்சி கொடுத்தாள் அவள். எல்லோரும் மலரை வைத்தகண் வாங்காமல் நோக்கினர். இளம் சிவப்புச் சரிகைச் சாறி அவளை மேலும் தூக்கிக் காட்டிற்று. அவளுடைய புது நிறத்துக்கும். பொருத்தமான அலங்காரம். ஒப்பனை கிழாக்கர் மனைவியின் கைவண்ணம். மெருகேற்றி வைத்திற்று.

குனிந்து வளைந்து நெழிந்து கும்மி அடிக்கும் போது ஒருவாலிபன் ஓடி ஓடிப் பளிச்சென மலரை மையமாக வைத்துப் படம் பிடித்தான் நாகம்மா முன்வரிசையில் இருந்து தன் தோழிகளிடம் குசுகுசுத்துப் பெருமை அடித்தாள்.

விழா தொடர்ந்தும் நடந்தது. சிங்காரத்தின் இராவணசங்காரம் களைகட்டியது. அவன் ஏதோ தண்ணியில் புலம்புவதாகவும் பேசிக் கொண்டனர். பூசையையும், நிகழ்ச்சிகளையும் பலர் பாராட்டினர். ஊர்ப்பிரமுகர்கள் முடிவில் உரையாற்றினர். கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாகக் கலைந்து போயிற்று. சில நேரங்களில் பேச்சுக்கள் சபையைக் கலைக்கவும் செய்கின்றன. நல்ல வேளை எம்.பி. மட்டும் வரவில்லை.

"ஒரு வாத்தியார் இருந்து இவ்வளவும் செய்து விட்டாரே. நாலைந்து பேர் இருந்தால் எவ்வளவோ செய்யலாம். வராத பிள்ளைகளை எல்லாம் அத்தாங்கு போட்டு வடிக்க வேண்டும்." என்று எல்லாரும் பேசிச் சென்றனர். இரவு எழுமணியளவில் கா – பள்ளியின் வாணி விழா முற்றுப் பெற்றது. ஊரவர் யாவரும் மனநிறைவைச் சுமந்து சென்றனர்.

திங்கட்கிழமை பாடசாலை போனார் மணியம் அதிபர். புதிதாக வந்த மாணவர் எவருமே இல்லை. வழமையான பூஞ்சீப்புக் காய்களே வருகை தந்தன.

"என்ன விடயம்? ஆக்கள் குறைவு?" என்று விசாரித்தார்.

"மலர் ஓடிவிட்டாள் சார்" பிள்ளைகள் முந்திக்கொண்டனர்.

"என்ன?" மீண்டும் கேட்டார் அவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மலர் சார்... அன்று போட்டோ எடுத்த புண்ணிய மூர்த்தி... தேத்தண்ணிக் கடைக்காரனோட ஓடிட்டாள். மட்டக்களப்பில இருக்கிறதாகக் கதைக்கிறாங்க."

"ஆ..."

சிங்காரம் மகளையும் மருமகனையும் பெண்வீட்டுக்கு அழைத்துவரப் போயிருப்பதாகச் செய்தி அடிபட்டது.

"சரி... நல்லது தான்... மலர் மூர்த்தி வாழ்க!" அதிபர் கூறிக் கொண்டார்.

அன்று வழமைபோல் பாடசாலையை நடத்தி விட்டு வீடுபோனார் மணியம். உடலும் உள்ளமும் களைத்து அவருக்குக் காய்ச்சல் கண கணத்தது.

என்ன செய்வது அடுத்த நாள் பாடசாலைக்கு வந்தார்.

மாணவர்கள் ஒருவரையுமே காணவில்லை. என்ன நடந்தது என்று முன் கந்தோரில் விசாரித்தார்.

"ஊரிலே அறுவடை தொடங்கிற்று அதுதான் பிள்ளைகள் இல்லை. ஒரு மாதத்துக்கு அவர்களைக் காணமுடியாது. குருவிகளின் கூட்டுக்குள்ளேயும் நெல்லுச் சேர்ர காலமிது" என்றாள் சிங்காரத்தின் மனைவி.

"என்ன உங்கட மகளுக்கும் அறுவடையா?" கேட்டார் மணியம் அதிபர்.

"இல்லை அது விதைப்பு" என்றாள் நாகம்மா சிரித்தவாறு.

வானம் பார்த்த பூமிகள் அவர் கண்ணுக்குள் தெரிந்தன.

பாய்ச்சலற்ற மேட்டு நிலங்கள் அவரைப் பரிகசித்தன!

நன்றி :
வீரகேசரி 12.09.1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

# அழைப்பு

'அன்புள்ள பாலு...' வா? அல்லது 'தம்பி கிருஷ்ணா... வா? எப்படி... இவள் சொல்லுகின்ற பாலகிருஷ்ண பிள்ளைக்குக் கடிதம் எழுதுவது?

'அருமைத்தம்பி... திரு. பீ.கே. பிள்ளைக்கு...! என்று விழிப்பதுதான் மிகப் பொருத்தம்.

'நானும் உங்கள் அண்ணியும் நலம். உங்கள் சுகத்துக்காகவும் பிரார்த்திக்கிறோம்' – என்று ஆரம்பித்தால்தான் அவன் மனம் குளிர்ந்து பதிலும் உடன் எழுதிப் போடுவான்.ஆனால் உங்கள் அண்ணி என்பது தான் கொஞ்சம் பிரச்சினைக்குரியது போல் படுகிறது. ஏதும் வித்தியாசமாக நினைக்கிறானோ தெரியவில்லை. எப்படி நம்பிக்கையோடு எழுதுவது?

'நீங்கள் என்னுடைய அப்பாவழிச் சொந்தமல்லவா? அந்த உணர்வுதான் என்னை எழுதத் தூண்டியது. கடவுள், நமக்குள் இருக்கும் இடைவெளியை அகற்றி வைப்பார். என்றே மனம் சொல்கிறது?

நாமும் இதயத்தைத் திறந்தால் தானே மற்றவரும் கனிந்த மனதைக் காட்டுவார்கள். ஆனால்... பெரியப்பாவின் மதினியின் கனிஷ்ட புதல்வன் தான் இந்தப் பாலகிருஷ்ணபிள்ளை என்ற வரலாறெல்லாம் அவன் நினைவில் பசுமையாக இருக்குமா? என்பதுதான் கேள்விக்குரியதாகி யோசிக்க வைக்கிறது.

என்றாலும் இவ்வளவு காலமும் இல்லாத உறவு இப்போதும் மட்டும் எப்படி வந்தது? என்று நினைத்தாலும் ஆச்சரியமில்லை. அவன் ஏ.எல் எடுக்கும் நாட்களில் பெரியப்பாவின் வீட்டுக்கு அடிக்கடி வந்து போனான். பெரியப்பாவின் இளைய மகள் ரஞ்சினி ஏ.எல். நல்லாப் பாஸ் பண்ணி இருந்தாள். அவரும் காசைப் பெரிதாய்க் கருதாமல் ரியூசன், கொப்பி என்று கேட்ட மட்டும் கொடுத்தார். ரியூசன், பேப்பர்கிளாஸ், ரியூட்ஸ், செமினார் என்று பணம் கறக்கப் பழகிச் சில வாத்திமார்கள் கல் வீடும் கட்டத் தொடங்கிவிட்டனர். இலவசக் கல்வி என்பது பொய்யாகிக் கனகாலம் ஆகி விட்டது.

அவளும் ஒரு சப்பல் கட்டை. அவளிடம் அரசியலும், லொஜிக்கும் கேட்டுப் படிக்காதவர் இல்லை. பாலுவும் கேட்டுப் படிக்க வந்து இரண்டொருநாள் தங்கிப் போனான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கம்மாட கடையடி, அப்புக் குட்டியர்ரசந்தி, கடற்கரைப் பஞ்சிகாவத்தை றோட்டுகள்... என்று கூட்டாளிப் பொடியனுகளோட தெரு அளந்து திரிந்த – 'அந்த நாட்களில் முகம் கொடுக்காதவர்... கொஞ்சமாவது சிரித்து என்னோட இரண்டு வார்த்தையாவது உதிர்க்காதவர், இவ்வளவு தூரத்துக்கு வந்ததும் மூன்று வருடங்கள் போன பிறகே... என்னை நினைக்கிறார். எதற்காகவோ... நம்மை வளையுறார் என்ற எண்ணம் தோன்றினால் என் மனைவியின் முயற்சிகள் யாவும் விழலுக்கிறைத்த நீர்தான். மகேஸ்வரியும் தொடர்ந்து கரை ஏறாத ஓடமாய்த் தத்தளிக்கத்தான் வேண்டும்.

ஆனால் புதுப்பணக்காரர் யாரும் கடந்த காலத்தை நினைத்துப் பார்க்கிறார்களா? நிகழ்காலத்தில் மட்டுந்தானே அவர்கள் கண்கள் நிலைத்து விடுகின்றன.

நமது சின்னையா ஓவிசியரின் பெண்டாட்டி கண்மணி கிடந்த கிடைய நினைக்கிறாளா? அவள் இப்போது காட்டும் நடப்பும் நகிலியும் கொஞ்சமா? ஆனா என்றும் படிக்காதவள் சீட்டைப் பிடித்து வட்டிக்குக் கொடுத்து, ஒன்றை இரண்டாக்கி, இரண்டை நாலாக்கி, எழும்பிற்றாள். ஓவிசர்ர லோண்களையும் போட்டுப் புரட்டி... ஒரு நேரம் சோறாக்கிப் பணக்காரியாகிற்றாள். ரீவியப் பார்த்துப் பார்த்து உலக நடப்பெல்லாம் மற்றப் பெண்களுக்குச் சொல்லி விளக்கிறதும் தாலிக் கொடியப் போட்டுக் கொண்டு வட்டிக் காசைக் கேட்டு வீடுவீடா நடக்கிறதும் தானே அவள் வேல. பத்துப்பனிரெண்டு வருசத்துக்குமுதல் அப்பம் சுட்டு விற்றதையும், கஸ்ரப்பட்டு கிடந்ததையும் நினைத்துப் பார்க்கிறாளா? இல்லையே

பாலுவும் வெளியே போனவன் ஊருக்கே வரவில்லை. 'நீங்கள் யார்? உங்களை எனக்குப் புரியவில்லை. நல்ல விளக்கமாக எழுதுங்கள்? என்று மறுகடிதத்தில் எழுதினாலும் எழுதுவான்.

அவனுடைய தாய் வீட்டுக்குச் சென்றவாரம் விசுக்கோத்துப் பெட்டியோடு இவள் போய்வந்த சங்கதியை எழுதவும் கூடாது. தாய் எழுதினாலும் எழுதக்கூடும். அவ எனக்குச் சின்னம்மா தான். எனது அம்மாவின் குணத்தை சின்னம்மாவின் குணம் ஏணிவைத்தாலும் எட்டாது. இருவரும் தங்கமும், பித்தளையுந்தான். ஆனால் இப்போது பித்தளையும் பல்லக்குப் பெறும் காலம் ஆயிற்று.

உண்மையில் உறவுகள் முந்நூற்றி அறுபத்தைந்து நாட்களுமா வளர்ந்து கொண்டிருக்கிறது? அப்படித் தொடர்ந்து வளர்ந்தால் எத்தனையோ உறவுகள் வானத்தையல்லவா தொட்டிருக்கும்? அது அவசியம் ஏற்படும் போது மட்டும் தானே ஆமைபோல் தலையை நீட்டிப் பார்த்து நகர்கிறது.

சூழல் முடுக்கி விட்டதும் விழிப்படைந்து மளமளவென்று பற்றிப் படர்கிறது. நிலையான பந்தலாகி நிழலைச் சொரிகிறது. காய்த்துக் கனிந்து விதைகளைத் தூவுகிறது. மீண்டும் அவை பல்கிப் படர்ந்து பூத்துக் காய்த்துக் கனிகளைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொரிந்து கொண்டிருக்கின்றது. நீண்ட பந்தல்களாகி அக்கம் பக்கமெல்லாம் அழகு சேர்க்கிறது. இதுதானே உறவு – வாழ்க்கை.

கொஞ்சம் விஸ்தாரமாக எழுதினா... என்ன விசயத்துக்கு வராமல் சுத்தி வளைக்கிறார். எதையோ பூசி மெழுகிறார் – என்று நினைந்து விட்டால் நமது இலக்கே பிழைத்துப் போகும். பிறகு நான்தான் கெடுத்த மாதிரி ஆகும்.

என்றாலும் எதையும் எடுத்த எடுப்பிலே சொல்வது நாகரிகமாகுமா? யாரிடமாவது கடன் கேட்டுப் போனால்... போயிருந்து சுக சேமங்களை விசாரித்து... அரசியலும் கொஞ்சம் பேசி நமது நிலையை உயர்த்திக் காட்ட வேண்டும். பின்பு தற்போதையக் குண்டு வெடிப்புகள், வேதனை, பரிதவிப்பு, அவலம் எல்லாவற்றையும் கலந்துரையாடி – ஆற அமரக்கால்நீட்டி ஒரு தேநீர்க் கிளாசையும் நட்டமாக்கவேண்டும். பின்பு வெற்றிலை போட்டுச் சுட்டு விரலால் கதிரைக் காலுக்கு வெள்ளை அடித்து வாசலையும் அழுக்காக்கிய பின்பே முகத்தைப் பெரியதக்காளிப் பழம் போல் அதைப்பாக்கி நான் வந்தது ஒன்றுமில்லை பாருங்க... சின்ன ஒரு உதவி எனக்கு ஒரு ஆயிரம் ரூபா தேவைப்படுகிறது. இம்மாதச் சம்பளத்தில் தந்திருவன். இல்லாட்டி அடுத்தமாதம் கட்டாயம் தருவன். எங்களுக்கு ஆபத்துக் கொடுப்பனவும், மொத்தமா அடுத்தமாதம் வருகும் என்று தலைகுனிந்து விண்ணப்பத்தை நீட்ட வேண்டும். அதுதானே தற்கால ஊர் வழக்கு.

இப்ப நான் அவனிட்டக் கடன் கேட்டா இவ்வளவு தூரத்துக்கு எழுதப் போறன்? அப்படித்தான் கேட்பதானால் நாற்பது ஐம்பதல்லவா கேட்க வேண்டும். அவ்வளவு கேட்பதற்கு நான் புதிய வீடா கட்டுகிறேன். எனக்கு வீடு இல்லயா? வளவு கிடக்கு வீடு கட்டலாந்தான். கட்டி அரை மட்டுக்கு வந்தாற் போதும். எத்தின பக்கம் பதில் சொல்லவேணும். எவ்வளவு முடிஞ்சிருக்கு? எப்பிடி வீடுகட்டுறயள்? விதான யாருக்கென்ன? நிறுவனமாகட்டுது? எங்களுக்கும் ரகசியங்களச் சொல்லுங்களன் என்று பிய்த்துப் பிடுங்குவார்கள். சொந்தக்காரர் முகம் கூடக் கருகிப் போயிரும்.

காசுகேட்டு எழுதினா ஊருலகு என்னத்தச் சொல்லும்? பாலுவின் தாய் நாகம்மாவுக்குத் தெரிந்தால் பெரிய வில்லுகண்டமாய்ப் போகும். நாலு ஊருக்குத் தெரியுமட்டும் தொடர்ந்து கொம்பிக் கொண்டே இருப்பாள். "இவரென்ன வட்டி கட்டித் தாங்குவரா? ஒரு இளந்தாரிட்ட இவ்வளவு தூரத்துக்குக் கைநீட்ட ஒரு விதானைக்கு வெக்கமில்லயா? இல்ல மதினிக்கு மாப்பிளக்கு வட்டர் பூசிறாரா? அவவுக்கு ஊரில மாப்பிள இருக்கா?" என்று மெயின் வீதியில் நின்று நான் போகும் போதும் வரும் போதும் குத்திக்காட்டுவாள். பின்பு ஊருக்குள்ள சண்டை சச்சரவு தீர்க்க எந்த முகத்தோடு போவது?

லீலாவும் என்னை விடுகிறாள் இல்லை. அவளின் தங்கச்சிக்கு முப்பதைத் தாண்டிற்றென்று ஒருவருக்கும் விளங்காமலா இருக்கு? அதுவும் வேலர்ர மகன் ரவியோட ஆட்டம் பழகி பாசிக்குடா என்றும், கொழும்பென்றும் – சுற்றித்திரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்ததையும்; ரவி ஆறேழு மாதத்துக்கு முதல் சுடுபட்டுச்சாக – மகேஸ் சோறு தண்ணி இல்லாமச் சுருண்டதையும் எதால மறைத்து விட்டுப் பாலுவுக்கு அழைப்புக் கொடுப்பது?

இப்போதுதான் வந்து "தம்பி பாலகிருஷ்ணனுக்குக் கடிதம் எழுதுங்க. அவன் நல்லபிள்ளை. நீங்க எழுதினாச் சரிவரும்" என்று அம்மா ஒரே சொல்லிறாவு. எழுதுங்களன்" என்று என்னைப் பிடுங்கி எடுக்கிறாள் லீலா.

பெண்டாட்டியின் கதைக்கு இணங்கிப் போகத்தான் வேணும். ஆனா நமக்கு மூளை ஒன்று இருக்குத்தானே. நீ விதானையார்ர பாதிதானே? திருமதி. லீலாவதி சுந்தரலிங்கம் ஜீ.எஸ் – என்ற கையொப்பத்தோடு எழுதன் என்றாலும் ஏலாதென்கிறாள். சில கிராம சேவையாளரின் வேலைகள் அவர்களின் அருமைத் துணைவிமார்தானே வீட்டில் பார்க்கிறார்கள். என்னைத் தேடி வீட்டுக்கு வரும் ஆட்களோடு சளசண்டியாகப் பேசி... அது செய்ய ஏலாது. இது... இப்ப கொடுக்கிறதில்ல. ஒங்கட வீட்டிலயும் ஷெல் விழுந்ததா? ஏ.ஜீ.ஏ. இது நம்புவாரா? போமெல்லாம் கொடுத்தாச்சு. இது சரிவராது என்று அவர்களை இவளும் ஒரே திருப்பி விட்டிருக்கிறாள். அதுதான் நான் எல்லாரையும் கந்தோருக்கே வரும்படி சொல்லி வைத்திருக்கிறேன்.

சரி எல்லாம் போகட்டும். இவளின் மூத்த தங்கச்சி தவமலர் கட்டிய கணவன விட்டிட்டு அந்த வேன் கிளினரோட ஓடிப்போனத பாலு அறிந்திருக்கமாட்டான் என்பது என்ன நிச்சயம்? அவனுடைய கூட்டாளிமாராவது போனவருஷம் நடந்தத எழுதி இருப்பார்கள் தானே. இப்ப ஊரில நடக்கிற சின்ன விசயமும் சுவீஸ், கனடா, அவுஸ்திரேலியா, ஓமான், யூ.கே என்று உலகம் பூராவுமே பரவி விடுகிறதே...

அந்த வேன்காரன் வாட்ட சாட்டமானவன்தான். சுருளித்தலையும் எடுப்பான நடையுந்தான். அவன் விறகுக் கட்டுகளென்றும், பலாப் பழங்களென்றும், மரை இறைச்சி என்றும், வேனில கொண்டுவந்து மலர்ர வீட்டில தானே இறக்கினான். நான் அப்போதே யோசிச்சன்.

இவளிட்டக் கேட்டால் அப்பிடியொன்றும் பிழையான பொடியனில்ல அவன். ஒங்கட சகலன் என்ன அவ்வளவு ஏமாளியா? உங்களைப் பார்க்கிலும் அவன் பெரிய கறார் என்று என்னோட மல்லுக்கு நின்றாள். நடவாதது நடந்ததும் தாயும் மகளுமே வாயடைத்து ஊமையாகி விட்டனர். லீலாவின் அண்ணனும் கொழும்புக்கு மாறிப் போய்விட்டான்.

ஒரு வருடத்துக்குப் பிறகு இப்போதுதான் என்னோடு பேசத் தொடங்கி இருக்கிறார்கள். இவள் பேசத் தொடங்கினால் பெரிய சிக்கல் – இரைந்து கொட்டுவாள். கிடுகிடுப்பாள் – வல்லூறும் தோற்றுப் போகும். எதையும் தொடந்து வாசிக்கவோ எழுதவோ முடியாது. நான் எழும்பி ரேப்பை உரக்கப் போட்டால் தான் இவளின் வாய் ஓயும். கட்டிலிலே சாயத்தான் வேண்டி வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மகேசுக்கும் வயதேறிப் போகுது. அப்பா இருந்தால் நேரத்தோட இதெல்லாம் முடிச்சிருப்பாரு. அண்ணனும் தொடர்ப முறிச்சிட்டாரு. நீங்க ஒரு கடிதம் போட்டுக் கொஞ்சம் இடம் எடுத்துத் தாங்க. நீங்க எழுதினா அது நடக்கும்" நேற்று இரவு முற்றும் புறுபுறுத்து எனது நித்திரையையும் கெடுத்து விட்டாள். இன்றிரவாவது நிம்மதியாகத் தூங்க வேண்டும். அப்படித் தூங்காவிட்டால் நாளைக்கு ஆட்களோடு எரிந்து விழ வேண்டும். எரிந்து விழுந்தால் நட்டம் யாருக்கு? நமக்குத் தான்.

எனது பேச்சுக்கும் எழுத்துக்கும் மதிப்பு இருக்கிறதென்பது எங்கும் தெரிந்த சங்கதிதான். நான் ஆருக்கும் குறிப்பெழுதினா எங்களின் ஏ.ஜீ.ஏ படித்துப் பார்க்காமலே ஒப்பம் போடுவதும் உண்டு. சப்புச் சுப்பானதுக்கெல்லாம் பேனை நாட்டும் வழக்கம் எனக்குக் கிடையாது.

இதிலே போய் எப்படித் தலையைக் கொடுப்பது? கொடுத்தால் நான்தானே வருவதற்கெல்லாம் வகைசொல்லி ஆகவேணும். நாமும் நம்மட பாடும் என்று கிடந்தா ஒரு கஸ்ரமும் வரமாட்டாது. நிம்மதியா மூச்சுவிடும் எனக்கு இந்தக் கடிதம் எழுதிறது பெரிய தொல்லையாப் போயிற்று. பிறகு யார் நமக்குக் கைதரப் போகிறார்கள். நமது கையில பலமிருந்தாத்தான் நாலுபேர் நம்மையும் மதித்து வருவார்கள்.

அப்பிடித்தான் பாலு ஓம் என்றாலும் இவங்க நினைக்கிறாப் போல சும்மா வந்திடுவானா? சவூதியில பதினெட்டு இருபதெண்டு உழைச்சவன். இரண்டு தங்கச்சிமாரையும் நிறைவேற்றினவன். வீடுதான் இருந்தாலும் மூணு நாலு கேட்பான். நாலைஞ்சு வேணும். இவங்களிட்ட என்ன இருக்கிறது? "எல்லாத்தையும் முன்னின்று செய்யுங்க. பிறகு பாப்பம்" என்றா... நானென்ன செய்வது? நானும் பெரிய பங்கு போட வேண்டி வந்தாலும் வரும். பின்னால் வரும் நன்மைக்கும் தீமைக்கும் நான்தான் ஆளெண்டு பிடித்தாலும் பிடிப்பாங்க. இதனாலேதான் எழுத்தைக் கொடுப்பது கழுத்தைக் கொடுப்பதற்குச் சமன் என்று சொல்வது. முன்னவர்கள் சும்மா சொல்ல மாட்டார்கள். பெரிய தலை இடியாப் போயிற்று.

இந்தக் காலத்தில கலியாணம் செய்வதென்றால் இருக்கிறதெல்லாம் வித்துச் சுருட்டி மடியில கட்டிக் கொண்டுதான் இறங்க வேணும். வைகாசியில கலியாணமென்றால் வை... காசி... என்று வைச்சிற்றே இருக்க வேணும் ஆறு மாதத்துக்கு. புரட்டாதிக் கலியாணம் முழுவதையுமே புரட்டி விட்டாலும் விடும்.

பிறகு நான் அறுந்த மாதிரித்தான். நமது சுப்பிரமணியத்தார் இரண்டு பிள்ளைகளுக்குக் கலியாணம் முடிச்சு மூணாவது மகளுக்கும் முடிக்கப் போகிறார். அவர் யோசிக்கிற மாதிரித் தெரியல்ல. மூத்தவளுக்கு முப்பது நாற்பது பேருக்குச் சாப்பாடோட சரிக்கட்டினார். இளையதுக்கு அதுவும் இல்ல. வீட்டக் கட்டினான் விசயத்தை முடிச்சான். கப்சிப் என்று தானும் தன்பாடும். மருமக்களும் அவனைப் போலவே காரியக் குடுக்கைகள். அப்படி எல்லாராலயும் முடியுமா? அடுத்த வீட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோழிக் குஞ்சாவது வந்து தன் வாசலில் கிடக்கும் குறுனலைப் பொறுக்கினால் அவனது தலை வெடித்துவிடும். கரடிபோல் கத்துவான். இரண்டாவது வளவுக்குள் மேயும் கோழிகள் கூட திசை கெட்டுப் பாய்ந்து ஓடிவிடும். அவன் வாசல் எப்போதும் வெறுமைதான். யாராவது அதில் காலடி வைப்பதென்றால் பத்து ரூபாயாவது தனது வரவில் சேரவேண்டுமென்பது அவனது அபிலாசை. அந்த வாசல் கதவு திறபடுகிறதென்றால் ஏதோ பெரிய விடயமொன்று நிகழ்கிறதென்று ஊருக்கே தெரியும். நமக்கு வேலதான் மிச்சமில்ல.

கடவுளே துணை என்று எழுதிப் பார்ப்பம். லீலாவை இன்னும் காணவில்லையே. பிள்ளைகளும் ரியூசனுக்குப் போய்விட்டனர். எங்கட மகேஸ்வரியைப் பாலுவுக்கு நல்லாத் தெரிந்துதான் இருக்கும். எதுக்கும் துணிந்தபின் யோசிக்கக்கூடாதுதான். சரி.

'அருமைத் தம்பி பாலு.

உங்களோடு ஆர்.கே.எம் இல் ஓ. எல் படித்த மகேஸ்வரியை மறந்திருக்க மாட்டீர்கள். நீண்ட முகம். உங்களைப் போலவே வெள்ளை மலர்க்கொடி போல் உடம்பு, நீளமான கூந்தல், காந்தக் கண்கள், அங்கே வாணி விழா நடக்கும் போது பக்திப் பாடல்களை இனிமையாகச் சொல்லிக் கொடுத்த குரல் அவளுக்கு மட்டும் உரியது. நீங்கள் அடுத்த ஊரில் இருந்து புத்தகமும் கையுமாக வந்ததை எனது மூத்த மகளைப் பாலர் வகுப்பில் கொண்டுவிட நான் வந்தபோதெல்லாம் கண்டிருக்கிறேன்.'

மகேஸிட்ட இதுபற்றிக் கேட்காது போனது பிழை போலத்தான் படுகிறது. என்றாலும் எழுதுவம். இனிப் பாதியிலே நிறுத்துவதா? கூடாது.

'எனது மச்சாள் மகேஸ்வரியை உங்களுக்குக் கட்டிவைக்க விரும்புகிறோம். வீடு, நகைகள், தளபாடம் குறைவில்லை. நமது சாதிக் காணிக்குள் இரண்டு ஏக்கர் காணியும் தருவோம். அவளுடைய புகைப்படத்தை அடுத்த கடிதத்தில் அனுப்புகிறேன். உங்கள் சம்மதத்தை உடனே எழுதுங்கள். உங்களின் வீட்டார்களை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். பதிலை அவசியம் எதிர்பார்க்கிறோம். இப்படிக்கு உங்கள் அன்புச் சகோதரன்.

கையொப்பத்தை வைப்பதற்குமுன் திரும்பவும் ஒருமுறை படித்துப் பார்க்க வேண்டும் போல் இருக்கிறது. நோட்டம் விடுகிறேன்.

லீலா... அவளின் தாய் வீட்டுக்குப் போனவள் "ஐயோ... இது என்ன மாராயம் அப்பா..." புலம்பிக் கொண்டு வருகிறாள். விறைத்துப் போய் அவளைப் பார்க்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இஞ்ச... ஒங்களத்தான்... நம்மட மகேஸ்வரிய ஒரெடத்தயும் காணலல்ல. விடிய இடியப்பம் வாங்கப் போனவள் பதினொரு மணி ஆகியும் திரும்பல்லயாம். அம்மா தேடிப் பார்த்திட்டுத் தலையில அடிச்சிட்டுக் கத்திறாவு...."

"நானும் தேடிப் பார்த்திட்டு... அவள்ர பெட்டியத் திறந்து பார்த்தா... நகையெல்லாம் அப்படியே இருக்கு. அதோட ஒரு கடிதமும் இருந்திச்சு... இதப் படியுங்க..."

வாங்கிப் படிக்கிறேன்.

அன்புள்ள அம்மாவுக்கும் அக்காவுக்கும்.

என்னைத் தேடவேண்டாம். தேடினாலும் நான் திரும்பமாட்டேன். எனக்குக் கர்த்தரின் அழைப்புக் கிடைத்து விட்டது. ஜீவனுள்ள தேவனுடைய கரங்களிலே என்னை முழுமையாக ஒப்படைத்து விட்டேன். என் நிலைமைகளை எல்லாம் தனிமையில் அவரிடம் சொல்லிப் பலநாளாக அழுதேன். அதன் பலன் கிடைத்துவிட்டது. அவர் என்னை ஆசீர்வதிக்கிறார். அவரின் வல்லமையுள்ள கருணையினால் நான் பூரண அமைதி காண்கிறேன். தேவ ஊழியத்துக்காக என்னை முற்றாகவே அர்ப்பணித்து விட்டேன்.

நான் பக்கத்து வாத்தியார் வீட்டுக்குச் சனிக்கிழமை தோறும் ஜெபக்கூட்டத்துக்கு வரும் சிஸ்ரர்களோடு நானும் ஒரு சிஸ்ரராகப் பயில இந்தியா போகிறேன். என்னைத் தயவுசெய்து தொந்தரவு செய்யாதீர்கள்.

அம்மா அக்கா அத்தான் எல்லாரையும் கருணையுள்ள தேவன் ஆசீர்வதிப்பாராக. கர்த்தருக்கு அனேக தோத்திரம்.

இப்படிக்கு சிஸ்ரர். சி. மகேஸ்வரி

நானும் கண்ணீரைத் துடைக்கிறேன்.

என்ன செய்வது? கர்த்தரின் அழைப்பு நியாயமானதுதான். எனது கடிதத்தை அனுப்பாது விட்டதும் நல்லதாய்ப் போயிற்று.

'இந்தா... நான் எழுதிய கடிதத்தைப் படியுங்க... என்ன செய்வது...?' மனைவியிடம் நீட்டுகிறேன். லீலா அதை வாங்கிப் படித்துவிட்டு ஏழெட்டாய்க் கிழித்து வீசுகிறாள்.

ஆனால் மகேசுக்குக் கிடைத்த அழைப்பை நினைக்கும் போது கவலையாய் இருந்தாலும் மனசுக்கு நல்ல ஆறுதலாய் இருக்கிறது.

நன்றி :
வீரகேசரி 15.09.91



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

# மாற்றம்

அவனைத் தற்செயலாகவே சந்தித்தேன். இரு வாரங்களுக்கு முதல்தான் அவன் வந்து உறவாடி – உல்லாசமாகப் பொழுதைக் கழித்து பிரிய மனமின்றிச் சென்றான். இவ்வளவு விரைவில் மீண்டும் சந்திப்பு நிகழுமென்று அவன் நினைத்திருக்கவே இல்லை. அதுவும் ஒரு பெண்மணியோடு முகம் மலரச் சிரித்துப் பேசியவண்ணம் பிரதான வீதியிலே மோகன் வருவான் என்று எதிர்பார்த்ததும் இல்லை.

அவளும் ஒரு பூங்கொடி போல் ஆடி அசைந்து அவனோடு பேசி அடிக்கடி சிரித்துக் கொண்டாள். ஆச்சரியமாய் இருந்தது. கத்தரிப்பூ வண்ணவூளி உடுத்து அதற்கேற்றாற் போல் நீல ஜக்கெற்றும் அணிந்திருந்தாள். காதில் நட்சத்திரத் தோடு, கழுத்தில் ஒரு மெல்லிய மாலை மட்டும் பளிச்சிட்டது.

அலங்காரங்கள் அவள் வயதில் ஏழெட்டைக் குறைத்துக் காட்டிற்று. முகவெட்டும், வாளிப்பான உடல் வாகும் பொருத்தமான அலங்காரமும் சேர்ந்து அவனை ஈர்த்திருக்கவேண்டும். மோப்பமிட்டு மங்கையரை மட்டிடுவதில் மோகனுக்கு நிகர் யாரும் இல்லை. சாமுத்திரிகா லட்சணம் படித்தவன் அவன்.

மூவரும் சந்திக்கே வந்து விட்டோம்.

உச்சி வெயிலையும் பொருட்படுத்தாமல் அவள் எங்களோடு தொடர்ந்தாள். அவனும் குழைவாக உரையாடிக்கொண்டே வருகிறான். என்னைக் கண்டதும் அவன் தலையை ஆட்டிச் சிரிப்பை உதிர்த்துவிட்டு கதைத் தொடர்பை அறுக்க நினைக்காமல் அவளோடு பேசிச் சிரித்துக்கொண்டே இருந்தான். அவளும் புன்னகையோடு பதில் கொடுத்துக்கொண்டே வந்தாள்.

"நீங்க... எங்கே இருக்கிறீங்க?" அவளிடம் எனது முந்திரிகைக் கொட்டைத் தனத்தைக் காட்டிவிட்டேன்.

அவள் உடம்பில் ஒரு முள்ளுத் தைத்த உணர்வு – சற்றுத் துடித்து... சமாளித்துக் கொண்டு "கிட்டடியிலதான்" என்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆ... எங்கே போறீங்க?" திரும்பவும் கேட்டேன்.

"ஆஸ்பத்திரிக்கு"

அவன் வியப்போடு "என்ன... யாரும் இருக்காங்களா?" என்று அங்கலாய்த்தான்.

"இல்லை" மிக நளினமாகச் சொன்னான். அவளோடு எனக்கும் கதைக்க வேண்டும் போல் இருந்தது.

"அப்ப... உங்களுக்குச் சுகமில்லையா?" அவளைச் சரியாக அறியும் ஆசையில் கேட்டேன்.

"ஆ... எனக்கு ஒரு வருத்தமும் இல்ல." அவள் முகத்தில் புன்னகை ஒன்று எட்டிப் பார்த்து ஒழித்துக் கொண்டது.

"அப்பிடியெண்டா..." எனது நெற்றிப் புருவங்கள்... ஒரு தரம் ஏறி இறங்கிற்று.

"டீ.எம்.ஓ வைச் சந்திக்க வேணும்".

இனிக் கேட்பது பிழை என்றாலும் "என்ன வேலை செய்யுறீங்க?"

"எனக்கு ஒரு வேலையுமில்ல" கொஞ்சம் விறைப்பாகத்தான் பதில் தந்தாள். நண்பனும் மௌனமாகவே வருகிறான். என்றாலும் என்னைக் கடுமையாகப் பார்க்கிறான். எதையும் வெளிக்காட்டவும் இல்லை. எனது சந்தேகம் நீண்டு கொண்டே இருந்தது.

"ஏன் அவர் வரல்லயா?" பொருத்தமில்லாத கேள்விதான். திருமதியா, செல்வியா என்று அவளைப் பூரணமாய் அறிந்து கொள்வதற்கு இது மட்டும் இறுதியாக.

"யாரு?"

'உங்கட மிஸ்ரர்."

"அவரு இரண்டு வருசமா ஊரிலே இல்ல!"

பொறுமை இழந்த மோகன்; இன்னும் ஏதோவெல்லாம் கேட்டுவிடுவேன் என்று பயந்திருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"டேய் மச்சான்... சும்மா அலட்டாம வா? என்னைப் பார்வையால் அடக்கிவிட்டு "மிஸ் வாங்களன் கூழ்றிங்ஸ் குடிப்பம்" பல நாள் தொட்டுப் பழகிய ஒரு பச்சைக் கிளியை நெருங்குவதுபோல் அருகில் சென்று அழைத்தான் அவன்.

"இல்லை" என்று ஓரக்கண்ணால் பார்த்துவிட்டு 'பாபுஜி'யைக் கடந்து செல்கிறாள். நானும் அவனும் பின்தொடர்ந்தோம். ஆஸ்பத்திரிக்கா நாங்களும் போகிறோம்?

"இன்று ஞாயிற்றுக்கிழமைதானே மச்சான். ஒரு படம் பார்ப்பமா?"

"நேற்றுத்தான் மட்டக்களப்பிலே ஒரு படம் பார்த்தன்" என்றான் அவன்.

"என்ன படம்?" அவள் கேட்டாள்.

"அழியாத கோலங்கள். நம் பிரதேச வாடையுள்ளதுதான்!" என்றான் அவன்.

"நல்ல படம். புதுமையான படைப்பு" – முறுவலித்தாள் அவள். அவளுக்கு அது பிடித்திருக்கிறது. இது பொல்லாத கேஸ்தான்.

இரு பசும்புல் தரைகளுக்கு நடுவே நிற்கும் இளம் பசுவைப் போல் அவள் நின்றாள். மோகனையும் என்னையும் மாறிமாறிப் பார்க்கிறாள். எனக்குச் சங்கடமாக இருந்தது. அறுத்துக் கொண்டோட மனம் சொல்லிற்று. கால் போன போக்கில் நடந்தால் கல்லும் முள்ளும் குத்திக் காயங்கள் விளையலாம். வருந்தித் துடிக்க வேண்டும். முன் ஜாக்கிரதை எண்ணம் தலை தூக்கிற்று.

"மச்சான் நான் கல்விக் கந்தோருக்குப் போக வேணும். நீ வாறாண்டா வா... நான் போகப் போறன்"

"என்ன ஞாயிற்றுக் கிழமையில கந்தோரா? சீனி போடாத தேநீரைக் குடித்தவன் போல் அவன் முகம் மாறியது.

"கல்வி அமைச்சர் நாளைக்கு வாறார். அதுக்காக வேலை செய்கிறார்கள். எனக்கு மிக முக்கிய அலுவல் இருக்கு... நீ வாறாண்டா வா... நான் போறன்".

சைக்கிளைத் திருப்பி பெடலில் காலை வைத்து மறுகாலை உதைத்தேன்.

"மச்சான்... நில்... நானும் வாறன்!" என்று ஓடிவந்து சைக்கிளில் முன்னுக்கு ஏறிக் கொண்டே "மிஸ்... போயிட்டு வாங்க... பிறகு கட்டாயம் வந்து சந்திக்கிறேன்" – விமானத்தில் ஏறி உரித்துள்ள உறவுக்கு விடை கொடுப்பவன்போல் கையை அசைத்து மோகன் விடைகொடுத்தான். நான் அவளைப் பார்த்துப் புன்னகை புரிந்தேன். எனது தரை ஊர்தி இருவருடன் பறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது அவசர வேலையை நினைத்து என்னையே நான் சபித்துக் கொண்டேன். என்றாலும் வெளியில் காட்டிக் கொள்ளவில்லை.

கந்தோருக்குள் நுழைந்தோம். வாசலில் ஹொண்டாக்களும், மைனர்களும், ஒட்டோக்களும் கிடந்தன. ஒரு சிலர் உள்ளே வேலை செய்து கொண்டிருந்தனர். நோட்டம் விட்டேன். நான் தேடிவந்த கிளாக்கர் இல்லை. சாப்பிடப் போயிருக்கலாம். அவர் வரும் வரை என்ன செய்வது? கட்டட வேலைக் காசோலைகள் இரண்டு எடுக்க வேண்டும். தைப்பொங்கலும் எட்டிப் பார்க்கிறது. யாரிடமும் கைநீட்ட முடியாது. மனைவி, பிள்ளைகளோடு கோபத்தைக் காட்டிப் பொரிகிறாள். அந்த ஒப்பந்த வேலைக்காக அவளின் நகைகளை அடகும் வைத்துவிட்டேன். பெருத்த முதல் இல்லாதவன் முன்னுக்கு வரவே முடியாது. இவனுகளும் ஆமை வேகம். கைக்குள்ள வெச்சாத்தான் கடதாசி புரளும். யோசனை குடைந்து போடுகிறது.

“மச்சான்... நீ அவளப் பத்தி என்ன நினைக்கிறாய்?” அவன்தான் பேச்சை ஆரம்பித்தான். என் கவலை அவனுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. நான் காட்டிக்கொள்ளவும் விரும்பவில்லை.

“இம்... அவள் கவர்ச்சியாகத்தான் இருந்தாள். என்றாலும் நான் ‘அவரக்’ கேட்டதும் முகம் கோணி இரண்டு வருசமா ஊரில இல்ல என்றாளே... அது அவளைப் பற்றி பெரிய கறுப்புப் புள்ளியை ஏற்படுத்திற்று”

“போடா அதுதான் அத்திவாரம். அதை நாம உணர்ந்து கட்டடத்தைக் கட்ட வேண்டும். நீ... உலகம் தெரியாத சிறுவன். நான் அந்தப் படத்தைப் பற்றிக் கதைத்தும் ‘அது ஒரு நல்ல புதுமையான படைப்பு’ என்று றோசா மாதிரி முகத்தை மலர வைத்தாளே பார்த்தயா?”

“அது மட்டுமல் ஆஸ்பத்திரிக்குப் போறாள்... வருத்தமில்ல என்கிறாள்”

“ஓ...இம்...” உதட்டை நாவால் நனைத்து விழுங்கிக் கொண்டான். ஒரு சிரிப்பும் தவழ்ந்தது.

“அவளப் பத்தி உனக்கு முதல்லே தெரியுமா மச்சான்?”

“ஆ... இல்லல்ல... பஸ்ஸிலேதான் வந்தாள். அவள்தான் சீற்றில இடம் தந்தாள். சந்தோசமாகப் பேசினாள்”

“சீ... அவள உட்டுத்தள்ளு”

“போ... போ... நீ கெடுத்துப் போட்டாய்”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"போ மச்சான். இதில என்னத்தக் காணப் போறாய்? எதிலயும் நம்மட பேர நாமே பழுதாக்கக் கூடாது"

"எதிலயும் தார தம்மியங்கள் உண்டு. இன்பத்தின் எல்லைக் கோடுகள் வித்தியாசம். உலகத்தப் பற்றி நாம பயப்படக்கூடாது. நம்மளக் கண்டு உலகம் பயப்பட வேண்டும். பேரும் பெருமையும் நிலையானதல்ல. விழுந்தால் எழும்ப நம்மளால் முடியாதா? எழும்பலாம் என்றால் எழும்பலாம்.

"அப்ப... நீ என்ன சொல்கிறாய்?" கதையை நீட்டினேன்.

"இல்ல மச்சான்... இன்றைக்கு அவளோட படம், பீச், ஹொட்டல் என்று இரவையும் பயன்படுத்தியிருக்கலாம்.

"போ மச்சான். வீட்டில் நம் மனைவி மக்கள் என்ன பாடோ? அவர்களோடு பகிராத இன்பம் நமக்கெதுக்கு? நம்மளைப்போல் அவர்களையும் நினைக்க வேண்டும்."

"ஏய்... எந்நேரமும் மனைவி மக்களே நினைச்சிட்டு அழக்கூடாது. வாழ்க்கையில் ஒவ்வொரு நிமிடத்தையும் சந்தோசமாகவும், உல்லாசமாகவும் கழிக்க வேண்டும். வா... திரும்பி வருவோம்."

சைக்கிளில் என்னையும் ஏற்றி உழக்கினான். கடை வீதிக்கு வந்தோம். ஒரு ஹொட்டலில் போய்ச் சாப்பிட்டோம். இறைச்சி, முட்டை, பொரியல் கொண்டு வருமாறு சொன்னான். பல நாளைக்குப் பிறகு சுவையாக இருந்தது. என்றாலும் வீட்டுச் சாப்பாடு போல் நிறைவு இல்லை.

"இப்ப கிளாக்கர் வருமட்டும் நாம காஞ்சி காஞ்சி அவ்விடத்தில கொட்டாவி விட்டுக்கொண்டு நிண்டா எப்பிடி இருக்கும்? சாப்பிட்டிட்டு ஹாய்யா அவரும் வருவார். நாமளும் சாப்பிட்டிட்டு ஜாலியாப் போவம். வாழ்க்கையில் ஒவ்வொரு செக்கனையும் இன்பமாகக் களிக்கவே மனிதன் பிறந்திருக்கிறான் தெரியுமா உனக்கு? நீ... அவளிடம் கேள்விமேல் கேள்வி கேட்டு குழப்பி விட்டாய். இப்படி எதையும் அனுபவிக்க முடியாது. துணிவோடு சேர்ந்த தைரியம் வேண்டும். இனிமேல் என் பாதைக்கு வா!"

"துணிவென்பது என்ன? அதிகம் துணிவுள்ளவன் மடையன். கொலையாளி யெல்லாம் துணிவாளிதான். ஆனால் அறிவாளி இல்லை! நான் இதுபோல் எத்தனையோ சந்தர்ப்பங்களை வெறுத்துத் தள்ளி ஒதுக்கி இருக்கிறேன். நான் வீரன்.

"உனக்கு வாழ்க்கையை அனுபவிக்கத் தெரியாது. வீணாகச் சிந்திக்கிறாய். தனிமையில் ஒருவருக்கும் தெரியாமல் சந்தர்ப்பம் வாய்த்தால் விடுவாயா? இதுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம். மற்றவருக்குத் தெரிந்தால் பாதுகாத்துக் கொடுப்போம். ஒருவருக்கும் தெரியாவிட்டால் பதுக்கல் செய்வோம். எல்லோரும் இப்பிடித்தான். அவளிட்ட என்னத்துக்கு அவரைக் கேட்ட நீ?"

"ஓ... கேட்டன். அறியத்தானே வேணும். அவன் பின்னால் வந்து கொண்டிருந்தால்?"

"இதுக்கெல்லாம் அப்படி யோசிக்கப்படாது. எவளும் தன்னைக் காட்டிக் கொடுக்கமாட்டாள். தப்பிக் கொள்ளவே பார்ப்பாள். இயற்கையே அதுதான். மேல் நாடுகளை எண்ணிப்பார். நாம் எவருக்கும் பாதகம் புரியாமல் ஒரு எல்லைக்குள் சந்தோசம் காணலாம். ஒன்றை ஒன்று கவர்வதும், பெண்ணுக்கு ஆண் அடிமை ஆவதும், அவனோடு அவள் சங்கமம் ஆவதும் இயல்பு. இதனாலேதான் உலகம் தழைக்கிறது. உன்னைப் போன்றவருக்குத் துறவறம் பொருத்தமானது!"

"அப்படியென்றா... கற்பு... ஒழுக்கம்... தர்மம் என்பதெல்லாம்..."

"அவைகள் பழைய ஏற்பாடுகள். காலத்துக்கேற்ற நவீன வாழ்க்கைக் கோட்பாடுகள் ஆக்க வேண்டும்!"

"அப்பிடியெண்டா நினைச்ச மாதிரியெல்லாம் நடக்கலாமா?"

"நீயும் அவளும் விரும்பினால் நடக்கலாம். வாழ்க்கை வாழ்வதற்குத்தான். இனிமேல் ஒவ்வொரு நொடிப்பொழுதையும் இன்பமாகக் கழிக்கப் பழகிக்கொள்!"

"என்னால் முடியாது. மனச்சாட்சிக்கு விரோதமாக வாழமுடியாது."

என்மனம் அவளை ஏற்க மறுத்தது. மன அரங்கில் எனது மனைவி மக்கள் வீற்றிருக்கிறார்கள். அவர்களின் மலர் வதனம் பிரகாசமாகத் தெரிந்தது. அவளை முகத்தில் அறைந்தாற்போல் பேசி வெறுத்துவிடுவதே நல்லது என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்.

"எழும்புங்க போவம்" என்று கெசியரை அணுகி பில்லையும் பணத்தையும் கொடுத்து நடந்தான். வாசலில் சிலை போல் நிற்கிறேன். எதிர்த்திசையில் மீண்டும் மோகன் விரைவாய் நடந்து கொண்டிருந்தான். ஒரு வேளை அவளைத் தேடி அவன் ஆஸ்பத்திரிக்குப் போகக்கூடும்.

நான் மறுதிசையில் என் வீடு நோக்கி விரைகிறேன் கையில் றோள் கேக் பார்சலோடு. மனைவிக்கும் அதில்தான் விருப்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

# சுமை

**பா**ர்வதிக்கு தன் வயிற்றுச் சுமையே பெருத்த மனச்சுமையாகி விட்டது.

முந்திய இரு பிள்ளைகளும் ஆண் பிள்ளைகளாகவே பிறந்து பார்வதியை ஆனந்தத்தில் ஆழ்த்தினார்கள். பார்வதியை மட்டுமா? சதாசிவம் வாத்தியார், அவரின் தாயார், சகோதரிகள் இனபந்துக்கள் எல்லாரையுந்தான், சதாசிவம் வாத்தியாரின் எண்ணங்கள் செவ்வனே நிறைவேறியதால்; மூத்தவன் ஆனந்தனாகி, இளையவன் நவீனனாகி முற்றத்தில் ஓடி ஆடித் திரிகின்றனர். மூன்றாவதும் சித்தியானால் விக்கிரம் குதிப்பான்.

கணவனின் கண்டிப்புக்கும் கடுகடுப்புக்கும் ஆளாகி அவதிப்படாமல் இந்த முறையும் ஆண்டவன் தன்னைக் காப்பாற்ற வேண்டும் என்பதே பார்வதியின் பிரார்த்தனை. கவலை எல்லாம் பார்வதிக்கு இது பெறு மாதம்.

இப்போதெல்லாம் அடுத்த வீட்டுப் பாலையாவை அடிக்கடி பார்வதி நினைத்துத் தனக்குள்ளே சிரித்து மகிழ்ந்து கொள்கிறாள். பாலையா, தன்மனைவி பிரசவித்த வேளையெல்லாம் 'என்ன பிள்ளை என்று கேட்டு, மருத்துவச்சி "பொம்புளப் புள்ளதான் பொன்னாங்கட்டி" என்று பழைய பாட்டையே பாடியதும், கோபாவேசம் கொண்டு வேலைத் தலத்துக்குக் கொண்டு செல்லும் தனது மூட்டை முடிச்சுகளைத் தூக்கித் தோளிலே வைத்து வாயிலே வந்ததெல்லாம் பேசிய வண்ணம் வனவாசம் போய்விடுவார். கோபமெல்லாம் ஆறி – ஏழெட்டு மாதங்கள் கடந்ததும் 'பிள்ளையைப் பார்க்கும் சோட்டையில்' வேலைத்தலம் இருந்து வீட்டுக்குவந்து கொஞ்சிக்குலாவிக் குடும்பம் நடாத்தி அடுத்த முறையும் அதே பல்லவியுடன் வனவாசத்தை ஆரம்பிக்கும் அவதார புருடரான பாலையாவையும் அவரின் ஆறு பெண் பிள்ளைகளையும் துரும்பாய்ப் போன தாயையும் நினைத்துப் பார்த்து தன்னைப் பற்றிய பெருமையில் பார்வதி பூரித்துப் போவாள். பாலையாவின் மனைவியாகிய அந்தப் பூமணிப் படுகிற தொல்லைகளைக் கண்டதும் தன்கணவன் கூறியவை எல்லாம் பார்வதிக்குச் சரியாகவே பட்டன.

சதாசிவம் வாத்தியார் எதையும் சும்மா சொல்லமாட்டார் புள்ளி விபரம் காட்டியே பேசுவார். 'ஐந்து பெண்களைப் பெற்று அரசனும் ஆண்டியான வரலாறுகளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டி, நம் நாட்டிலே சமதர்மம் தழைத்துப் பொலியும் வரை ஆண்பிள்ளைகளே நமக்கு வேண்டும்' என்று தனது இல்லக்கிழத்தியிடம் வாதப்பிரதிவாதங்கள் நடாத்தி, தினமும் பார்வதியை அவர் கருத்தை ஏற்றுக் கொள்ள வைத்து விடுவதில் அவருக்கு நிகர் அவரேதான். அந்த வட்டாரத்தில் பொருளாதாரப் புலியெனப் பேரெடுத்தவர் அவர். சதாசிவம் வாத்தியாரின் கட்டளைகள் ஒவ்வொன்றும் பார்வதிக்கு வேதவாக்கு.

இந்த வருசமும் கடற்கரைக் கண்ணகி அம்மன் குளிர்த்திக்கு போகமுடியாதே என்னும் கவலை பார்வதியின் உள்மனதில் இருந்தாலும், கண்ணகி அம்மாளை நினைத்துக் கும்பிட்டுக் கொண்டாள்.

"கண்ணகித் தாயாரே எனக்கு ஆம்பிளப்புள்ள பொறந்திரணும். இல்லாட்டி அவர் என்ன வாட்டி எடுத்திடுவார். ஆம்பிளப்புள்ள பொறந்தா மடப்பெட்டியும் உயிருக்குயிரும் கொண்டுவருவன் தாயே!"

வலது கையை நிலத்தில் ஊன்றி எழுந்து கிழக்குத்திசையில் அம்மன் கோவிலை நோக்கி நின்று கையெடுத்துக் கும்பிட்டாள்.

'இந்தப் புள்ளைக்கு பார்வதியின் வயிறு மிச்சம் பெரிசுதான். இது ஒனக்குப் பொம்பிளப் புள்ளதாங்கா' என்று அயல் வீட்டுப் பெண்கள் கூறும் போதெல்லாம் பார்வதி சண்டைக்கே போய்விடுவாள்.

"எங்களுக்கு ஆம்பிளப் புள்ளதான் வேணும். ஆறும் ஆண்பிள்ளையா இருந்த படியாத் தானே இளையபுள்ள மச்சாள் கட்டிலில இருந்திட்டுக் கதிரயில கால் நீட்டிக் கொண்டு சாப்பிடுறாவு. பொடியனுகளுக்கு இலட்சக் கணக்கில வாங்கிறாவு. பொம்பிளப் புள்ளயளுக்குச் சீதனபாதினம் தேடவும் ஏலா.... மாப்பிளமாருக்குப் பெட்டி சுமந்து மண்டியிடவும் ஏலா" என்று பார்வதி தர்க்கம் புரிவாள்.

"உன்ர கஸ்ர காலந்தான். செகுவேராக் குழப்பமும் ஊரடங்குச் சட்டமும் வந்திருக்கு. என்ன செய்யப் போறாய்? தாயில்லாத நீ.... ஆஸ்பத்திரிக்கு நேர காலத்தோட போயிருகா" அவளின் வாசலுக்கு வந்து சுகம் விசாரிப்பவர்கள் புத்தி சொல்லும் போது பார்வதி கவலையால் வாயடைத்துப் போகிறாள்.

போனகிழமை பிரசவத்துக்காக ஆஸ்பத்திரிக்குச் சென்ற ராணியம்மா.... அங்கேயே மரணமானது அவ்வூரையே ஒரு கலக்குக் கலக்கி விட்டது. சதாசிவம் வாத்தியாரும் இதைக் கேள்விப்பட்டு மனம் உடைந்து போனார்.

ராணியம்மாவுக்கு அது தலைப்பிள்ளை என்றும் வேற ஏதேதோ காரணங்களும் பேசப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆஸ்பத்திரியில் இருந்த டாக்டரம்மா இந்த நேரத்தில் மாறிப்போய் விட்டதையும் அறிந்து சதாசிவம் வாத்தியார் கவலையில் மூழ்கினார். அந்தப் பெண்டாக்டரின் கைபட்டாலே கைக்குழந்தைகளுக்கும் கர்ப்பிணிகளுக்கும் வந்த நோய்கள் வெடிச்சத்தம் கேட்ட கொக்குகள் போல் பறந்தோடுகின்றன என்று ஊரெங்கும் பிரசித்தம்.

சதாசிவம் வாத்தியார் 'டீ.எம்.ஓ'விடம் தன் மனைவியைக் காரிலே கொண்டு போய்ச் சேர்த்தார்.

'பேரென்ன?'

'பார்வதி'

'வயது?'

'இருபத்தைந்து'

'எத்தனையாவது பிள்ளை இது?'

'மூன்றாவது'

'கிளினிக்கு வாறதா?'

'ஓம் ஐயா'

'சரி மருந்து எழுதித்தாறன் எடுத்துக் குடியுங்கோ'

'ஆ.... எப்ப பிறக்கு மெண்டு சொன்னா நல்லது'

'ஏன் உங்களுக்குக் கணக்குத் தெரியாதா?கடைசியாக எப்ப முழுகினது?'

'ஆடிச்... சம்பளத்திலண்டு தானே... ஒமையா ஆடி இருப்பத்தி மூணாந் திகதி'

'ஆ...'

மேசையில் இருந்த டெஸ்க் கலண்டரை டாக்டர் உற்று நோக்கி விட்டு 'ஓ....யெஸ்... இது மாதந்தான், இன்றைக்குச் சித்திரை பத்து. இன்னும் இரண்டு கிழமைக்குள்ள பிறக்கலாம்'

'சேர்... எங்கட மூத்த மகன் சும்ம விளையாட்டில ஒருநாள் சிறிய தடியால இவட வயிற்றில தட்டிற்றான், துடிக்கிறதும் குறைவா இருக்காம்'

'ஓ... அப்படி ஒன்றுமில்ல...'

'சேர் என்ன பிள்ளையென்று கொஞ்சம் சொல்லுவீங்களா?'

'ஆ... முந்தின பிள்ளைகள் என்ன?'

'இரண்டும் ஆண் பிள்ளைகள் சேர்'

'ஆ...இது சொல்ல முடியாது'

'சேர்... இது இரட்டையாக இருக்குமோ?'

'ஆ... அப்படி ஒன்றுமில்ல? ஏன் மாஸ்ரர் இவ்வளவு பயப்படுறிங்க?'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இல்ல சேர் வயிறும் பெரிசா இருக்காம்... என்று எல்லாரும் சொல்லிறாங்க'

'சரி... சரி... போய் மருந்தெடுங்கோ?'

'சேர் மன்னியுங்கோ... இங்க 'டபிள்யூ.எம்.ஓ.'வும் மாறிப் போயிட்டாவாமே. அவவுக்குப் பதிலா யாரும் வரல்லயா சேர்?'

'இல்லை'

'ஊரடங்குச் சட்டம் இருக்கிற நேரத்தில பிள்ளை பேறு வாட்டில நேஸ் எல்லாரும் இருப்பாங்களா சேர்?'

'ஓ...ஏன் மாஸ்ரர் இவ்வளவு பயம்?'

'இல்ல சேர் ஊரடங்குச்சட்ட நேரத்தில வெளியால வரவும் ஏலாது. போன கெழமையும் ஒரு கர்ப்பிணி இங்கேயே இறந்து போயிற்றாவாம்?'

'பயமெண்டா... நேரத்தோடேயே கொண்டுவந்து வாட்டில வையுங்கே?'

'சரி சேர் பெரிய உபகாரம்!'

சதாசிவம் வாத்தியாருக்குக் கொஞ்சம் ஆறுதல். அந்தக் கறுத்தக் கோட்டுச் சாத்திரியும் ஆண்பிள்ளைதான் பிறக்குமென்று நேற்றுச் சொல்லி விட்டான்.

மூன்றும் ஆண்பிள்ளையானால் எவ்வளவு சந்தோசம். இவளெண்டா நல்லாத் துடிக்குதில்ல என்கிறாள். எப்பயாச்சும் இருந்திருந்து போட்டு, அதுவும் சாப்பிட்ட பிறகுதான் துடிக்குது என்கிறாளே. இவனுகள் ரெண்டு பேரும் நல்லா இடிச்சதாமே? மிச்சம் பிடிச்சாத்தானே சீதனம் கொடுக்கலாம். முதலாளி தம்பி முத்தைப் போல நம்மால சீதனம் கொடுக்க ஏலுமா? ஓடிக்குளோன்... வலைகிலை ஒன்றுமே வாங்கிறல்ல... என்ன... பார்வதி எல்லாம் கேக்குதா?

"ஓ... இது நமக்கு ஆம்பிளப்புள்ளதான். வலப்பக்கந்தான் துடிக்குது. இருந்து பாருங்களன்"

"என்ன செய்யுறா?"

"கறியாக்கிறன்"

"பசிக்குது கெதியா எடு!"

"ஒங்கட மூத்த தங்கச்சி அனுப்பின விரால் மீன் குழம்பும் கட்டிச் சோறும் இருக்கு. கொஞ்சம் பொறுங்களன்"

எல்லாரும் பகல் சாப்பிட்டு சிறிது தூங்கி விழித்தனர்.

'எனக்கு ஒரு மாதிரியாய் இருக்கு? பார்வதியின் முகமெல்லாம் வேர்வைத் துளிகள்.'

"காரைப் பிடித்து என்னை ஆஸ்பத்திரியில கொண்டு விட்டிடுங்க"

"இந்த நேரத்தில எந்தக் கார்க்காரன் வருவான் ஏழுமணி ஆயிற்றே?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த வளவிலே சதாசிவம் வாத்தியாரின் சகோதரியின் வீட்டுக்குள் பார்வதி கிடந்து முனகுகிறாள்.

'மருத்துவச்சிக் காளியையும் நம்மட சுந்தரம் வைத்தியரையும் கூட்டிற்று வாங்க' என்று துடியாய்த் துடித்தாள் வாத்தியாரின் தாய்.

வளவுகளுக்குள்ளால் புகுந்து புகுந்து மருத்துவச்சியையும், வைத்தியரையும் கையோடே கூட்டிக்கொண்டு வந்துவிட்டாள் வாத்தியாரின் தங்கை.

சூல வாயுக் குளிசை கொடுக்கப்பட்டது. வைத்திய தேங்கா ஒதி வெட்டினார். வீட்டுக்குள் குழந்தை அழுகிற சத்தம் கேட்டது.

'மாவிழல்ல... உரலுக்குள்ள சிரட்டையப் போட்டுக் குத்துங்க. கேற்றைத் திறந்து வையுங்க. யாரோ சொன்னார்கள்.'

எல்லாரும் பதட்டமும் துடிப்புமாய் இயங்குகின்றனர். சதாசிவம் வாத்தியார் ஒடிப்போய்க் கேற்றைத் திறந்து வைத்தார்.

'ஆரி... சரி.. போதும்... விடுங்கள் எல்லாம் சரி...'
'என்ன பிள்ளையாம்?'
'பொம்பிளப் புள்ளதான் பொன்னாங்கட்டி...' என்றாள் மருத்துவச்சி.
'சீ....பொம்பிளப் புள்ள என்னத்துக்கு?' என்றாள் மயக்கம் தெளிந்த பார்வதி.

சதாசிவம் வாத்தியார் சிக்கிரட் பக்கெட்டைத் தொடவே இல்லை. வைத்தியரையும், மருத்துவச்சியையும் சந்தோசமாக அனுப்பிவைத்தார்.

அடுத்த நாள் தன் மகளுக்கு அரிப்பிரியை என்று பெயர் வைத்து விட்டு மூன்று கட்டைத் தொலைவில் இருக்கும் பாடசாலைக்குப் போக பஸ்சை எதிர்பார்க்காமல் நடந்து போய்க் கொண்டிருக்கிறார் சதாசிவம் வாத்தியார்

நன்றி :
மல்லிகை ஜூலை 73



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9

# ஒற்றைப்பனை

தேவரின் காணிக்குள் ஓங்கி நிற்கிறது ஒற்றைப்பனை.

நல்ல கம்பீரம். முன்பு சோடியாகவே நின்றன. அண்ணன் தம்பிப் பனை என்றே யாவரும் அவற்றை அழைத்தனர். தற்போது ஒண்டிக்கட்டை அதில் ஒன்றைப் போன சூறாவளி முறித்து வீசிற்று. வீழ்ந்து மடிந்தது அண்ணனா.... தம்பியா என்பது விளங்கவில்லை. தம்பி முறிய நியாயமும் இல்லை. அண்ணனில் தான் ஒட்டைகள் இருந்தன. அதில் மைனாக்கள் கூடுவைத்துக் குஞ்சுகள் பொரிக்கும். சிறகு முளைக்கப் பறந்து போகும். இப்பகுதியில் பறந்து திரியும் மைனாக்கள் தேவர்ர காணிக்குள்தான் பிறந்திருக்க வேணும். அக்காணி பசுஞ்சோலைதான். இப்பனை மட்டும் தனியா தோற்றம். அது நல்ல மிடுக்கோடுதான் நிற்கிறது. அண்ணன்தான் அழிந்து போயிற்று.

அண்ணனும் தம்பியும் சேர்ந்திருக்கையில் அதில் விட்டம் கட்டி ஊஞ்சல் போட்டு வசந்தத்திற்கு வாழ்த்துப் பாடியது முந்திய தலைமுறை. அதுவும் பூரண வசந்தமாய் நிலைக்கவில்லை. கோடை வரட்சிதான் மிஞ்சிற்று. அந்த நாட்களின் ஆட்டமும் பாட்டும் மாந்தியே போயிற்று. கோடை நீங்கி மாரிவர வேண்டும். இதுவே கமலாவினதும் பிரார்த்தனை. அந்த ஒற்றப் பனை யாரையோ பழிவாங்கக் கங்கணம் கட்டினாற்போல் ஒரு வித ஆரவாரமும் இன்றி நிறுதிட்டமாக நிற்கிறது. அதைப் பார்க்கும் போது கமலாவின் உள்மனதில் ஒருவித பயம் குடிகொள்ளும். அவள் தன்னைச் சுதாகரித்துக்கொள்ள அதிக நேரம் எடுக்கும்.

உள் வீட்டு யன்னலைத் திறந்து விட்டால் பட்டென முதலில் கண்ணில் படுவது அந்தக் கரிய ஒற்றைப்பனைதான். உடனே ஜன்னலைப் இழுத்துக் கொழுக்கி போட வேண்டும் போல் அவளுக்குப்படும். பூட்டினால் அறைக்குள் வெளிச்சம் வராது. லைற்றைப் போட்டு வைக்கலாம். காற்றுக்கு என்ன செய்வது? வெக்கையும் தாவும். ஜன்னல் சீலையைச் சீராக்கி அது கண்ணில் படாதவாறு தடுத்தாள். திரும்பி அறைக்குள் நோட்டம் விட்டாள். வெட்சீட், கதிரை, புத்தகமேசை, தலையணை எல்லாம் சீராய் இருக்கவேண்டும். அதுவே சுந்தரத்தின் ஆசை. இல்லையேல் பொரிந்து தள்ளுவான். அவள் மீது சீறிப் பாய்வான். அது அவன் வாடிக்கை.

யாவற்றையும் சரி செய்து விட்டு மண்டபத்துள் வந்து கமலா பேப்பரும் கையுமாகக் கதவருகே அமர்ந்தாள். சொல்லிவைத்தாற் போல் சுந்தரமும் கந்தோரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து வந்து சேர்ந்தான். அரைநாள் விடுதலை போட்டிருப்பான். அவள் சட்டென எழுந்தாள். எதுவும் பேசாமல் சாப்பாட்டு மேசையை ஒழுங்கு செய்தாள்.

சோற்றுப் பிளேட், கறிடீஸ்கள், பீங்கான், கரண்டிகள் தண்ணியக், கிளாஸ், கோப்பை, துவாய் யாவும் நீற்றாய் இருக்க வேண்டும். தண்ணிக்குள் ஒரு தூசி கிடந்தால் அதுக்கு நூறு வயதுதான். இப்படி எத்தனையோ கிளாஸ், கோப்பைகள், பளிங்குகள் தன் ஆயுளைப் பாதியிலே முடித்துக் கொண்டன. எந்தவித யோசனைக்கோ, ஆராய்ச்சிக்கோ இடமில்லை. திடீர் முடிவுதான். விசாரணை பண்ணவும் யாரும் இல்லை. அது சுந்தரத்தின் சுதந்திரபுரமாகி விட்டது. யாரும் தலையிடவும் முடியாது.

நாலு பிள்ளைகளைப் பெற்றும் இளந்தாரிப் பொடியன் என்ற நினைப்பு அவனுக்கு. இன்னும் பத்து வருடங்கள் போனாலும் 'அது' மறையாது போல் தெரிகிறது. ஒரு வேளை கட்டையிலே போகும்வரை அப்படியே இருந்தாலும் இருக்கும். இருந்து விட்டுப் போகட்டுமே நமக்கென்ன என்று என்று அவளால் சும்மா இருக்கவும் முடியவில்லை.

கமலா தன்னைச் சமாளிக்கச் சற்று நேரம் எடுத்தது. கண்ணும் வாயும் உசும்பவில்லை. உதட்டையும் இறுக்கிப் பிடித்துக்கொண்டாள்.

அவனுக்குக் குடலைப் பிடுங்கி இருக்கும். உடுப்பைக் கழற்றிச் சாறனை அணிந்து சாப்பிட வந்து அமர்ந்து விட்டான்.

அவள் வந்து பரிமாறினாள். ஒருவித அமைதி குடிகொண்டது. பிள்ளைகளும் வந்து சேரவில்லை. யார் முதலில் பேசுவது? கடைசி மகளாவது பக்கத்திலிருந்தால் "என்ன புள்ள... குழம்புமீன் கொண்டுவரவா எண்டு கேளு" என்று பிள்ளையிடம் பேசுமாப்போல் கதையைத் தொடங்கி இருப்பாள். அவனும் "கொண்டுவரச் சொல்லு புள்ள" என்று மகளிடம் சொல்ல இடைவெளி குறைந்திருக்கும். இப்போது எப்படிப் பேசுவது? இரவும் ஒரே ரகளை.

அவனால் பொறுக்க முடியவில்லை. இரவுக் கதைகளின் தாக்கம் அவளை இன்னும் விடவில்லை, என்று உணர்ந்தான். அவளின் மௌனம் அவனை ஊசி போல் குத்திற்று. அவளைச் சாந்தப்படுத்த விரும்பினான்.

"கமலா என்னைப் பற்றி உனக்குத் தெரியாதா? நான் எப்போதும் எதிலும் அழகையே ரசிப்பவன். நவகலா மன்றத் தலைவர் ஏழெட்டு நாளைக்கு முதல் வந்த ஓவியர் உபா இந்த ஸ்கிறீன் சீலையைப் பார்த்து என்ன சொன்னாரு?" "ஸ்கிறீனுக்கு நல்ல காட்சியத் தெரிஞ்சிருக்கயள் கிளாக்கர், வானம்பாடிகள் அகலச் சிறகு விரித்து வரிசை வரிசையாகப் பறந்து செல்லும் பாங்கும் நீலவானப் பின்னணியும் மிகரம்மியமாக இருக்கு. நீங்க அசல் கலைஞர்தான் என்றாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறந்திட்டியா?" என்று அதட்டினான். கொஞ்சநாட்களாக உரத்து வாதிட்டு தான் நினைத்ததையே சட்டமாக்கி ஒரு சர்வாதிகாரியாகவே மாறிவிட்டான் சுந்தரம். அவன் 'சிங்கராசி நான்' என்றே குதிப்பான்.

இரவு முற்றும் பூனையாக இருந்த அவளின் உள் உணர்வுகள் தொடர்ந்தும் பின்வாங்க மறுத்தது. கட்டுப்பாட்டைத் தகர்த்துக் கொண்டு வாய் வெடித்தது. பொறுமைக்கும் எல்லையும் கணக்கும் உள்ளதுதான்.

"நீங்க சரியான ஆள்தான். போன கிழமையும் ஒருத்திய மீனா சில்க் ஹவுசுக்குள்ள கூட்டிற்றுப் போனயளாமே?"

அக்கேள்வியை அவன் எதிர்பார்க்கவில்லை. அது ஆழமாக அவன் நெஞ்சைக் குத்திற்று. குழம்புக் கறி திடீரெனச் சுவைகுன்றிப் போயிற்று. சோறு முழுவதுமே வேப்பஞ்சாறு கலந்தது போல் பிரமை தட்டிற்று. கை பிசைய மறுத்தது. சுந்தரம் வாடிப் போனான்.

கமலாவின் அடிமனதில் நீண்ட நாளாகக் கனன்று கொண்டிருந்த வீரத்தணல் குபீரென எரிய ஆரம்பித்தது. அதன் சுவாலைக் கொழுந்து விரிந்து உயர எழுந்தது.

"என்ன?" அவன் எதிர்க்கணை தொடுத்தான்.

"அவள் பெரிய ஆட்டக்காறியாமே. உங்கள எப்படித்தான் நம்புறது?" கமலாவுக்கு ஓவென்று கதறி அழவேண்டும் போல இருந்தது. வெளிக் காட்டாமல் அழுத்தமாய் இருந்தாள்.

சுந்தரத்தின் கண்களை நேருக்கு நேராகப் பார்த்தபின், குனிந்து சொதியை அள்ளி விட்டாள். பாற்சொதியின் மணம் அவன் மூக்கைத் துளைத்தது. அதில் அவன் மனம் லயிக்கவே இல்லை.

எல்லாம் பழைய பாணியும், பழைய சுவைகளும், புதிது புதிதாக ஒன்றைக் கூட்டி, இன்னொன்றைக் குறைத்து மற்றொன்றைச் சேர்த்து நவ நவமான ரசங்களை நாளுக்கு நாள் மாற்றிச் சுவைக்க வேண்டுமென அவன் உள்ளம் நாடி அலைந்தது. தன் அபிலாசைகளை இவள் வேரோடு சாய்க்கிறாளே என்று அவன் மனம் குமுறியது.

"யாரு சொன்னாங்க?"

"ஏன் நம்மட கடக்காரப் பொன்னனும், தங்கக்கையும் சொன்னாங்க"

"என்ன சொன்னாங்க?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அத ஏன் கேக்கயள்? என்னென்று நான் சொல்லுவன்? நெருப்பள்ளி என் தலையில வெச்சாப் போலான் இருக்கு. இப்பிடி எந்தக் குடும்பத்திலயும் நடக்குதா? நான் நரக வேதனையில் கிடந்து தவிக்கிறன். என்மனம் என்ன பாடுபடுது தெரியுமா? உங்கள நம்பித்தானே நான் வாழ்கிறன். என்னைக் கொஞ்சமாவது நினைச்சுப் பாருங்க!"

"அதச் சொல்லித் தொலையன். உன்ர மனதுக்க இருக்கிறது எனக்குத் தெரியுமா?"

"எல்லாம் ஒங்கட கூத்துத்தான். எதுக்கும் ஒரு அளவு இருக்க வேணும். என் இதயத்தப் போட்டுக் காலால் மிதிக்காதங்க. நான் உரிமையோடுதான் கேக்கிறன். என் மனதைப் புரிஞ்சு கொள்ளுங்க"

சுந்தரம் விறைந்துப் போனான். மீண்டும் மௌனம் தாண்டவ மாடியது. மயான உணர்வு படர்ந்தது "என்ன தான் நடந்து விட்டது? நடக்கக் கூடாத பாரிய விடயமா நடந்தது? அற்ப விடயங்களைப் பூதக் கண்ணாடியப் பிடித்துக் காட்டாதே"

கமலாவின் கிலேசம் நியாயமானதாகவும் அவனுக்குப் படவில்லை. என்ன என்று தெளிவு படுத்துவதாகவும் இல்லை.

ஏன் இந்த சந்தேகம்...? இவளுக்கு என்னைப் புரிந்து கொள்ளும் பக்குவமும் இல்லை. நான் என்ன அடாவடித்தனம் செய்து விட்டேன்? சுந்தரம் மிகவும் குழம்பிப் போனான்.

இன்று இரண்டிலே ஒன்று அறிய வேண்டும் என்னும் ஆதங்கம் அவனுக்குத் தலை தூக்கிற்று. அவனும் துணிந்து விட்டான்.

"கமலா! நீ.... என்னத்தைக் கண்டு விட்டாய்? உன் மனதுக்க இருக்கிறத்தச் சொல்லிவிடு. எனக்குச் சோறு வேண்டாம்" கையை அலம்பி விட்டு முன் கதிரையில் வந்து அமர்ந்தான் சுந்தரம்.

அவள் எடுத்துச் சொல்லத் தயங்கினாள். சுந்தரத்தின் குணம் கமலாவுக்குப் பாடம். சின்ன விடயத்தையும் பெரிய பட்டம் கட்டி நாலைந்து நாட்களுக்குப் பறக்க விடுவான். பின்னால் தனக்கே தொல்லை. காற்றும் அவனுக்காகவே வீசுகிறது. அக்கம் பக்கம் புதினம் பார்க்கத் துடிக்கிறது. அவன் கையில் நாலைந்து பேர் இருக்கிறார்கள். அப்படியென்றால் மனக் கொப்புளத்தை ஆற்றுவது எப்படி? அதைக் கவனமாகத்தான் கீறி உள்ளே கண்டிப் போயிருக்கும் சீழை அகற்ற வேண்டும். நாற்றத்தைப் பார்த்தால் தொடர்ந்து வேதனைப்படலாமா? ரணமாகிப் புற்றுக் கட்டி விட்டால் தொல்லைகள் தொடர்ந்து நம்மையே தீர்த்துக் கட்டிவிடும். அடங்கி ஆமையாய் ஒடுங்கி வாழமுடியுமா? அவள் துணிந்து விட்டாள். வருவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரட்டும். இதுவே ஏற்ற தருணம். பலநாள் சாவதிலும் ஒரு நாள் மரிப்பது மேல். அவள் வாய் திறந்து கொட்டத் தொடங்கினாள்.

"நீங்க பொல்லாத ஆளாம். ஒரு பெட்டயோட சிரிச்சுச் சிரிச்சு மாலா சில்க் ஹவுசுக்குள்ள போனயளாம். அவன் கேப்பமெண்டு பார்த்தானாம். சரியில்ல எண்டு விட்டிட்டானாம். என்னத் தட்டிக் கேட்கச் சொன்னான்."

'இம்....' என்று குனிந்து தலையை ஆட்டினான்.

"ஆம்பிளயள் சேத்தக்கண்டெடத்த மிரிச்சு தண்ணியக் கண்டெடத்த கழுவுவாங்க. அவியள நம்பேலாது! என்டு தங்கக்கயும் கதச்சாவு. நீங்க வரவர மிச்சம் மோசம்"

"அப்படி என்னத்த நீ காணாததக் கண்டிட்டா?"
"ஒங்களுக்கு என்ன கதயும் சிரிப்பும் குமர்ப் பெட்டயளோட?"
கமலா மதுரைக் கண்ணகியாய் நின்றாள்.

"என்ன நீ இவ்வளவு மட்டமா நினைப்பாயெண்டு நான் கனவிலும் நினைக்கல்ல. எங்கட நவகலா மன்றத்தால நான் எழுதி மேடை ஏற்றிய 'பெற்ற மனம்,' 'இன்ப வாழ்வு', 'காதல் வாழ்க' நாடகங்கள அவள் பார்த்து ரசித்திருக்காள். கேட்டாள் கதைச்சன். சிரிச்சாள் – சிரிச்சன் அவ்வளவுதான்!"

"நீங்க வரவர மோசமாப் போறியள். இப்ப என்னிட்ட சிரிச்சுப் பேசிறயளா? வெளியில கூட்டிற்றுப் போறிங்களா? சம்பளக் காசத்தான் மொத்தமாத் தாறீங்களா? என்ன ரெண்டாம் பட்சமாகத்தான் நடத்திறயள்"

"நீ இங்கிதம் தெரியாதவள். கண்ணகியும் இவ்விடயத்தில் பிழைத்தே விட்டாள். கோவலனின் இதயத்தைக் கொள்ளை கொள்ள அவளால் முடியவில்லை. அவனின் கலைப்பசிக்கு அவளால் தீனி போட முடியவில்லை. அதனால்தான் அவளுக்குத் துயரமுடிவு வந்தது. என் கலைப் பசிக்கு விருந்தளிக்க எப்போதாவது முன் வந்தாயா, அது பற்றி யோசித்தாயா? உன்னால் ஏலாது!" உரத்துக் கத்தினான். அவனுக்கு வேர்த்துக் கொட்டிற்று.

அவளுக்கும் ரோசம் வந்து விட்டது. மேலும் பாணங்களைத் தொடுத்தாள். அவை பாரதூரமான அஸ்திரங்கள் தான். இவையெல்லாம் தருணம் வருமென்று பாதுகாத்துத்தான் வைத்திருக்கிறாள். அவனை அவை நிலை குலை வைத்திற்று.

"போன மாதம் நம்மட கண்ணகி அம்மன் குளிர்த்திக்கு வந்த சீனித்தம்பிச் சித்தப்பாட மகள்.... கோணேசுக்குத் தோளில கிள்ளிறயள், அது மட்டுமா போன தீப்பள்ளயத்துக்குள்ள குழனிக் குஞ்சாத்தட மகள் அருள்மணி தோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டுவாறாள். அவள உள் ஊட்டுக்க கூட்டிற்றுப் போய் எண்ட நட்சத்திரத் தோட எடுத்துக் கொடுக்கயள். அதுக்கு முதல்... அவள் தங்க நேசம் சின்னப் பெட்டயா? பன்னிரெண்டாம் ஆண்டு படிக்கிறாள்... "ஒனக்கு என்னவிருப்பமோ?" என்று அவளையே விழுங்கப் பார்த்தயள். இதெல்லாம் கலியாணம் முடிச்ச ஆம்பிளைக்கு அழகான வேலையா? அவனுக்குப் பளார், பளார் என அறைந்தது போலிருந்தது. சற்றுப் பேசாதிருந்து.... திடீரெனப் பாய்ந்தான்.

"அவளுகள் மச்சாள் மாரெண்டுதாள் பகிடிக்குச் செய்தன். இதையெல்லாம் நீ சீரியசா எடுப்பாயெண்டு நான் நினைக்கல்ல"

"கலியாணம் கட்டின ஆம்பிள வேற குமர்ப்பெண்களை உற்றுப் பார்க்கிறதே மனைவிக்குச் செய்யுற துரோகம். இதுக்குக் கெதியில ஒரு முடிவு கட்டணும்!"

"இம்... நீ... என்ன முடிவு செய்யப் போறா? பத்து வருசமா என்னைப் புரிஞ்சுக்காத உன்னிட்ட என்ன பேச்சிருக்கு?"

"என்ன பிழை செய்தநான்?"

"நீ ஒவ்வொரு நாளும் பிழைதான் செய்கிறா... வீடுவாசல நீற்றா வைக்கிறயா? நீதான் கவர்ச்சியா நிக்கிறயா? என் மனசைப் புரிஞ்சு குழைவா கனிவாப் பேசிறயா? நீ ஒரு உலகம், நானொரு உலகம். என் மனச்சாந்திக்கு வேற இடம் நாட வேண்டித்தான் இருக்கு!"

"ஆ... நான் ஒங்கள நேசிக்கல்லயா?"

"உன் நேசிப்பில் ஜீவனில்லை வெறும் பம்மாத்து!"

"ஓ... இப்பஅப்படித்தான் இருக்கும்! முதலெல்லாம் இனிச்சகரும்பு, இப்ப கசக்குதா?"

"வாய் காட்டுறா.... என்ன?" பளாரென அறைந்தான். சிமிக்கியில் ஒரு துண்டு பறந்தது. கன்னம் புருபுருவென வீங்கிற்று. வலியைப் பொறுத்துக் கொண்டு கமலா முணு முணுத்தாள் கண்ணீரோடு.

படாரெனப் படுக்கை அறைக்குள் நுழைந்த அவன் கட்டிலிலே விழுந்து மல்லாந்து படுத்தான். கதவுச் சீலை வெளியே போவதும் வருவதுமாக இருந்தது.

தேவரின் ஒற்றைப்பனை அவனுக்குத் தெட்டத் தெளிவாகத் தெரிந்தது. அது புயலுக்கும் முறியாத இரும்புப்பனை. கன்னங்கரேலென்று அசையாமல் நிற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலை வாரவும் நேரமில்லாத யுத்த வீரனைப் போல பெரிய போருக்கு ஆயத்தமாக நிற்கிறது. அதன் மேல் வெண் பஞ்சுமேகங்கள் வளைந்து வளைந்து செல்கின்றன.

சுந்தரம் ஒற்றைப் பனையை வெறித்துப் பார்த்த வண்ணம் இருந்தான். அது அவனுக்கு இதமாய் இருந்தது. சிக்கிறட்டைப் பற்ற வைத்து ஊதினான். அந்தப் பனைமரமும் என்னைப் போல் தனித்துத்தான் போயிற்று. வெறுமை உணர்வு அதை வாட்டவே செய்யும். அவனது எண்ணம் ஒற்றைப் பனையையே வட்டமிட்டது.

அவனது ஆசைப் புதல்வி "அப்பா.... அப்பா ஹோர்லிக்ஸ் இந்தாங்க" என்று நீட்டினாள்.

"எனக்கு வேணாம் சகி.... நீங்க குடிங்க.... நான் போயிற்றுவாறன்" என்று வெளிக்கிட்டு சைக்கிளைத் தள்ளிக் கொண்டு புறப்பட்டான். கோயாவின் சுகந்தம் சூழ்ந்து பரவியது.

கல்முனைக் கடற்கரை அவனை வரவேற்றது. மங்கிய மாலைப்பொழுது... பொங்கும் பெருநிலவு. கனக்கும் மனச்சுமை. பூரணை நிலவு எப்போதுமே நிறைந்த அழகுதான். என்ன பொலிவு, என்ன கவர்ச்சி இளமை மாறாத எழில் . இனிய குளுமை. நிலாப் பெண்ணின் இளமை எழிலைக் கண்டு கடற் கணவனுக்குத் தான் எவ்வளவு ஆனந்தம். துள்ளிக் குதிக்கிறான் அவளின் பின்னால் வளைந்து வளைந்து வருகிறான். இருவருக்கும் எவ்வளவு அன்பு ஒற்றுமை, அமைதி, ஆறுதல்.

அவனுக்கு இந்தக் கடற்கரையும் இல்லாவிட்டால், எப்பவோ பைத்தியம் பிடித்திருக்கும். 'இங்கே ஒய்யாரமாக அமர்ந்து கொண்டு காற்றை அனுபவிப்பவர்கள் அத்தனை பேரும் மனம் குழம்பியவர்களா? பெற்றோரின் நிர்ப்பந்தத்தால் தாலி கட்டியவர்களா? காணி தருவதாகச் சொல்லி ஏமாற்றப்பட்டவர்களா? அவர்கள் சிரித்து மகிழ்கிறார்கள். நான் குமைந்து மாய்கிறேன்.'

"கடலைத் தழுவி வரும் தென்றல் இனிய இதம் தருகிறாள். என் மனநிலை உணர்ந்து தென்பு தருபவள் நீதான். முழுமதியும் தென்றலும் அன்புத் தோழிகள். என் நெஞ்சைக் கனிய வைப்பதில் நீங்கள் கைதேர்ந்தவர்கள். கமலா உங்களிடம் பாடம் படிக்க வேண்டும். அவளுக்கு இன்றைக்கு நான் படிப்பிக்கிறேன்!"

– சுந்தரம் கற்பனையில் மூழ்கியவனாய் கிளப்பை நாடிச் சென்றான். தாய்ப்பசுவின் மடியை நாடி ஒடும் இளங்கன்று போல் அவன் போனான். அது அவனை 'வா... வா' என்று கைநீட்டி அழைப்பது போல் உணர்ந்தான். அப்போது அவன் கண்ணில் அது மட்டுந்தான் தெரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளப்.... எவ்வளவு பொருத்தமான இடத்தில் அமைத்திருக்கிறார்கள். செருப்பு அறுந்து போகும் சந்தியில் செருப்புத் தைப்பவர் இருக்கை. ஆஸ்பத்திரிக்கு அருகில் போத்தல் விற்பவன். டிஸ்பென்சரிக்கு முன்னே மெடிக்கல் சொப் மனம் ஏங்கி அழுது தவிக்கும் கடற்கரை அருகில் ஒரு கிளப். எல்லாம் எவ்வளவு பொருத்தம். இதை அமைத்த உரிமையாளரின் மனைவியும் ஏறு மாறாய் இருந்திருக்கவேண்டும். ஒருவரின் துயரம் மற்றவரின் மருந்துக்கு வழி செய்யும். நீ... எங்கிருந்தாலும் நிம்மதியாக வாழ்க!

மனதுள் வாழ்த்துக் கூறிக் கொண்டு கிளப்புக்குள் நுழைந்தான் சுந்தரம். அவனது நீண்டகால நண்பன் நவம் அங்கே அவனை வரவேற்றான். இருவரும் தோழமை உணர்வோடு கலந்து கொண்டனர். போதையில் மூழ்கிக் கவலைகளை மறந்து இன்பத்தில் திளைத்தனர். ஏதோவெல்லாம் பேசிப் பேசி சல்லாபமாய் இருந்து மெய்மறந்து களித்தனர்.

– குடும்பம் எந்நேரமும் இனிக்காது. குறை இல்லாத ஆணோ பெண்ணோ உலகில் இல்லை. ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு பிரச்சினை தோன்றிக் கொண்டே இருக்கும். தொல்லைகளை மறந்து கூடிக்களிக்கப் பழகுவதே வாழ்க்கை. கவலைகளை மறப்பவனே புத்திமான். துன்பங்களை இன்பமாக மாற்றச் செய்யும் இடமே கிளப். – என்றெல்லாம் திடீர்கண்டு பிடிப்புக்களை நவ–சுந்தம் கண்டு பிடித்தார்கள். கண்டு பிடிப்புகளுக்கு கால நேரம் இல்லை. ஊருங்காலும் அடங்கிப் போயிற்று.

இருவரும் எழுந்து நின்று இடுங்கிய கண்களை அகலத்திறந்து தலையை ஆட்டி.... குட்நைற் சொல்லிப் பிரிந்தனர்.

சுந்தரம் சைக்கிளில் ஏறி மிதந்த வண்ணம் உள்வீதிகளில் ஓடினான். வேலிகளில் முட்டி சந்திகளில் இறங்கினான். திரும்பவும் ஏறி பெல்லைத் தட்டித் தட்டிக் கொண்டு ஒருவாறு வீட்டுக் கேற்றுக்கு வந்து சேர்ந்தான்.

கேற் பூட்டிக் கிடந்தது. முன்லைற் எரிந்து கொண்டிருந்தது. பெல்லை இருமுறை அடித்தான்.

சிவப்புச் சரிகைச் சாறியும் செம்மஞ்சள் பிளவுசும் அணிந்து பூவும் பொட்டும் வைத்து கமலா புதுப் பொலிவுடன் வந்தாள். குளோன் நறுமணம் வீசியது.

இரும்புக் கேற்றுக்கு முன்னால் நின்று அவளைக் கூர்ந்து பார்த்துப் புன்னகை புரிந்தான். "ஆ... நல்லாரிக்கு" என்று தலையை ஆட்டினான். சாராய வாடை அவளில் மோதியிருக்க வேண்டும். அவள் முகுத்தைச் சுளித்தாள் 'திறப் பெடுத்துக் கொண்டு வாறன்' என்று வீட்டுக்குள் போனாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் விரைவாய் வருவாள் என்று எதிர்பார்த்தான். அது நிகழ வில்லை. அவனுக்கு எரிச்சலாய் வந்தது. பலமுறை பெல்லைத் தட்டினான். சற்று நேரத்தின் பின் வந்து கேற்றைத் திறந்ததும் அவன் உள்ளே நுழைந்தான். அவள் உடனே கேற்றைப் பூட்டிவிட்டு விரைவாக மண்டபத்துள் வந்து "மெதுவாக வாங்க"... என்று மின் விசிறியைப் போட்டாள். உள்ளே கிடந்த சாய்மனைக் கதிரையில் இருக்கச் செய்து விட்டு சாப்பாட்டு மேசையைச் சரிசெய்தாள்.

அவன் கதிரையில் அமர்ந்து கொஞ்சம் கொறித்து விட்டு சாய்மனையில் வந்து சாய்ந்து கொண்டான். அவள் முன்கதவைப் பூட்டிவிட்டு பக்கத்தில் அமர்ந்து கொண்டாள்.

"நான் உங்கள் வழிக்கு வந்திட்டன், நீங்களும் இந்தப் பழக்கத்தை இன்றோடு தொலைக்க வேண்டும். இந்தாங்க, சாறன், துவாய், வெட்சீட், உடுப்பைக் கழற்றி இதைக் கட்டிட்டு இங்கேயே படுங்க..." அவள் எழுந்து ஜன்னல்களை இழுத்துக் கொழுக்கி போட்டாள் லைற்களைக் குறைத்து விட்டு, அறைக்குள் புகுந்து கொண்டாள். ஒற்றைக்கதவு விரிந்திருந்தது.

அவளின் செயல்கள் அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. சாய்மனையில் சாய்ந்து கால்களை நீட்டினான்.

அதிகாலை ஐந்தரை மணிக்கு அவள் எழுந்து லைற்களைப் போட்டு பால்கோப்பி தயாரித்துத் கொண்டுவந்து கட்டிலிலே கிடந்த அவனை எழுப்பிக் கொடுத்தாள். அவன் குறுஞ்சிரிப்புடன் குட்மோனிங் சொன்னான். அவளும் குட் மோனிங் சொன்னாள். அவளின் புன்சிரிப்பை ரசித்துக் கொண்டே கோப்பியைச் சுவைத்துக் குடித்தான்.

எழுந்து காலைக் கடன்களை முடித்து விட்டு வந்து மேற்கு ஜன்னலை விரியத்திறந்தான். தேவர்ர காணிக்குள் நின்ற ஒற்றைப் பனை மரத்தில் ஒரு மரம் வெட்டி ஏறிநின்று அதனைத் துண்டாடிக் கொண்டிருந்தான். தேவர் அவ்விடத்தில் வீடு கட்டப் போவதாகக் கதை வந்தது.

கமலா வந்து ஜன்னல் சீலைகளை நன்கு ஒதுக்கி விட்டாள். எல்லா இடமும் சூரிய வெளிச்சம் நிறைந்தது. புதிய காற்றும் தவழ்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

# விழிப்பு

அவனுக்கு எல்லாமே அலுத்து விட்டன. எதிலும் லயிப்பு ஏற்படவில்லை. என்ன வாழ்க்கை என்று சலித்துக் கொண்டான்.

பின்னேரங்களில் தேடிவரும் நண்பர்களும் அவனைச் சந்திப்பது அபூர்வமாயிற்று. மனம் போன போக்கில் சுற்றித் திரிவான். மாலைப்பொழுதில் சிட்டுக்குருவி வாக்கில் பறப்பான். தொடர்புகள் துண்டிக்கப்பட்ட கிராமத்தில் நிலைபதியாகிவிட்ட உணர்வு மேலெழுந்தது. இப்போ வழக்கத்துக்கு மாறாகப் பல வாரங்கள் வீட்டிலே முடங்கிப் போனான். வெளியிலே தலைகாட்ட மனம் வரவில்லை. கட்டிலே தஞ்சம் என்று முகட்டைப் பார்த்தவண்ணம் கிடந்தான்.

உயர்ந்த நடுச்சுவரின் மேல் விளிம்பில் இரு கால்கள் பேயாட்டம் ஆடத் தொடங்கின. அத்தோற்றம் மேலும் வெறுப்பை அள்ளிக் கொட்டியது. ஏளனம் செய்யும் ஆட்டம் அது. தாக்கங்களின் விஸ்வரூபமா? மனப் பிராந்தியில் கவிந்த விரக்தியின் தாண்டவமா? உடனே எழுந்து அதனைத் தட்டிவிடவும் வலுவில்லை. சோர்வு அவனை முழுமையாகவே கௌவிக் கொண்டது.

நீண்ட நேரத்துக்குப் பின் ஒருவாறு எழும்பி வந்து வெளி விறாந்தையில் கதிரையில் அமர்ந்தான். கறுத்தக் கொழும்பான் மாமரம் வியாபித்து வாசலில் பெரிய குடை போல் விரித்திருந்தது. அதன் நிழலில் கதிரையில் சாய்ந்த வண்ணம் வீதியை நோட்டம் விடலாம். நீண்டகாலக் கனவொன்று நனவாகி வாசலில் சொலுத்து நிற்கிறது. இதைப்போல் என் எண்ணங்கள் யாவும் நிறைவேறி விட்டால்?

குளிர் சொரியும் மாமரம். குலை குலையாகக் கோடு விழுந்த காய்கள். கிளைகளெல்லாம் சவண்டு பூமித் தாயை வணங்கும். பொல்லாத அணில்கள் ஒரு நாளைக்கு எத்தனை காய்களைக் கோதித் தள்ளுகின்றன. ஏராளமான கனிகள் வீணாகிக் குப்பை மேடு உயர்கின்றது. அணில்களைக் கட்டுப்படுத்தவும் முடியவில்லை. வேறு வேறு அணில்கள். விதம் விதமான அழிவுகள். சகடை கட்டிக் கயிறிழுத்து ஒலி எழுப்பியும் பார்த்தான். சற்று நேரம் அவை மறையும். பின்பு யாருக்கும் தெரியாமல் வீட்டுக்கூரையில் இருந்தும், கிணற்றடி வாழையில் இருந்தும் குதிக்கும். ஓடி ஓடி மோப்பம் பிடித்துக் கோதிக் கொட்டும். இரத்தச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவப்புக் கொட்டைகள் மட்டும் தொப்பெனக் கீழே விழும். தேன் கனிகள் பாழாகிப் போகின்றன. சாம்பல் பூத்த காய்கள் கனிந்தால் இனிப்புக்குண்டு. அவற்றைப் பறிக்கவும் மனம் இளகவில்லை.

ஒரு வியாபாரி மொத்தமாக வாங்குவதாகப் பொருந்திக் கொண்டு போயிருக்கிறான். இருமுறை வந்து பார்த்தும் இருக்கிறான். வியாபாரி தனக்குள் ஏதோ கணக்கு வைத்திருக்க வேண்டும். மழையும் தொடர்ந்து கொட்டுகிறது. வெயிலையும் காணவில்லை. அரிசியும் விலை ஏறிப் போயிற்று.

நீட்டுக் கதிரையின் கைப்பிடியில் தலையணையில் தலை வைத்து மறுபக்கம் கால் நீட்டிப் படுத்தான். ரெயிலில் பிரயாணம் செய்யும் நினைவு மலர்ந்தது. வாழ்க்கைப் பயணத்தின் இடையே எத்தனை இடங்களில் இறங்கி ஏற நேர்கிறது? அவன் துள்ளி இறங்கி ஓடி இன்புறும் நேரம் இன்னும் வந்தபாடில்லை. அதனை எதிர்பார்க்காத நேரம் இல்லை. றெயின் ஜன்னல் போல் வேலியில் ஓட்டைகள். அதற்குள்ளால் பிரதான வீதியின் ஆரவாரங்கள் புலனாகின. வேகமாய் ஓடும் வாகனங்கள்! விரைவாய் நடந்து செல்லும் மனிதர்கள். ஆர்வமாய்ப் போகிறவர் களும், திருப்தி இன்றி வருபவர்களும், மீண்டும் கவலைகளை அள்ளிக்கொண்டு ஓடுபவர்களும். அவன் மறுபக்கம் திரும்பிப் படுத்தான். நினைவுகள் அவனைப் பிழியத் தொடங்கின.

இப்பகுதியில் சட்ட விரோத மின்பாவனையால் மின்சாரம் வெட்டப்பட்டு இரு வாரங்கள் ஆகின்றன.

தெருக்களும் தூங்கி வடியத் தொடங்கிற்று. கடைகளும் குறட்டைவிட ஆயத்தம். ஒன்றிரண்டு பலகைகள் மாத்திரம் திறந்து அரைக்கண் தூக்கம் போடுகிறது. மாலைக் கருக்கலும் அவனை வருத்தியது. இருள் சூழ்ந்து அவனை இறுக்கிக் கட்டிப் போட்டது. கவலையில் சுருங்கிப் போனான்.

லைட் இருந்தால் எவ்வளவு ஆனந்தம். முன் வாசல், கிணற்றடி எங்குமே ஒளிப் பிரவாகந்தான். எல்லா அறைகளிலும் வீடு நிறைந்த பதார்த்தம் குடிகொள்ளும். மேசை விளக்கு எங்குமே ஒளிகாலுமா? மண்டபம் மட்டும் வெளிச்சத்தால் சிரிக்கும். போத்தல் விளக்கொன்று குசினிக்குள் கண் சிமிட்டும். மனைவி அதைத் தூண்டி விடுவாள். சில நேரம் அது பக் பக்கென்று அவன் மனம் போல் துடிக்கும். விளக்கொளியில் பிள்ளைகளும் அவனும் பெரிய மேசையைச் சூழ அருகருகே அமர்ந்து படிப்பார்கள். ஒருவரின் ஓசை மற்றவரில் மோதித் தெறிக்கும். அவர்களுக்குக் கண்ணால் வாசிக்கும் பயிற்சி போதவில்லை. அப்படிச் செய்யச் சொன்னால் வாசிப்பு நிகழாது. சுவர் மணிக்கூட்டை அடிக்கடி பார்ப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரஞ்செல்லக் கண்ணிமைகள் பாரிக்கும். அதன் சாடை அறிந்து 'ஆ... வாயால் படிங்க' என்பான். அவனால் எதுவுமே செய்யமுடியாமல் போகும். தெரு நாய்கள் ஈனக்குரல் எழுப்பும். மீண்டும் கைகால்களை முடக்கிக் கொண்டு நீட்டுக் கதிரையில் கெழிவான்.

செய்தியும் ஒழுங்காகக் கேட்க முடியவில்லை. பல நாட்களாக அலை வரிசைகளும் மூச்சிழுத்துக் கொண்டே இருக்கின்றன. அவனுக்கு அதிருப்தியே கதிப்பாய் இருந்தது.

தன் பிள்ளைகளிடம் எரிந்து விழுந்தான். பாடப்புத்தகங்களில் சில வினாக்களைக் கேட்டுப் பார்த்தான். அவ்வினாக்கள் அவர்களைக் கதிகலங்க வைத்தன. மீண்டும் சீறிப் பாய்ந்தான். மனைவியைப் பார்த்துப் புறுபுறுத்துவிட்டு முகத்தை 'உம்'மென்று பிடித்துக்கொண்டிருந்தான்.

அரச உத்தியோகத்தர்களுக்கு இருவருடச் சம்பள முற்பணம் கொடுக்கும் செய்தியும் சூடு பிடித்துத் தணிந்து விட்டது. அது கையில் ஏறி இருந்தால் தொல்லைகள் தூசாகிப் போயிருக்கும். அல்லது கிராம சேவை உத்தியோகத்தராய் மாறவேண்டும். அப்போதுதான் நாமும் பவுறாய்த் திரியலாம். அவன் மனம் வருந்தினான். நித்திரா தேவி அவனை அணைத்துக்கொள்ளப் பார்த்தாள். சொற்ப நேரம் தன்னை மறந்து சுகித்தான்.

'என்ன நித்திரையா' என்று வாசலுக்கு வந்த அவனது நண்பன் சேகரின் குரல் கேட்டுக் கண்விழித்தான். சிறிது தயக்கமாக இருந்தது. வாங்க வாங்க என்று மறுகதிரையில் இருக்கப் பண்ணினான்.

சேகர் எப்போதுமே உசார்தான். இளமைத் தோற்றமும் மாறவில்லை. கலாவிற்பன்னன். உயர் மட்டங்களிலும் அவனுக்குத் தனி இடம். அடிக்கடி இவனைத் தேடி வருவான். இருவருக்கும் நீண்ட கால உறவு. அரசியல், கலை, இலக்கியம் பற்றி ஆழமான உரையாடல்கள் நிகழும். அன்றும் இருவரின் சம்பாஷணை களைகட்டியது. அவனுக்குத் தெம்பு வந்து போனது.

'வெளிக்கிடவில்லையா?' சேகர் இழுத்தான்.

இருவரும் தெருவிலே சைக்கிளோடிக் கலந்துரையாடுவது தனி இன்பம். மாலை இருளில் கடையில் ஏதாவது காரமாகச் சாப்பிட்டுத் தேநீர் குடிப்பார்கள். இடையில் சுவாரஸ்யமான அளப்புகள், கவலைகள் ஓயும். எதிர்காலக் கனவுகள் பூக்கும். எல்லாம் புத்தம் புதியவைதான். நாலிலே ஒன்றிரண்டு பலித்துக்கொண்டும் இருந்தன. ஆயினும் அவனுக்கு உசாரைக் காணவில்லை. 'இம்'... இள நாக்கடித்துச் சோர்வு காட்டினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஆ... வாங்க... வாங்க வெளிய போவம்' என்று கட்டாயப்படுத்தி அழைத்தான். அவன் தனது பெரிய குடையையும் எடுத்துக் கொண்டான். அப்போதுதான் சேகருக்குத் தனது குடையின் ஞாபகம் வந்தது.

'ஓ... எனது குடையை எங்கே வைத்தேனோ தெரியாது. பாடசாலைக்குப் போய்ப் பார்க்க வேண்டும். வாருங்கள்... கெதியாய்ப் போவம்' மேலும் சேகர் துரிதப்படுத்தினான். இருவரும் சைக்கிளை உழக்கிக்கொண்டு பறந்தனர். இருள் கவியத் தொடங்கிற்று. தெருவில் சந்தடிகள் குறைந்து விட்டன. கொஞ்சத்தூரம் ஓடிக் கிழக்கே திரும்பி உள்வீதியால் சென்றனர். அவ்வீதியில் சந்திக்குச் சந்தி சனங்கள். பரபரப்பு மிகுந்த நாள் என்பதை அவர்கள் நினைவூட்டினர். அவன் முன்னுக்கே சென்றான். 'ஆ... கவனம் மெதுவாய்ப் போங்க...' எச்சரித்த வண்ணமே சேகர் வந்து கொண்டிருந்தான்.

பாடசாலை நெருங்கிவிட்டது. காவலாளியையும் காணவில்லை. தெருக்கதவு திறந்தே இருந்தது. வாருங்க என்று சேகர் உள்ளே சென்றான். அவன் பின்னால் போனான். திறப்பைப் போட்டு அறைக்கதவைத் திறந்தான். பலமுறை தெண்டித்தும் அது திறபட மறுத்தது. இந்தாங்க நீங்க திறங்க பார்ப்பம் என்று நீட்டினான். அவன் திறப்பை வாங்கிப் போட்டு நாலைந்து தெண்டுத் தெண்டினான். திறப்படவில்லை மீண்டும் கொஞ்சம் ஊன்றித் தெண்டினான். பூட்டுத் திறபட்டுக் கதவு விரிந்தது. உள்ளே போன சேகர் இருளில் அறை முழுவதும் தடவினான். குடை அகப்படவில்லை. "சரி இந்தாங்கோ புத்தகத்தைப் பிடித்துக் கொள்ளுங்கோ லைற் எடுத்து வருகிறேன்" என்று முன் கடைக்குப் போனான். மறுகணமே டோச் லைற்றுடன் வந்து அறை எங்கும் துழாவினான், காணவில்லை. "சரி... புதுக்குடை இங்கில்லாவிட்டால் வீட்டிலே இருக்க வேண்டும். ஆ... வீட்டுக்குக் கொண்டு போன ஞாபகமும் இல்லையே.

கதவை இழுத்துப் பூட்டிவிட்டு வெளியேறினான். அவனும் கூடவே வந்தான். கேற்றுக்கு வெளியே வந்து அதைச் சாத்திக் கொழுக்கியையும் போட்டுவிட்டு, கடையில் லைற்றையும் கொடுத்ததும் சேகர் சைக்கிளில் ஏறினான். அவன் இந்தாங்க உங்கட புத்தகம் என்றான்.

"ஓ... கண்டீங்களா? நான் எப்போதும் மறதிதான்" என்று கூறி சேகர் தன் புத்தகத்தை வாங்கிக் கொண்டான். இருவரும் பிரதான வீதிக்கு வந்து தேநீர் பருகினார்கள். மீண்டும் சந்திப்போம் என்று மகிழ்ச்சியோடு பிரிந்தனர்.

அவன் வீடு வந்தான். சேகர் எப்போதும் உசாராய் இருப்பதன் தாற்பரியம் அவனுக்குப் புரியத் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் பயணங்களில் எதையுமே தவற விட்டதில்லை. வங்கிக்குப் போனாலும் காசோலையை மாற்றி, சந்தைக்குப் போய், கடைகளிலும் சிறு சிறு கணக்குகளைத் தீர்த்து, மனைவிக்குக் குளிசையும் வாங்கிக் குடையோடு வந்து சேர்வான். கணக்குப் பார்த்தாலும் காசு பிசகில்லாமல் இருக்கும்.

நடந்த முக்கிய விடயங்கள், தன்னைத் தாக்கியவைகள், பிடிக்காத சம்பவங்கள், கடுமையான வார்த்தைகள் எல்லாம் அவன் மனதில் அச்சொட்டாகப் பதிந்து அவனைக் கருக்கி உருக்கவே செய்கிறது. அவைகளை இனித் துடைத்தெறிய வேண்டும். புது மனிதனாக வாழ அவன் திடசங்கற்பம் பூண்டு கொண்டான்.

அடுத்தநாள் பெரிய உற்சாகம் பிறந்தது.

சேகரை அவனது பாடசாலையில் காண வேண்டுமென நினைத்தான். மழை ஓயவில்லை. குடையை விரித்துக் கொண்டு சைக்கிளை உழக்கினான்.

மாலையில் சேகர் தனது அறையில் எதையோ ரைப்பிங் செய்து கொண்டிருந்தான். அது ஒரு சிறுகதையாக இருக்கலாம். மனதிலே கதையை மீட்டுக்கொண்டு தட்டச்சு செய்வதில் சேகர் சமர்த்தன். அதைத் தடுத்துவிடக் கூடாதென எதுவுமே பேசாமல் திரும்பிவிட முனைந்தான். ஏதோ புலப்பட்டிருக்க வேண்டும். அப்படியே விட்டு எழும்பி வாங்க என்று வரவேற்றான்.

"என்ன கதையா?" என்றான் அவன்.

"ஒ... இன்னும் முடியவில்லை. நான் சொன்ன 'மாம்பழக்குருவி' நாளை படிக்கத் தருகிறேன்."

இருவரும் அமர்ந்து உரையாடினார்கள். இடையில் உங்களது குடையை எடுத்து விட்டீர்களா?" கேட்டான் அவன்.

"இல்லை"

"அப்படியானால் மழைக்குள் எப்படி வந்தீர்கள்?"

"பக்கத்திலே ஒரு குடையை வாங்கிக்கொண்டு வழமை போல் எனது வேலைக்கு வந்து விட்டேன். இந்தச் சம்பளத்தில் ஒரு குடை வாங்க வேண்டியது தான்" என்றான். சேகருடைய உற்சாகம் குறையவில்லை.

அவனுக்கு ஆச்சரியமாய் இருந்தது. மௌனமாகி விட்டான். நான் என்றால் குடையை இழந்ததற்குக் கவலைப்பட்டு முழு நாளும் சோர்ந்து போய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்திருப்பேன். சேகருக்குக் கவலையே இல்லை. பழையபடியே கடமை புரிகிறான். புறத்தாக்கங்களுக்கு இடம் கொடாமல் இயங்குபவன் சலிப்படையவே மாட்டான். அக உணர்வுகள் எமது கடமையைப் பாதிக்காதிருக்கப் பழக வேண்டும். அவன் தன்னையே நொந்து கொண்டான்.

"என்ன மௌனமாய் இருக்கிறீர்கள்?"

"ஒன்றுமில்லை. நாளை மாலை என்ன நடந்தாலும் வந்து சந்திக்கிறேன்" குடையை விரித்துக்கொண்டு அவன் விரைந்தான்.

மாம்பழ வியாபாரியோ, இரு வருடச் சம்பளக் கடனோ, மின்சார சாரமோ எது வந்தாலும் ஒன்றுதான். வராவிட்டாலும் ஒன்றுதான். எதற்கும் ஒரு மார்க்கம் பிறந்து தானே தீரவேண்டும். வெள்ளம் வடிவதற்கு வெள்ளமே வழியையும் எடுக்கும். அவன் மனம் உறுதியாகிவிட்டது.

மாலை நேரம் இரண்டு சிட்டுக்குருவிகள் வழமைபோல் சிறகடித்துப் பறந்து செல்கின்றன.

நன்றி :
தினகரன் 18.04.90



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11

# வெளிச்சம்

மேகராசாவைப் பற்றிய நினைவுகள் மனதில் ஆழமாகப் பதிந்து விட்டன. பட்டினத்திலே கல்வியை ஆரம்பித்து 'இங்கிஸ் மென்' என்று பேரெடுத்தவன். ஏறு நெற்றி, கூரான மூக்கு, கனிந்த பார்வை, ஒல்லியான உடம்பு அவனைப் பளிச்செனக் காட்டிவிடும்.

எல்லோரும் அவனை வேணாம் என்றாலும் எங்கள் பாடசாலை மட்டும் நல்வரவு கூறி ஏற்றுக் கொண்டது. ஏனென்றால் ஆங்கில ஆசிரியருக்கும் இப்பாடசாலைக்கும் ஏழாம் பொருத்தம். பல வருடங்களுக்குப் பிறகு வியாழன் மாறும் என்கிறார்களே அதுபோல் ஒருமாற்றம் கிடைத்திருக்கிறது.

அவனுக்கும் சனி பகவானுக்கும் அண்மையிலே கொண்டாட்டம். இங்கிருந்து மாறிப் போனவன் தனது அந்திம காலத்தைச் சுகமாகக் களிக்க மீண்டும் இங்கேயே வந்து விட்டான். வந்தாரை வாழவைக்கும் பூர்வீகப் பாக்கியத்தை எங்கள் ஊர் இன்னும் இழக்கவில்லை என்பதற்கு அவன் வருகையும் ஒரு அத்தாட்சியாகும்.

தூரத்துக் கிராமம் ஒன்றில் கிராம சேவையாளராகக் கடமை செய்யும் நாகப்பனைச் சந்திக்கப் போயிருந்தான். இனிய மாலைப் பொழுதை வீணாக்கி விட்ட களைப்போடு நேரே என் வீட்டுக்கு வந்தான். அவனது முகம் மாலைச் செவ்வரத்தம் பூப்போல் கூம்பி இருந்தது. வந்தமர்ந்ததும் கொஞ்சம் தண்ணீர் தாங்க சேர்" என்றான். மகன் எடுத்துக் கொடுத்த பெரிய கிளாஸ் தண்ணீரை வாங்கி முழுவதையுமே மடக் மடக் கென்று குடித்தான். அவனுக்கு உற்சாகம் அற்றுப் போயிற்று. நெஞ்சத்தின் சுமையை இறக்கி வைக்க வேண்டுமென அவன் விழிகள் கூறினாலும் கதிரையில் சாய்ந்து கொண்டு மௌனியாகவே இருந்தான். எனது நெஞ்சில் குண்டுசி பாய்வது போல் இருந்தது.

ஜீ.எஸ். நாகப்பன் ஒரு கறார் பேர்வழி சட்டமென்றால் சட்டம். நூலுக்கே நிற்பான். அதிலே கொஞ்சம் தொய்விருந்தால் போதும் புதை பொருள் ஆராய்ச்சி செய்து பிச்சிப் பிடுங்கிப் பொக்கற்றை நிரப்பிக் கொள்வான். யாரேனும் சிபார்சு பெற அவனிடம் போனால் பெரிய வில்லு கண்டம்தான். தொண்ணூத்தெட்டுக் கேள்விகளுக்கு விடை கூறியே ஆக வேண்டும். அதனை வடித்துச் சுருக்கிப் பிடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடாமல் ஆங்கிலத்தில் இருவசனம் எழுதி ஒப்பமிட்டுக்கொடுப்பான். இதற்கிடையில் இரு மஞ்சள் நோட்டும் மூன்று பொழுதுகளும் முடிந்திருக்கும். சற்றுப் பெரிய விடயமென்றால் அதற்குத் தர ஐந்தென்று செலவெழுத வேண்டிவரும் நாகப்பனின் சாதுரியம் மகா பிரமாதந்தான்.

ஏ.ஜீ.ஏ உடனும் கூட்டங்களில் நாகப்பன்மட்டுமே வாதிடுவது வழக்கம். தாபனக் கோவை, நிதிச்சட்டம், சுற்றறிக்கைகள் யாவுமே அவனுக்குத் தளதண்ணி. புதிய திருத்தங்களும் திகதிப்படி மனப்பாடம். கிட்டடியில் நிருவாக சேவை பரீட்சையும் எழுதி இருக்கிறான். மூன்று மொழியிலும் பாண்டித்தியம் உள்ளவன். பதவி உயர்வு அவனுக்கு மட்டுமே கிடைக்குமென்ற செய்தியும் பொசியத் தொடங்கிவிட்டது.

கலியாணம் முடித்த ஆறேழுமாதத்தால் வெளியேறியவன் தாயோடும் தங்கை வசந்திச் ரீச்சரோடும் வாழ்கிறான். கட்டான உடம்பு. இன்றைக்கும் அவன். மாப்பிளைக் கோலந்தான். அவனது மனைவி அலரிக் கொட்டையும் சர்க்கரையும் தின்று பரலோகம் போய் விட்டாள். அவனுக்கு முற்கட்டி பிற்கட்டி இருக்காதென்றுதான் அவனைத் தன் தங்கைக்குக் கேட்டு – வாய்வைக்க, ராஜா போயிருந்தான்.

நாகப்பனைக் காணப் போனவன் ஏன் இப்படிச் சோர்ந்து வந்தான்? மனம் ஆறியதும் சொல்வான் என்றிருந்தேன். திடீரெனப் "பிறகு கதைக்கிறான் சேர்!" என்று எதையோ பாதையில் தவற விட்டவன் போல் எழுந்து நடந்து விட்டான் ராஜா. அவனைப் பற்றிய வட்டம் பெரியதாய் வியாபித்தது. நெருங்கிப் பழகியவரின் துயரை விசாரித்து ஆறுதல் சொல்ல மனம் துடித்தது. அவனைப் பற்றிய நினைவுகளே அலை அலையாய் வருகின்றன.

இன்னும் ஒரு வாரத்தால் மேகராசாவுக்குப் பொற்காலம். ஓய்வு பெற்றவர்களின் வரிசையில் அவனும் இணைந்து கொள்வான்.

பாடசாலை விடமுதல் பஸ்ஸுக்கு ஓடுவான். அவனுக்குக் கொஞ்சம் இளக்காரம். அரை மணித்தியாலம் முந்திப் போக அனுமதி. அது எல்லோருக்கும் இல்லை. மேலிடமும் அவனைக் கொஞ்சம் காப்பாற்றிப் பென்ஷனுக்கு விட்டிடுங்க என்று அன்புக் கட்டளையும் போட்டிருக்கிறது. அவன் மட்டுந்தானே சேவை நீடிப்பே வேணாம் என்று ஐம்பத்தைந்திலே ஓய்வு பெறுகிறான். சலுகைக்கு வேறு காரணங்களும் இல்லாமல் இல்லை.

அவனுடைய ஊரிலிருந்து எங்கள் பாடசாலை இரண்டு ரூபாக் கட்டண தூரம் தான். ஹர்த்தால் றவுண்டப் நாட்களில் கொண்டுவந்த பத்து ரூபாவையும் வருவதற்கு பலிகொடுத்து விட்டுப் போகும் போது வெறுங்கையோடு நடந்து போவான். பாடசாலை பிரதான வீதியிலிருந்து கூப்பிடுதொலை உள்ளுக்கு. அதை புதிதாக உருவாக்கியவர்களுக்கு கடற்காற்றில் அபார மோகம் இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலும் கசந்து படுக்கையும் நொந்தவிடலைப் பருவத்தவராய்த்தான் இருக்கும். கடற்காற்று மனப் புண்ணுக்கு மருந்துதான். ஆனால் அது ஆறாத புண்ணாயிருந்தால் மேலும் புரைக்கும். வேதனையில் துடிக்க நேரும். அக்காற்று மேகராசாவுக்கு பிடிக்காமல் போவதில் ஆச்சரியமும் இல்லை.

மினி பஸ்சில் இறங்கி பொடி நடையில் அவன் ஓடிவருவான். சிலவேளையில் தூரத்தில் இறங்கி, வியர்க்க வியர்க்க வருவான். எவ்வளவு சொன்னாலும் பஸ் சாரதிகள் நிறச்சாரிகளுக்கே பிறேக்கை ஊன்றி அழுத்துகிறார்கள். அது அவர்களின் இரத்தத்திலே கலந்தும் போயிற்று. இதற்காக ஒரு பஸ்சாரதியோடு வாக்குவாதப்பட்டு அடிபிடிக்கும் தயாராகி இருக்கிறான். ஆனால் சாரதியின் ஒரு கைக்கே அவன் காணாது. ஒல்லியான உடம்பு. கச்சான் காற்று நினைத்தால் ஆளை வீழ்த்திவிடும். இது ராசாவுக்கும் தெரியும். மேகராசா பின்நிற்கமாட்டான். பழைய வீரதீரப் பிரதாபங்களை மூட்டை அவிழ்த்துக் காட்டிப் பெருமை அடித்து விட்டே நிமிர்ந்து வருவான். கொஞ்சம் தட்டினால்போதும் அவனுக்குப் பக்கென்று நெருப்புப் பத்தும். அது அவன் கூடப் பிறந்து விட்டது.

நடந்து போகையில் மஞ்சளும் சிவப்பும் கலந்த வெலாட் மாம்பழங்கள் குவியல் குவியலாய் தினமும் வரவேற்கும். இந்தக் கிராமத்தில் மாம்பழங்கள் நன்றாகத்தான் சொரிகின்றன. வளவெல்லாம் குலைகுலையாய்ச் சிவந்து சவண்டு தூங்கும் சின்னஞ் சிறிசுகளின் கைநீளாது பழுத்துக் கனிந்தால் அவ்வளவும் ரொக்கந்தான். ஒரு பளுவைத் தாங்கும் தூணாகிவிடும்.

மாம்பழங்களை வைத்துக் கொண்டு வாங்குபவர்களைத் தேடி ஏங்கும் கன்னியர்களின் முகங்களும் வெலாட் மாம்பழத்தின் அடிப்பாகம் போல் நல்ல சிவப்புத்தான். மாங்கனிகளைவிடவும் அதை விற்கும் கனிகளின் முகத்தையே அவன் மிகவும் ரசிப்பான். வலியவே குட் மோணிங் சொல்வான். அதைக் கேட்டதும் றோசாக்கள் சிரிக்கும். அச்சிரிப்புக்காகத் கூறிய விலையைக் கொடுத்தே இரண்டு மாம்பழங்களை வாங்கிச் செல்வான். அது தேனா, புளியம் பழமா என்னும் கவலையே அவனுக்கிருக்காது. றோசா மலர்களில் தானே ராசாவுக்குக் கரிசனை பிறந்து விட்டதே. அவர்களின் புன்னகைக்காக இப்போ எதையும் இழக்கவும் அவன் தயாராகி விட்டான். தான் ஒரு தனிக் கட்டையாய் இருக்கப் போவதில்லை என்பதை வெளிக்காட்டவும் தொடங்கி விட்டான்.

ஓய்வு வேளையில் கடலை, பயறு கொறிக்கையில் நானும் மற்ற நண்பரும் ஊது ஊதென ஊதிவிட்டோம். "கடைசிக் காலத்தில் சுடுநீர் வைச்சுத்தர சொந்தமாய் ஒரு துணை வேண்டும் தானே? உங்களுக்குப் பிறகு பென்சன் யாருக்கும் இல்லாமல் போகுமே? ஒரு ஏழைக்கு வாழ்வு கொடுங்களன். புண்ணியமாவது கிடைக்கும்" நாங்கள் ஓதிய மந்திரம் சும்மாவிடவில்லை. ஆளை உசுப்பத் தொடங்கிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு வந்தால் நிம்மதி பெருமூச்சு விடுவான். அதுவும் அற்பப் பொழுதில் மறையும். மாலை வேளையில் ஐயரின் தேநீர்க்கடை, உபதேசியார் வீடு, பைசிக்கிள் கடை என்று மேய்ந்து திரிவான். இரவு சாப்பிடும் நேரத்துக்கு வீடு வருவான். தனது குளிசைகளை விழுங்கிவிட்டு ரீ.வி. பார்ப்பான். பின்பு அணில் கொறிப்பது போல் கொறித்து விட்டு உறங்கிப் போவான். உறங்கினால் சவம் தான். சூரியன் எழுந்ததும் கண் விழிப்பான்.

பாடசாலை நினைவைத் தாலூட்டுவாள். துடிச்சுப் பதைச்சு ஓடி வருவான். இங்கே தொண்ணூறு குஞ்சுகள் கல்விப் பசி போக்கக் கூடி நின்று கிளறும். போன மாதம் எங்களின் இல்ல விளையாட்டுப் போட்டியும் விமரிசையாகவே நடந்தது. அதில் நிகழ்ந்த கயிறிழுத்தலில் மேகராசா திருமணமாகாதவர்கள் பக்கம் நின்று இழுத்து வெற்றிக் கொடியும் நாட்டினான். அதன் பிறகு ஆளுக்குப் பெரிய புளுகம். இளம் வட்டத்தில் நல்ல கிராக்கி. அவர்களோடு சேர்ந்து நின்று பேசிக் குதுகலிப்பான். உரக்கச் சிரித்து மகிழ்வான். பெரிதாய்ச் சிரிக்கையில் கடைவாய்ப் பற்களில் கடப்புத் தெரியும். அது பற்றிக் கொஞ்சமும் அசட்டை இல்லாமலே அவன் சிரிப்பான். இளவட்டம் மேலும் சிரிப்பூட்டி வேடிக்கை பார்க்கும். அவனது குழந்தை மனம் வஞ்சகம் அறியாமல் வண்ணாத்திப் பூச்சிபோல் பறக்கும்.

என்றாலும் இந்தச் சூழல் அவனுக்குப் பிடித்துப் போயிற்று. துருதுருக்கும் வேகமோ சந்தடியோ இல்லை. எங்கும் ஒரே நிசப்தம். மெல்லிய காற்று குழு குழு வென்று அரவணைக்கும். பனிரெண்டுக்குப் பிறகு தொங்கல் வகுப்பறையில் இடது பக்க மூலையில் அமர்ந்தால் உற்சாகங்கள்தான். இது என்ன மாதிரி முகத்தைத் தொட்டுத் தடவிச் செல்கிறது.? எனது மூத்த தங்கச்சியின் கடைசிப் பிள்ளை நழினி பிஞ்சுக் கரங்களால் சொக்கைத் தடவுவது நினைவில் வருகிறது. அவளும் இரண்டு நாட்கள் மட்டுமே தங்குகிறாள். அத்தான் வந்து கூட்டிப் போய்விடுவார். அவன் மனம் பொருமும். தங்கை லதாவுக்கேனும் திருமணம் நிகழ்ந்திருந்தால்; அவன் மனதைக் கறையான் அரித்துக் கொண்டிருப்பது அது ஒன்றால் தான். என்னிடம் பலமுறை அழாக்குறையாகச் சொல்லி இருக்கிறான்.

வீடு போய்ச் சேருமட்டும் பெரிய தொல்லை என்பான். இடையிலே இரண்டு கேம்புகள்; அடையாள அட்டையைக் கேட்டு தொல்லைப் படுத்துகிறார்கள். சமாதானப் புறாக்களின் பார்வையில் அவனும் பொடியன்தான். எத்தனை நாட்கள்தான் அதை எடுத்து நீட்டி இருக்கிறான்.

இப்போதும் மடிப்புக் குலையாத உடையோடுதான் வருவான். ரீச்சர்மாரும் பஸ்ஸில் அவனைத் தனகிப் பார்ப்பார்கள். அருணா ரீச்சரும் நக்கல் அடித்துச் சிரிப்பாள். அவளும் தூரத்துப் பள்ளியில் படிப்பிக்கிறாள். பஸ்சில் சந்திப்பு நிகழும். ஒளிக்காமல் எல்லாவற்றையும் என்னிடம் கொட்டுவான். நானும் அவனோடு அப்பிடித்தான். என்னோடு கலந்தே விடுகிறான். நாங்கள் பிரிக்க முடியாமல் பிணைந்து விட்டோமா? அவனது நினைவிலே மூழ்கிப் போயிற்றேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தாம் திகதியோடு அவனுடைய பாடசாலை வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளி. அரை நூற்றாண்டில் பெரும்பாகம் அவதிகள்தான். மனம் அடிக்கடி புலம்பும். உலகம் தெரியாத பிஞ்சு மனங்களோடு ஒன்றிய சீவியத்துக்குப் பிரியாவிடை. இனித்தான் நிஜ உலகப் பிரவேசம். நிம்மதி பூக்கும் காலம் நெருங்கி விட்டது. இனி அலுப்பும் விரக்தியும் கலக்காத சுகந்தமான பொழுதுகளில் பூரிப்பான்.

பதினோராந்திகதி அவனது பிறந்த நாள். என்னையும் அழைத்திருக்கிறான். அன்பொடு பழகி இன்பதுன்பத்தில் பங்கு கொள்ளும் ஏழெட்டுப் பேருக்கு விருந்து கொடுக்க உத்தேசம். இராச் சாப்பாடு இனிய உறவினைக்காட்டும். சந்தோசத்தால் மனம் விம்மும். அவனது சேவையின் இறுதிநாள். ஆரம்பமும் இறுதியும் தான் எல்லோருடைய நெஞ்சிலும் இருக்கப் போகிறது.

கந்தோருக்கும் கடிதம் அனுப்பிவிட்டான். இம்மாதச் சம்பளம் வந்து சேராது. பாடசாலைப் பொருட்களோ பணமோ இவரிடம் இல்லை. யாவும் மீளப் பெற்றுள்ளேன் என்று அதிபர் கொடுத்த கடிதம் நேற்றுக் கிடைத்திருக்கும்.

சம்பள மற்ற லீவுகள் பற்றிக் கணக்குப் பார்ப்பார்கள். அவனைப் பொறுத்தவரை இக்கணக்குப் பார்ப்பது அடிக்கடி நிகழும். இது இறுதிக் கணக்கல்லவா? கொஞ்சம் நாள் கூடப்பிடிக்கும். அதுதானே போன மாதத்துக்கு முதல் இரண்டு மாதச் சம்பளமும் இல்லாது போயிற்று. போன மாதச் சம்பளம் என்ற பெயரில் தொள்ளாயிரம் ரூபாவே அவன் கையில் ஏறிற்று. கடைசிச் சம்பளம் அடுத்த மாதமோ அல்லது அதற்கடுத்த மாதமோ வந்து சேரலாம். முருகேசு மச்சான் பென்சனுக்குப் போகும் போதும் அப்பிடித்தானே வந்தது.

போன மாதச் சம்பளம் கூட இலகுவாகவா கிடைத்தது. கிளாக்கர் தரமுடியாதென்று மறுத்துவிட்டார். மூளையும் பெருந்தன்மையுமுள்ள அதிகாரி பாலாவின் சாதுரியத்தால் எழுத்தை எழுத்தால் வெட்டிய பின்பே கையில் வந்தது. இல்லையேல் கனிந்தது காயாகித் திரும்பி இருக்கும். தெருவிலே தலைகாட்ட முடியாமல் தவித்திருப்பான். தேநீர்க் கடைக்காரனும் ஊரையே கூட்டிப் புதினம் காட்டி இருப்பான். அவன் வெளிநாட்டு மோகத்தால் ரியூசன் எடுத்ததெல்லாம் ஒருகாலம். நாலு காசு ஏறிவிட்டால் சிலருக்குக் கண்மண் தெரியாது. தார தம்மியங்களை மறந்து போவார்கள். தமது காரியம் முடியுமட்டுமே அன்பு காட்டுவார்கள். தேநீர்க் கடையில் சிக்கிறட் கடன் எண்ணூறு பாக்கி இருந்து வருகிறது. அது சம்பளம் வரும் வரை இரட்டிப்பாகிக் கழுத்தைப் பிடிக்கும். சம்பளத்தில் பாதி காற்றோடு கலந்து கவலையைத்தான் பெருக்கிவிடுகிறது.

சிக்கிரெட் பத்தினால் மெல்லிய நிம்மதிதான். அதுவும் தற்காலிகமானது. கணப்பொழுது இனம் தெரியாத களிப்பில் மிதப்பான். நீர்க்குமிழி வாழ்க்கையில் வேறென்னதான் கண்டு விட்டோம் என்பான்? கடந்த பொழுதுகளை மீண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்து மகிழக்கூடியதாய் இருந்தால் அது மிகவும் பெறுமதி மிக்கது தான். என்ன செய்வது? அதை நினைத்தால் அவனுக்க வேதனைதான் கூடும். விறைந்துப் போய்விடுவான். வானத்தை நோக்கி ஊர்ந்து செல்லும் மேகத்தை ஊன்றி லயித்த வண்ணம் இருப்பான் மேகராசா.

வலியம், ஆட்டேன், ஸ்ரெலாசின் இவ்விரண்டு விழுங்கினால் தான் எழுந்து நடமாடலாம். இல்லையேல் கிணற்றுக்குள் அடித்துப் போட்டவன்போல் கிடப்பான். தலை பாரிக்கும், உசாரே இருக்காது. கைகால் அசையாமலே கிடக்கும். அம்மா எழுப்பிப் பார்த்து விட்டுத் தோல்வியோடு போய்விடுவா. இதனால்தான் அவனுக்குச் சம்பளமற்ற லீவுகள் அதிகம்.

சிகெரட்டை வாயில் வைத்தால் உயிர் பிழைக்கும். அதை வாயில் வைத்த வாறே புகையை விட்டு விட்டுக் கதைப்பான். அது அவனுக்கு தனி இன்பம்.

இனிமேல் துடிச்சுப் பதைத்து எழும்பாமல் நெழிந்து கிடக்கலாம். நின்ற நிலையில் பிட்டையோ, அப்பத்தையோ திணித்துக் கொண்டு பஸ்ஸூக்கு ஓடவேண்டியதில்லை. எந்நாளும் சனி, ஞாயிறு போல் தான் இருக்கும். ஒரு வாரத்தால் சுதந்திர மாளிகைப் பிரவேசம். வெள்ளைதான் அணிய வேண்டுமென்ற நிர்ப்பந்தமும் இருக்காது. விருப்பம் போல் தடித்த நிறக்கோடுகளும் போடலாம். காலத்துக்குக்காலம் பெரிய புள்ளிகள் எல்லாம் நிறங்களை மாற்றித்தானே உச்சத்தில் ஏறி இருக்கிறார்கள்.

இன்பமான வாழ்க்கையை இனி இறைவன் அருளட்டும். போலியற்ற வாழ்க்கை பதினோராம் திகதி ஆரம்பம். அம்மாவும் நல்லாக் களைத்துப் போயிற்றா. அடிக்கடி டாக்டரிடமும் கூட்டிப் போவான். நான் அங்கு போய்வரத் தொடங்கிய நாட்களில் மொழுமொழுவென்றிருந்தவ இப்ப நடந்தா ஒரே இளைப்புத்தான்.

தம்பியும் மூத்த மூத்த தங்கச்சியும் தூரத்தில் சீவியம். அவரவர் பாடும் அவரவர் குடும்பமும். இடையில் இருந்து போட்டு வந்து இரண்டொரு நாட்கள் தங்கிப் போவார்கள். தாயகம் அவர்களுக்கு உல்லாசப் பயண விடுதிதான். மேகராசாவைப் பற்றிய கவலையே இல்லை. “அண்ண! பென்சனுக்குப் பிறகு என்ன செய்யப் போறீங்க?” என்பார்கள். ஊர் ஒப்பினைக்கான பேச்சு, பார்ப்பமே.... என்று சோகத்தோடு கூறுவான். அரசியல்வாதியாகவோ வியாபாரியாகவோ அவனுக்கு எண்ணம் இல்லை.

அவனது தாயும் ஓய்வுபெற்றுப் பதினைந்து வருடங்கள் ஓடி விட்டன. அப்பா கண்மூடும் போது “தங்கையை விட்டு எங்கயும் ஓடிராதமனே!” என்று கூறிய ஓசியத்து மட்டும் அவன் மனதை விட்டு அகல வில்லை. அதுவே அவனைக் கொஞ்ச நாளாய் மிகவும் வாட்டி எடுத்தது. தன்னுடைய பென்சனோடு மூன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பென்சன் பத்தாயிரம் தேறும். அம்மாட கண்ணோடத் தங்கையைக் கரையேற்றினா நிம்மதி பிறக்கும். அதன்பிறகு மாம்பழம் விற்கும் மஞ்சட் கிளியையாவது கேட்டுப் பார்க்கலாம் என்பான்.

லதாவுக்கும் வயது கூடிற்று. வயதேறினாலும் நல்லதுதான். இக்காலத்தில் படித்த பெண்களின் திருமண வயது அதிகந்தான். அப்பதான் ஒரு பிள்ளையோட நிம்மதியா வாழலாம். இல்லாட்டிக் கற்பகம் மச்சாளப் போல வருசத்துக்கு ஒன்றப் பெத்து தேய்ஞ்சு மெலிஞ்சு அழிய வேண்டியதுதான். ஓ.... எங்கட கோமளம் ரீச்சரும் ஒரு குஞ்சரத்தை ஈன்று குண்டாகத்தானே இருக்கிறாள். அவளின் திருமண வரத்தை இறைவன் இருவருடங்களுக்கு முதல்தானே கொடுத்தார். அப்பாவின் நம்பிக்கையைக் காப்பாற்றவே அவன் பிரயத்தனம் எடுக்கிறான். வெற்றி கிடைத்து விட்டால்.... நாகப்பன் கை கொடுத்தால் தொல்லைகள் முடிந்துவிடும். அவனும் கரையேறி விடுவான்.

லதாவுக்கு ஆசிரிய நியமனம் அண்மையில் தான் கிடைத்தது. எவ்வளவு காலமாக அதற்கும் தவம் கிடந்தாள். அதுபோல் திருமணமும், நிகழ்ந்து விட்டால் விதி நமது கண்களைப் பொத்தி 'புங்கடி புளியடி' விளையாடாது. தேடுதலும் தவிப்பும் நேராது. லதாவின் வயதில் மூத்த தங்கச்சி இரண்டு பிள்ளைகளுக்குத் தாயாகி விட்டாள். அவன் சொல்லிப் புழுங்கினான்.

அவனும் சிறிப்பிரியாவைக் கை பிடித்து நாலு மாதங்கள் தானே வாழ்ந்தான். அவள் ஓர் அடங்காக் குதிரை. கடிவாளம் அவன்கையில் இருந்தும் மிரண்டு கொண்டே பாய்ந்தது. சீரான ஓட்டம் இல்லை. எந்த நாளும் சவுக்கோடே சவாரி செய்ய முடியுமா? அவள் ஒரு நாளாவது அவனுக்கு ருசியாகச் சமைத்துப் போட்டாளா? அவளின் தாய் தான் களைக்கக் களைக்க வேலை செய்வாள். நூல் நிலையம், பாட்டுக் கச்சேரி, நாவல்கள் மாதர் சங்கம் இவை தானே அவளின் உலகம். கொஞ்சமும் பொறுப்பற்றவள். அதுதான் அவளைத் தலை முழுக வேண்டி வந்தது.

"ஒரே குளிசையில் சீவிக்கிறியள். குளிசையும் கையுமா இருந்தா குடி முழுகிப் போகும்" ஒரே புறுபுறுப்பாள். ஏளனம் ஒரு நாள் பிரளயமாயிற்று. அவனும் நின்று பிடித்துப் போராடிவிட்டே பெட்டியோடு வெளியேறினான். அதன்பின்பு ஒரு நாளேனும் அவளின் தெருப்பக்கமே தலை வைத்தும் படுத்திருக்கமாட்டான். சிறிப் பிரியா கொஞ்சநாள் ஊமையாய் இருந்து விட்டுக் கிருபையைக் கைப் பிடித்துக் கொண்டு கனடாவுக்கே ஓடிப்போய் விட்டாள். அவள் அங்கிருந்தும் ஓடி இருக்கலாம். ஒருவேளை உலகம் சுற்றும் வீராங்கனையாக மாறியிருக்கவும் கூடும்.

ராசா கிழமைக்கு ஒருதரம் பெரியாஸ்பத்திரியிலே குளிசை எடுப்பான். பெரிய டொக்டருக்கு அவன் நிலவரம் நல்லாப் புரியும். கண்டவுடனே. குளிசைகள் எழுதிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுப்பார். பேரும் மருந்துகளும் மனப்பாடம். சில நாட்களில் கடையிலே குளிசை வாங்குவான். கை சுருங்கினால் கடனுக்குக் கேட்டு வாங்குவான். அடுத்த வாரம் அதைக் கொடுத்துத் தீர்த்து விடுவான். ஒரு குளிசையும் இல்லாது போனால் நாலு டிஸ்ப்பிறீனைக் கரைத்துக் குடிப்பான். அப்போதுதான் உசார் பிறக்கும். ஆட்டேன், வலியம், ரெலாசீன் போட்டதும் கண்கள் குருவிச்சம் பூப்போல் மாறும். சந்தோசத்தால் பாய்ந்து நடப்பான். தலையைப் பக்கத்துக்குச் சரித்து – "கண்கள் தீட்டும் காவியம் கண்ணீரில் கரையும் ஓவியம்" பாட்டை மெல்லிய சுருதியில் தன்னை மறந்து பாடிக் கொண்டே போவான். அந்தச் சட்டக் கல்லூரி வாழ்க்கை. அங்கே சந்தித்த சுகி. அவள் கூறிய வார்த்தைகள். அவள் பாடிய பாடல்கள், பூசியெடுத்த வெண்கலக் குத்துவிளக்குப் போல் வாளிப்பான அவள் உடல். காந்தக் கண்கள். அவன் மன வெளியில் பிரகாசிக்கும் குகை ஓவியங்கள் தான்.

இதனாலே அவனைத் 'தண்ணிக்காறன்' என்று சிலர் கதைப்பார்கள். கதைப்பவர் கதைக்கட்டும், அவன் மனம் துப்பரவுதான். இந்த உலகை ஊன்றி நோக்கி மனம் உடைந்தவர்கள் போதை ஏறியவர்கள் போலத்தான் தெரிவர். பஸ்கிடைக்காத போது அவன் தன்னை மறந்து நடந்து போகையில் தன் வீட்டின் குறுக்குப் பாதையைத் தவறவிட்டு வெகுதூரம் கடந்து போய் விடுவான். திடீரெனத் தெரிந்தவர் யாரும் கண்டு கதைத்தால்தான் நினைவுகள் அறுந்து திரும்பி வீடுவந்து சேர்வான்.

சட்டக் கல்லூரியில் படிக்கும் போதுதானே அந்த மாராயம் நடந்தது. அப்போது அவன் என்ன சிமாட். வைற் சூட் அணிந்தால் எவரும் கூர்ந்து பார்க்கவே செய்வார்கள். வெளிக்கிட்டு எங்கேயும் போய் வந்தால் தாய் இரும்பு போடுவா. கண்ணூறுபடும் என்பது அவட எண்ணம். உப்பும் காய்ந்த மிளகாயும், சந்தி மண்ணும் எடுத்து அவன் தலையை மூணு தரம் சுற்றி எரியும் அடுப்புக்குள் போடுவா. அது கொஞ்சமும் மணக்காது "எண்ட மகண்ட நடைக்கும் இங்கிலுசிக்கும் கண்படாதா? பின்ன... எல்லார்ர கண்ணும் ஒரு கண்ணா?" தாய் நியாயம் பேசுவா. அம்மாவுக்கும் அவனோட உயிர். இப்ப அதெல்லாம் குறைந்து போனாலும் பாசம் அவன் மீது தான். தாயிடம் அவனைப் பற்றிக் கேட்டுப் பார்க்க வேணும். பகல் முற்றும் அவன் புகழைச் சொல்லிக் கொண்டே இருப்பாவு.

அவனுடைய ஆங்கில உச்சரிப்பை வியக்காதவரே இல்லை. அது எதையும் துருவி ஆராயும் பருவம். எப்போதும் முன்னணியில் இருக்கத்தானே முனைப்பு. அந்தப் பேச்சுப் போட்டியிலும் அவன் தானே முதற் பரிசைத் தட்டினான். போட்டிக்கு வந்த சுகிர்தராணி, மனோகர், பீற்றர், பெரேரா சம்சுதீன், கந்தையா எல்லோருமே மண் கௌவி விட்டார்கள். அவனுடைய கணீரென்ற குரலும், அழகான உச்சரிப்பும் கருத்துக்கமைய நிறுத்துகையும், முகபாவங்களும், எல்லாரையும் மயக்கியே விட்டன. வேறு நாட்டிலென்றால் 'சில்வர் டாங்க்' பட்டம் அவனுக்குக் கிடைத்திருக்கும். என்ன மிடுக்காய் எடுப்பெடுத்து தலையை நாசூக்காக ஆட்டி ஆங்கில வார்த்தைகளைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொரிந்தான் தெரியுமா? தங்கப் பதக்கத்தைக் கோட்டிலே தலைவர் குத்தும் போது அவனுக்கு எவ்வளவு பெருமிதம்? முகத்தில் என்று மில்லாத மலர்ச்சி. அல்பத்தில் இருக்கும் அவன் படத்தைக் காட்டிக் கண்ணீர் சிந்தி அந்தத் தாயுள்ளம் பூரிக்கும். கண்கள் குளமாகும் அவ்வேளை.

சுகிர்தராணி அவனுடைய ஆங்கிலப் பேச்சிலே மயங்கி "ராஜா.... நீங்கள் இறந்தால் எங்கே அடக்கம் பண்ணுவார்கள்?" என்று ஆரம்பித்தாள். அவன் "ஏன்?" என்று நெருங்கினான். "எங்களின் சமாதிக்குப் பக்கத்திப் பக்கத்திலே எனது சமாதியும் இடம்பெற ஆசை. அனுமதிப்பீர்களா?" ஆங்கிலத்தில் அவள் கேட்டதும் அவன் "யெஸ்" என்றான். அது கல்லூரி எங்கும் பரவி மனோகரருக்கு மட்டும் எரிச்சலை வாரி இறைத்தது. அவன் வகுப்பில் அவளையே பார்த்துக் கொண்டிருப்பான். அவளுடைய புகைப்படத்தை அவன், ஒரு நாள் முற்றும் கேட்க, அவள் நையாண்டி செய்து தட்டிக் கழித்து விட்டாள். மனோகரைப் பற்றி யாவருக்கும் விளங்கும். ராசாவின் வாழ்க்கைக்குக் கொள்ளி வைத்ததும் இவனே தான். இல்லையேல் என்.எம். மோகராஜா என்று அந்நாளில் ராஜாவின் புத்தகங்களிலும் சுவரிலும் எழுதி வைப்பானா?

அதன்பின் நடைபெற்ற தேநீர் விருந்திலே மனோகர் இவனோடு கூடவே இருந்தான். "ராஜாவின் ஆங்கிலப் பேச்சு வெகு கலாதிதான்! எனக்கும் உதவி செய்வீர்களா?" என்றெல்லாம் கேட்டான். அந்தப் பாட்டியில் கலந்து விட்டுத் தன் அறைக்குள் வந்து உடுப்புக் கழற்றியதுதான் தாமதம் "தலை விறைக்கிறது தலை விறைக்கிறது... ஐயோ!" என்று கத்தினான். ஒரே ஒங்காளமும், சத்தியுந்தான். மயங்கியே கிடந்தான். ஊருக்குக் கொண்டுவந்தும் எத்தனை மாதங்கள் படுத்த படுக்கையாகக் கிடந்தான். அதோடு இருவருடச் சட்டப் படிப்பும் போய், சுகியும் தொலைந்து போய்விட்டாள்.

உடல் ஒருவாறு தேறியதும் ஆங்கில ஆசிரிய கலாசாலைக்குப் போய் அதுவும் பாதியிலே நின்று விட்டது. எதிலும் விட்டுக் கொடுக்காத தீரம். போட்டிகள் என்றால் முன்னுக்கே போவான். ஆங்கில மொழியை லாவண்யமாகப் பிரயோகிப்பான். அதுவே அவனைக் குப்புற வீழ்த்தி விட்டது. அங்கும் ஒருவருடத்தோடு பெட்டி கட்டியவனுக்கு ஏ.எல். ஆசிரிய நியமனம் உயிர்கொடுத்தது. ராணியை மறக்க, பிரியாவைக் கட்டாயத் திருமணம். அம்மாவின் ஆசைக்கு அடிபணிந்தான். அவளும் கானல் நீராகவே அமைந்தாள். அவனுக்கு வெலியமும், ஆட்டேனும், ரெலாசீனும் தான் கைகொடுத்தன. அவைகளும் இல்லையேல், அவனும் எப்பவோ ஒருநாள் இல்லாமல் போயிருப்பான்.

இனிக் கட்டுக்களிலிருந்து விடுபட்டு விடுவான். பத்தாம் திகதிதானே பெரியதளை உடைபடுகிறது. தங்கை லதாவை ஒருவனிடம் ஒப்படைத்து விட்டால் அவன் சுதந்திர வீரனாகி விடுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகப்பன் வயது கூடினாலும் நல்லவன். இப்ப மாப்பிள்ளைகளும் இல்லை. அவனையாகுதல் பாருமனே.... கால்கட்டா எவ்வளவு காலத்துக்கு இருக்கிறது? என்ற கண்ணும் ஒரு தஞ்சமா?'' என்று தாயும் ஏலாமையால் உத்தரவு போட்டு விட்டாவு. நானும் நாகப்பனைச் சிபார்சு செய்திருந்தேன். அந்த முடிவை அறிய மனம் துடித்தது.

ராசாவின் பிறந்தநாள் ஏற்பாடுகளை விசாரிப்பதுபோல் நாகப்பன் சொன்ன முடிவை அறியப் போயிருந்தேன். மாலைக் கருக்கல் கவிந்தது.

என்னைக் கண்டதும் ராசா வாசலுக்கே வந்து விட்டான். ''எப்படி ஒங்கட பிறந்த நாள்? பெரிசாய் இருக்குமோ?'' என்று விசாரித்தேன்.

''இல்லசேர்.... இனிமேல் எனக்குப் பிறந்தநாளே கொண்டாடப் போவதில்லை. என்ர தங்கை லதாவுக்குத்தான் நாளை மறுதினம் பிறந்தநாள். அதைத்தான் கொண்டாட உத்தேசம். நீங்க கட்டாயம் வரனும்'' என்றான்.

''நாகப்பன் என்ன சொன்னான்? நீங்க நேற்று ஒன்றும் சொல்லலலையே?''
''ஏன் அதைக் கேக்கிறீங்க? அவனுக்கு முணு லட்சம் சீதனம் தரட்டாம். அதோட... வீடு வளவு... தளபாடங்கள். நகை பத்துப் பவுண் வேணுமாம். அவனுக்கும் ஒரு தங்கை இருக்குதாம். அவளைக் காரணம் காட்டிப் பெண் பெத்தவனும் இன்னும் சுருட்டவே பார்க்கிறான்....''

''அவண்ட தங்கைக்கு எத்தின வயதிருக்கும்?''

''லதாவுக்கு இரண்டு வயதுக்கு மூத்தவளாம். எனக்கு இப்பதான் உலகம் புரியுது...'' என்றான்

ராசாவுக்கு அன்று சட்டக்கல்லூரியில் விறைத்த தலை இன்று எனக்கு விறைக்கத் தொடங்கியது. 'ராசா நான் வருகிறேன்' என்று எனது வீடு நோக்கி பைசிக்கிளைத் தள்ளினேன்.

நீண்ட நாளாக ஒளியின்றிக் கிடந்த வீதிகள் எங்கும் வெளிச்சம் பரவியது. நல்ல வெளிச்சம்.

நன்றி :
வீரகேசரி 12.11.1989



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரவலர் புத்தகப் பூங்கா
# நிர்வாகக் குழு

1. புரவலர் அல்ஹாஜ் ஹாசிம் உமர் (ஸ்தாபகர்)
2. கலைஞர் கலைச்செல்வன் (செயலாளர்)
3. சமூகஜோதி. எம். ஏ. றபீக்
4. திரு. அந்தனி ஜீவா
5. திருமதி ஞானம் ஞானசேகரன்

# புரவலர் புத்தகப் பூங்கா வெளியிட்ட நூல்கள்

| இல. | நூல்கள் | ஆசிரியர் | வெளியீடு |
|---|---|---|---|
| 1. | பீலிக்கரை (சிறுகதைகள்) | பிரமிளா செல்வராஜா | ஆகஸ்ட் 2007 |
| 2. | கனலாய் எரிகிறது (கவிதைகள்) | கே.எம்.ஏ. அஸீஸ் | செப்டம்பர் 2007 |
| 3. | சலங்கையின் நாதம் (வரலாற்று நாடகம்) | கலைஞர் எம். உதயகுமார் | ஒக்டோபர் 2007 |
| 4. | தேன்கூடு (பாலர் கவிதைகள்) | கல்லொளுவை பாரிஸ் | நவம்பர் 2007 |
| 5. | மைவிழிப் பார்வையில் (மாதர் கட்டுரைகள்) | ஷாமலா ஸ்டீவன் | டிசம்பர் 2008 |
| 6. | நான் நீ கடவுள் (உருவகக் கதைகள்) | கலை அமுதன் எம்.ஸீ.எம். இக்பால் | ஜனவரி 2008 |
| 7. | ஒரு மணல் வீடும் சில எருமை மாடுகளும் (சிறுகதைகள்) | சிவனு மனோஹரன் | பெப்ரவரி 2008 |
| 8. | ரயிலுக்கு நேரமாச்சு (சிறுகதைகள்) | கவிப்பிரியா நிஷா | மார்ச் 2008 |
| 9. | விழிகள் சுவாசிக்கும் இரவுகள் (சிறுகதைகள்) | ஏ. எம். எம். ஜாபீர் | ஏப்ரல் 2008 |
| 10. | தடயங்கள் (கவிதைகள்) | மருதூர் ஜமால்தீன் | மே 2008 |
| 11. | புதிய கதவுகள் (சிறுகதைகள்) | மாரி. மகேந்திரன் | யூன் 2008 |
| 12. | ஒரு கலைஞனின் கதை (நாடகம்) | கலைஞர் கலைச்செல்வன் | யூலை 2008 |
| 13. | பச்சைப்பாவாடை (சிறுகதை) | எச்.ஐ.எம். தாஹிர் | ஜனவரி 2009 |
| 14. | இளமை என்னும் பூங்காற்று (சிறுகதைகள்) | ஷமீலா இஸ்மத் | பெப்ரவரி 2009 |
| 15. | இதயம் உள்ள பாரதி (கவிதைகள்) | பொன். பூபாலன் | மார்ச் 2009 |
| 16. | மேகவாழ்வு (கவிதைகள்) | வெளிமடை ரபீக் | ஏப்ரல் 2009 |
| 17. | வேர்களற்ற மனிதர்கள் (கவிதைகள்) | மருதநிலா நியாஸ் | மே 2009 |
| 18. | வெற்றிலை நினைவுகள் (கவிதைகள்) | ஜோ. ஜெஸ்ரின் | யூன் 2009 |
| 19. | விடுமுறைக்கு விடுமுறை (சிறுகதைகள்) | பவானி தேவதாஸ் | யூலை 2009 |
| 20. | மேட்டு நிலம் (சிறுகதைகள்) | மு. சடாட்சரன் | ஆகஸ்ட் 2009 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கவிஞர்
## எழுத்தாளர்
## மு.சடாட்சரன்

முருகேசு சடாட்சரன் (1940) கல்முனையை பிறப்பிடமாகக் கொண்டவர். மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி ஆசிரியராகவும், அதிபராகவும் பணியாற்றி இறுதியில் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் சேவையாற்றியவர். நீலாவணனின் கவிதா மண்டலஞ் சார்ந்த முக்கியமான கவிஞர்களுள் ஒருவராகி தொடர்ந்து இன்றுவரை எழுதி வருபவர்.

இவரது கவிதைகள் ஈழத்தின் பிரபலமான பத்திரிகைகள் சஞ்சிகைகளில் மட்டுமன்றி தமிழகச் சஞ்சிகைகளான கணையாழி, கலைமகள் ஆகியவற்றிலும் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பலராலும் சிறந்த கவிஞராகவே இவர் அறியப்பட்டிருப்பினும் கவிதை தவிர, சிறுகதை உருவகக்கதை, கட்டுரை எனப் பல துறைகளிலும் ஈடுபட்டு வந்துள்ளார்.

நீலாவணன் தலைமையில் 1961இல் உருவாக்கப்பட்ட கல்முனை எழுத்தாளர் சங்கத்தில் முக்கிய உறுப்பினராகச் செயற்பட்டு வந்த இவரது முதற் சிறுகதையான பிடிப்பு கல்முனை தமிழ் இலக்கியக் கழகத்தால் வெளியிட்ட **பாடும்மீன்** சஞ்சிகையிலே பிரசுரமாயிற்று. தொடர்ந்து அவர் எழுதிய சிறுகதைகள் எண்ணிக்கை அளவிலே குறைந்தவை எனினும் இலக்கியத் தரத்தில் சிறந்தவையே என்பதை இத்தொகுப்பு வெளிப்படுத்துகின்றது. புரவலர் புத்தகப் பூங்காவின் வெளியீடாக வரும் **மேட்டு நிலம்** எனும் இச் சிறுகதைத் தொகுதி சடாட்சரனின் எழுத்தாற்றலுக்கு ஓர் அங்கீகாரம் எனில் அது மிகையன்று.

- **கலாநிதி செ.யோகராசா**

Mettu Nilam
ISBN 978-955-095-03-9
978955095039

PRINTED BY UNIE ARTS (PVT) LTD. 48B, BLOEMENDHAL ROAD, COLOMBO 13. TEL: 2330195

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org